அறைவு 03 இயம் 24 January 03 - 09, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

AAT @ VBC

HELLO MOBILE WORLD





122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# சம்பூரில் குடியேற்றம்!!!

சம்பூர் பாதுகாப்பு வலயத்தைத் தவிர்ந்த ஏனைய அடையாளம் காணப்பட்ட சில இடங்களில் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கை திடீரென ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நேற்று மதியத்தின் பின்னர் இடைத்தங்கல் முகாம்களுக்கு வருகை தந்த அரச அதிகாரிகள், மதத் தலைவரொருவர் மற்றும் மூதூர் பிரதேச படைப் பிரிவின் உயரதிகாரி ஆகியோர் ஆண்களை மட்டும் சம்பூரில் அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களைக் காட்டியுள்ளனர்.

அவ்வாறு அடையாளம் காட்டப்பட்ட இடங்களாக சம்பூர் முதலாம், இரண்டாம், மூன்றாம் வட்டாரங்-

17

## ஜனவரி - 08
## தமிழர்கள் அனைவரும் வாக்களியுங்கள்




## கிழக்கைத் துண்டாடும் திட்டம்
### "இருந்தது" - சுசில் "இல்லை"-அலி

கிழக்கில் மேலும் பல நிர்வாக அலகுகளை உருவாக்கி அதனைத் துண்டாடும் திட்டமொன்று இருந்ததாக அரச அமைச்சரொருவர் பத்திரிகைச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்களில் ஒருவரான சுசில் பிரேம்ஜெயந்த் இவ்விடயம் தொடர்பான ஆவணம் ஒன்றைத் திடீரென கடந்த 28ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வெளிப்படுத்தினார்.

அவ் அடிப்படை ஆவணமானது கிழக்கு மாகாணத்தில் கல்முனை, சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பிரதேச-ங்களில் புதிய பிரதேசச்

17

அரசு அதிரடி!!!

## பாதுகாப்பு - நீக்கம் வாகனங்கள் மாயம்

கிழக்கு மாகாணசபையிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காவல்துறைப் பாதுகாப்பு அதிரடியாக நீக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர் ஒருவர் இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பைப் பெறத் தகுதியுடையவராக இருப்பதுடன் மாகாணசபையின் அரசியல் கட்சிக் குழுத்தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு மேலதிகப்

17

## வெல்வது என்பது கொல்வது என்றாகிப்போன தேசத்தில் பிடுங்கியெறிபட்ட எம் கண்மணிகளின் 9ம் ஆண்டு நினைவு



2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 02ம் திகதி மாலை திருகோணமலைக் கடற்கரையில் கொல்லப்பட்ட ஐந்து இந்துக்கல்லூரி மாணவர்கள்

## உயர்தரத்தில் தேசிய சாதனைகள்



சிவகுமாரன் இந்துஜன்



குருகுலசிங்கம் தர்சனன்

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு சாதனைகள் நிலை நாட்டப்பட்டுள்ளன.

அவை முறையே செல்வன்.சிவகுமாரன் இந்துஜன் மற்றும் செல்வன்.குருகுலசிங்கம் தர்சனன் ஆகியோரால் நிலைநாட்டப்பட்டுள்ளன.

சாதனையாளர்களின் பேட்டி 3ம் பக்கத்தில்

AFTER O/L....
English for You
E4U
VEAL BUSINESS COLLEGE (VBC)
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738
4 MONTHS COURSE

Sugirtha Stationers



காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்

- விருப்பு வெறுப்புக்களுக்கு [illegible] உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# ஆதரவின் பின்னுள்ள வரலாற்றுக் கடமை!!!

**தமிழ்த்** தேசியக் கூட்டமைப்பு இறுதியாகத் தனது வெளிப்படையான ஆதரவு யாருக்கு எனத் தெரிவித்துள்ளது.

இவ்வறிப்பானது தமிழர்களின் தலைமைத்துவம் தமிழர்களைச் "சிந்தித்து வாக்களிக்க வேண்டும்" என்ற நட்டாற்றில் விட்டு விடும். பேச்சுவன்மைக்கு மட்டும் பொருந்தக்கூடிய. வார்த்தைஜாலத்தைத் தவிர்த்து மிகக் கடினமான நிலையிலும் தீர்மானமொன்றை எடுக்கும் ஆற்றல் தம்மிடம் உள்ளது என்பதை மீள நிருபித்து இருக்கின்றது.

தேசநலனை முன்னிறுத்தி இத் தீர்மானம் எடுக்கப் பட்டதாகவே கூட்டமைப்பு தன் அறிவிப்பில் தெளிவாகத் தெளிவுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இம் முடிவானது தனியே அதன் உயர்பீட கட்சி அங்கத்தவர்களின் எண்ணங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்டதொன்றல்ல என்பது அனைவருக்கும் தெரிந்ததே!

தற்போதுள்ள அரசியல் நிலைமை. மேற்குலகச் சர்வதேசத்தின் அனுகுமுறை. ஆசியாவில் வளர்ந்துவரும் சீனாவின் சர்வாதிகாரப் போக்கு. இந்திய நாட்டு நலன் என்பனவும் அவை சார்ந்த சாந்தப்படுத்தல்களும் அந்தத் தீர்மானத்தின் பின்னணியினுள் உறைந்து கிடக்கின்றன.

சரி! இவற்றை மட்டும் நம்பியா இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது? இல்லை. ஈழத்தமிழர்களின் மீதான நம்பிக்கையை வைத்தே இத் தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது.

தனித்தனி முரண்பாடுகளுக்கு அப்பால் தமிழர்கள் அரசியலில் ஒன்றித்துப் பயணிக்க வேண்டிய தேவையை இத் தீர்மானம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

தெற்கிலுள்ள வாக்காளப் பெருமக்களின் வாக்குகள் பிளவடைந்துள்ள நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ்-தமிழ்பேசும் வாக்காளர்களின் வாக்குகளே சனாதிபதியைத் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவையாக மாறியுள்ளன.

இந்நிலையில் அதனைச் சிதைவடையச் செய்வதன் மூலம் மீண்டும் சனாதிபதியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக தெற்கு மற்றும் மேற்கு வாக்குகளை உருவாக்கி விடும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு சிதைக்கும் முயற்சிக்கு மிகவும் ஒத்தாசை செய்யும் தீர்மானங்களில் ஒன்றாக அமையப் போவது தேர்தலைப் புறக்கணித்தல் என்னும் முடிவு.

வாக்கென்பது தனிமனிதனது உரிமை என்பதை மறந்து நாங்கள் வாக்களிப்பில் இருந்து விலக ஆண்டாண்டு காலமாக முயன்று வந்துள்ளோம். அதன் பயனாகவே ஒட்டுமொத்தத் தனிமனித உரிமைகளையும் பறித்த போதும் நாங்கள் அமைதியாய் இருந்த காலங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

கடந்த இரண்டு சனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்களின் ஆதரவு தோல்வியடைந்தமைக்கான காரணங்களுள் ஒட்டுமொத்தத் தமிழர்களும் ஒரே திசையில் பயணிக்க மறந்தமையும் ஓர் காரணமாக அமைந்திருந்தது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

எனினும் கடந்த தேர்தல்கள் இரண்டிலும் அடிமட்டச் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளை தமிழர்களின் ஆதரவே மற்றைய தரப்பிற்குப் பெற்றுக்கொடுத்ததென்பதும். அதற்கேற்பத் தனித் தேசம் என்ற கோசம் மேற்கிலும் தெற்கிலும் எழுப்பப்பட்டே அவ்வாக்குகள் பெறப்பட்டன என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

எனவே இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு என்பது வெறும் வார்த்தைகளில் அல்லாமல் அதற்கொரு அர்த்தம் உருவாக்கப்பட வேண்டுமாயின் தமிழர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். தற்போது யாருக்கு வாக்களித்தாலும் அதன் பால் தமிழருக்குப் பயன்கள் உள்ளதா? என்பதனை நிச்சமற்ற எதிர்காலமொன்றே தீமானிக்கவுள்ளது. எதிர்காலத்தில் தமிழர்களுக்கு நல்லது நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் அவ்வாறு நடக்காது என்ற எதிர்ப்பு நிலைச் சிந்தனையைத் தவிர்த்து நடப்பதற்கான வாயப்பபுக்கள் உருவாகலாம் என்ற நன்நிலைச் சிந்தனையின் பால் தமிழர்களின் வாக்குகள் இடப்பட வேண்டும்.

உணர்வு ரீதியான கருத்தியல்களைப் புறந்தள்ளித் தமிழர்கள் வாக்களிக்க வேண்டியது வரலாற்றுக் கடமையாகியுள்ளது.

இவ்வாறு வாக்களிக்கும் போதே தமிழர்கள் விருப்பியோ அல்லது வழிவழியாகவோ ஏற்றுக்கொண்டுள்ள தலைமைத்துவத்தின் ஆதரவைக் கருத்திற்கொள்ளவேண்டிய தேவையும் அவர்களின் முன் நிற்கின்றது. எதிர்காலமொன்றில் சர்வதேசத்தை நோக்கி தமிழர்களின் தலைமைத்துவம் ஒரு அறைகூவலை விடுக்க வேண்டுமாயின் அவர்களின் பின்னால் அணிதிரளவேண்டிய கட்டாயம் தமிழருக்கு உள்ளது என்பதே உண்மை! -மாயன்-

## திருமலை பத்மநாபா ஈபிஆர்எல்எவ் அமைப்பின் உதவிகள்

திருகோணமலை மாவட்ட பத்மநாபா E.P.R.L.F காரியாலயத்தின் கேட்போர் கூட்டத்தில் கடந்த 29ம் திகதி முச்சக்கர வண்டி ஓட்டுனர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடாத்தப்பட்டது.




மாவட்ட பத்மநாபா E.P.R.L.F அமைப்பாளர் சத்தியன், மூத்த உறுப்பினர் வேலாயுதம் மற்றும் தோழர்கள் முன்னிலையில் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் முன்னிலையில் அமைப்பாளர் சத்தியன் பேசுகையில் "எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் மாற்றம் வேண்டும் என்றால் மக்கள் மைத்திரிக்கு வாக்களிக்க வேண்டும்" என்று கேட்டு கொண்டதுடன் அதற்கான காரணத்தையும் எடுத்துரைத்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல் 18வது திருத்த சட்டம் அகற்றப்பட வேண்டும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான மாகாணசபைக்கு 13வது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், ஊழலற்ற பாராபட்சமில்லாத மக்களுக்கு நெருக்கமான நிர்வாகம் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் நிலவ நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது அணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரிப்பதுடன் வரும் 8ம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தமிழ் மக்கள் அணைவரும் வாக்களிக்க வேண்டும் என்றார்.




அதை தொடர்ந்து மூத்த ஊறுப்பினர் வேலாயுதம் அவர்கள் பாடசாலை பிள்ளைகளுக்கான அப்பியாச கொப்பிகள் கொடுப்பதை தொடக்கி வைத்தார்

## கிண்ணியாவில் மைத்திரி

(அச்சுதன், றபாய்தீன்பாபு ஏ.லத்தீப்)

ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிரிசேனவை ஆதரித்து கிண்ணியா கிராமக்கோட்டு வெட்டை நகரசபை மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்ற மாபெரும் பிரச்சாரக்கூட்டத்தில் மக்கள் அலைபோல் திரண்டிருந்தனர்.

இக்கூட்டம் முன்னால் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.மஹ்ருப் தலைமையில் நடைபெற்றது.அ.இ.மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதுர்தீன்,ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளர் தயாகமகே கிழக்கு மாகாண சபை ஐ.தே.க.உறுப்பினர் இம்றான் மஹ்ருப்,கிழக்கு மாகாண சபை மு.கா. உறுப்பினர் சட்டத்தரனி ஏ.ஜே.எம்.லாகிர், கிண்ணியா நகரசபைத்தலைவர் டாக்டர் ஹில்மி மஹ்ருப், மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.



## மூதூரில் 50,000 பேருக்கு வெள்ளப் பாதிப்பு

அடை மழை மற்றும் வெள்ளப் பெருக்கினால் மூதூர் பிரதேசத்தில் 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மொத்தம் 14,128 குடும்பங்களைச் சேர்ந்த 48,435 பேர் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் 2,062 குடும்பங்களைச் சேர்ந்த 6,999 பேர் வெள்ளப் பெருக்கினால் இடம் பெயர்ந்துள்ளனர். வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் 1,731 குடும்பங்களைச் சேர்ந்த 5,797 பேர் 14 இடைத்தங்கல் முகாம்களிலும் ·331 குடும்பங்களைச் சேர்ந்த 1,202 பேர் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை 12,066 குடும்பங்களைச் சேர்ந்த 41,436 பேர்கள் அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டபோதும் சொந்த இடங்களிலேயே இருந்து வருகின்றனர். வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பில் மூதூர் மஜ்லிஸ்"ல் ஸூறா அக்கறையுடன் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.



## நகரசபைத் தலைவரின் உதவி

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட முள்ளிப்-பொத்தானை பகுதியில் அமைந்துள்ள விக்னேஸ்-வரா வித்தியாலய மாணவ, மாணவிகளுக்கு திருகோணமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜா 01.01.2015 வியாழக்கிழமை காலை தனது பணத்தில் கற்றல் உபகரணங்களை அங்குள்ள அறநெறி பாடசாலையின் அதிபர் ஜெயசீலன் அவர்களின் முன்னிலையில் வழங்கினார். (அச்சுதன்)

## பாட்லீட் - ஓரியன்ட் நிறுவனங்கள் உதவி

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவடிச்சேனை கிராம மக்களுக்கு பாட்லீற் நிதி நிறுவனமும், ஓரியன்ற் நிதி நிறுவனமும் இணைந்து உலர் உணவுப் பொருட்களை இன்று 01.01.2015 வழங்கி வைத்தனர்.பாடலிற் நிதி நிறுவனத்தின் திருகோணமலை கிளை முகாமையாயளர் சுப்பிரமணியம் ஜெயசங்கர் இவற்றினை மாவடிச்செகை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வைத்து வழங்கி வைத்தார்.

(கதிரவன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சாதனையாளர்களுடன் ஓர் கலந்துரையாடல்"

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் புள்ளிகளின் பிரகாரம் திருகோண மலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த உவர்மலை விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த செல்வன்.சிவகுமாரன் இந்துஜன் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும், இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன்.குருகுலசிங்கம் தர்சனன் தேசிய மட்டத்தில் பதினோராவது இடத்தையும் பெற்று திருமலை மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அவர்கள் இருவருடனும் நடாத்தப்பட்ட நேரடி கலந்துரையாடலின் குறிப்புக்கள் வருமாறு.

உவர்மலை விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த செல்வன்.சிவகுமாரன் இந்துஜன் அவர்கள் விஞ்ஞான பிரிவில் 3A பெற்று சராசரி z புள்ளியாக 2.8486 ஐ பெற்றுள்ளார். இவர் கபொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் 8A, B எனும் பெறுபேற்றுடன் திருகோணமலையில் முதலிடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தை திரு.செல்வேந்திரன் சிவகுமாரன் ஓர் ஆங்கில ஆசிரியராகும். இவரது தாயார் திருமதி.சி.பிரபாளினி, உப்புவெளி பிரதேச செயலகப்பிரிவு நூலகத்தின் உதவி நூலகரும் ஆவார்.

**01. இந்த சாதனை குறித்த உங்கள் மனநிலை என்ன?**

3A கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தேன். தேசிய மட்டத்தில் மூன்றாது இடம் என்பது மிகுந்த மகிழ்ச்சி

**02. பரீட்சை எழுதியவுடன் சாதிக்கமுடியும் என்ற எண்ணம் இருந்ததா?**

திருகோணமலையில் முதலிடம் கிடைக்குமென்று தெரியும். என்னைப் பொறுத்தளவில் இன்னும் செய்திருக்க வேண்டும். பரீட்சை செய்தமை தொடர்பாக மிகையான திருப்தி ஏற்படவில்லை.

**03. யார் உங்களுக்கு இதை சாதிக்கப் பக்கபலமாக இருந்தது?**

பெற்றோர், நண்பர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும்

**04. உங்களது பாடசாலையின் பின்னணி என்ன?**

அனைத்து ஆசிரியர்களும் ஊக்கப்படுத்தினார்கள். படிப்பிக்காதவர்கள் கூட விசாரித்து ஊக்கப்படுத்துவார்கள்.

**05.பிரத்தியேக வகுப்புக்களுக்கு சென்றீர்களா?**

பிரத்தியேக வகுப்புக்கு என்று physics, chemistry க்கு மட்டுமே சென்றேன். அதை தவிர அனைத்து ஆசிரிகளிடமும் சென்று என் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

**06. 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பெறுபேறு என்ன?**

152 புள்ளி, எந்தவொரு பிரத்தியேக வகுப்புக்கும் செல்லவில்லை.

**07. பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் உங்கள் புள்ளிகள்?**

3A தான். திருகோணமலையில் முதலாம் இடத்தையும், கிழக்கு மாகாணத்தில் 2ம் இடத்தையும் பெற்றேன்.

**08. சிறு வயதுக் கனவா? அல்லது எதிர்பார்க்காமல் நிகழ்ந்ததா?**

அப்படியெல்லாம் திட்டமிட்டு படிக்கவில்லை. சாதாரண தரத்தில் முதலிடம் வந்ததால் அதையே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற அவா என்னுள் இருந்தது.

**09. மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?**

நிறைய வகுப்புக்களுக்கு செல்வதைத் தவிர்த்து விளங்கிப் படியுங்கள்.

எனக்கு கற்பித்த கே.கிருஷ்ணராஜா, கே.ஜெயபாலினி, என்.ஐ.சின்னையா, பி.நித்தியானந்தன், எஸ்.சுதாகரன், என்.ஜெகன்மோகன் ஆசிரியர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி.

முக்கியமாக தங்களுக்கு ஏதேனும் ஒரு tute கிடைத்தால் முதலில் எனக்குத் தரும் எனது நண்பர்கள் சஜித்தா, சஞ்சித் மற்றும் சுஜானன் ஆகியோருக்கும் எனது நன்றி.

ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன்.குருகுலசிங்கம் தர்சனன் கணித பிரிவில் 3A பெற்று சராசரி z புள்ளியாக 2.8424 ஐ பெற்றுள்ளார். இவர் கபொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் 7A, 2C எனும் பெறுபேற்றைப் பெற்றவர்.

இவரது தந்தை திரு.மார்கண்டு குருகுலசிங்கம் ஓர் ஓய்வு பெற்ற புவியியல் ஆசிரியராகும். இவரது தாயார் திருமதி.கு.லலிதலோஜினி, ஓய்வு பெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியரும் ஆவார்.

**01. இந்த சாதனை குறித்த உங்கள் மனநிலை என்ன?**

3A கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் தேசியத்தில் பதினோராவது இடம் என்பது மிகுந்த மகிழ்ச்சி.

**02. பரீட்சை எழுதியவுடன் சாதிக்கமுடியும் என்ற எண்ணம் இருந்ததா?**

திருகோணமலையில் முதலிடம் கிடைக்குமென்று தெரியும். ஆனால் தரவரிசை என்னில் மட்டும் தங்கியில்லை. ஆதலால் எதிர்பார்க்கவில்லை.

**03. யார் உங்களுக்கு இதை சாதிக்க பக்கபலமாக இருந்தது?**

பெற்றோர் மற்றும் அனைத்து ஆசிரியர்களும்

**04. உங்கள் பாடசாலையின் பின்னணி என்ன?**

அனைத்து ஆசிரியர்களும் ஊக்கப்படுத்தினார்கள்.

**05.பிரத்தியேக வகுப்புக்களுக்கு சென்றீர்களா?**

பிரத்தியேக வகுப்புக்கு என்று ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு வகுப்பிற்கு மட்டுமே சென்றேன்.

**06. 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பெறுபேறு என்ன?**

140 புள்ளி, எந்தவொரு பிரத்தியேக வகுப்புக்கும் செல்லவில்லை. அதுவும் கட்டைப்பறிச்சான், விபுலானந்தா பாடசாலையில் நான் படிக்கும் போது மு.புஸ்பராணி ஆசிரியை தான் எனக்கு இப்பெறுபேற்றை பெற்றுத் தந்தார்

**07. பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் உங்கள் புள்ளிகள்?**

3A தான். திருகோணமலையில் முதலாம் இடம்

**08. சிறு வயதுக் கனவா? அல்லது எதிர்பார்க்காமல் நிகழ்ந்ததா?**

சிறுவயதுக் கனவு. நிகழ்ந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி

**09. மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?**

நிறைய வகுப்புக்களுக்கு செல்வதைத் தவிர்த்து நீங்களாகவே படியுங்க.

எனக்கு கற்பித்த திரு.சிவயோகீஸ்வரசர்மா, திரு.மரியநாயகம், திரு.சுரேஷ், திரு.தவநாதன், திரு.ஜெயமோகன், A.D.சுதாகரன் ஆசிரியர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி. அத்துடன் எனது நண்பர்களுக்கும் நன்றி.

நான் யுத்தம் காரணமாக இங்கு தரம் 6இல் இடம்பெயர்ந்து வந்து கல்லூரியில் சேர்ந்தேன். வந்து சேர்ந்த பொழுது என்னால் சக மாணவர்களுடன் சகஜமாகப் பழக முடியவில்லை. ஆகையால் கணிதம், தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை தவிர வேறு பாடங்களில் சற்று குறைவு தான். பின் சாதாரண தரப் பரீட்சைக்கு சரியாக இரண்டு கிழமைகள் இருக்கும் போதுதான் படிக்க தொடங்கினேன். இனிப் பொறியியலாளராக ஆகும் வரை கல்வி என் ஓய்வுக்கு வராது.

## தேர்தல் கண்காணிப்பு பயிற்சி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளவர்களுக்கு பட்டிருப்புத்தொகுதியில் பயிற்சி களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் புதன்கிழமை (30.12.2014) நடைபெற்றது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஊடாக இந்த பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. தேர்தல் காலத்தின்போது வாக்களிப்பு நிலையங்களை கண்காணித்தல், வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறும் சம்பவங்களை அவதானிக்கும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச கண்காணிப்பாளர் விஜயம்



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்பு களுக்காக உத்தியோக பூர்வ சர்வதேச கண்காணிப்பாளர் குழுவினர் கடந்த திங்கட்கிழமை இங்கு விஜயம் செய்தனர். மட்டக்களப்புக்கு வருகை இந்தக் குழுவினர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எம்.எம்.கபீர் ஆகியோரைச் சந்தித்து நடைபெற்றுவரும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள், பதிவு செய்யப்பட்டுள்ள தேர்தல் வன்முறைகள், அது தொடர்பான செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினர்.

## கிழக்கு பல்கலை ஆரம்பம்



நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மூடப்பட்டிருந்த கிழக்கு பல்கலைக்கழகம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பதிவாளர் கே.மகேசன் அறிவித்துள்ளார். அனைத்துப்பீட மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகளும் மீள ஆரம்பமாகவுள்ளதாகவும் இதனால், சகல மாணவர்களும் 12ஆம் திகதி பல்கலைக்கழகத்துக்கு சமூகமளிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பதியும் நடவடிக்கை




மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கம் மெய்வல்லுனர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் பதிவு செய்யும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த அறிவித்தலை மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் வ.மோகனக்குமார் விடுத்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள மெய்வல்லுனர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# மட்டக்களப்புச் செய்திகள்

## தோல்வியால் தற்கொலை



புனித சிசிலியா மகளிர் தேசிய பாடசாலையின் மாணவி ஒருவர் வெளியாகிய உயர்தரப்பரீட்சை பெறுபேற்றில் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. கொக்குவில் பிரதேசத்தினை சேர்ந்த எஸ்.அபிநயா என்ற மாணவியே இவ்வாறு தற்கொலை செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிசார் தெரிவித்தனர்.

## தேர்தலை தவிர்க்க வேணாம்


"தேர்தலை நாங்கள் தவிர்க்கமுடியாது. இதில் எமது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்" இவ்வாறு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பட்டிருப்புத்தொகுதி அமைப்பாளர் சாணக்கியன் இராசமாணிக்கத்தின் ஏற்பாட்டில், பட்டிருப்புத்தொகுதியில் அமையவுள்ள 100 வாக்களிப்பு நிலையங்களுக்கு 100 வாக்களிப்பு முகவர்களுக்கான நியமனங்கள் வழங்கும் கூட்டம் 30.12.2014 களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# "நானொரு தெரிந்த பேய்"

## -யாழ்ப்பாணத்தில் சனாதிபதி-



பொது எதிரணி வேட்பாளர் மைத்திபால சிறிசேனவை உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும். அவர் ஒரு தடவைகூட இந்தப் பகுதிக்கு வரவில்லை. ஆனால் நான் எனது இளவயதிலிருந்தே உங்களைத் தெரிந்து வைத்திருக்கிறேன். உங்கள் இடத்துக்கு வந்து சென்றிருக்கிறேன். எனவே தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசை ஆதரியுங்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ச தெரிவித்தார். 1970ம் ஆண்டு நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது யாழ்ப்பாணம் வந்தேன். அதாவது 11 தடவைகள் நான் யாழ்ப்பாணம் வந்திருக்கிறேன். உங்களுக்கு என்னை நன்றாகத் தெரியும். எனவே தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசை ஆதரியுங்கள். - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

# கட்டுப்பாட்டை மீறினால் சட்ட நடவடிக்கை



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மீறுகின்றவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக அவர்கள் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டு அவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் வைரமுத்து தியாகராசா, யாழ் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் திருமதி நிரஞ்சன் கிருசாந்தி, பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் நடராஜா நிரஞ்சன், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கதிரேசு சுபாஸ்கரன், இராசையா ராஜசேகரம், பாக்கிய நாதன் பார்த்தீபன் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாவியுள்ளனர்.

இவர்களுக்கு எதிராகவே இந் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இதேவேளை அனந்தி சசிதரன் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்பான முடிவில் அசூசையடைந்து பகிரங்கப் பேட்டிகள் வழங்கிவருவதையடுத்து அவருக்கு மாவை தொலைபேசியூடாக அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# த.தே.கூவின் முடிவு முரணான பலனையே தரும் – சங்கரி



விளைவுகளை பற்றி சிந்திக்காது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் தலையிடாமல் தமிழ் மக்களை சுயவிருப்பத்துக்கமைய வாக்களிக்க அனுமதிக்குமாறு நான் விடுத்த வேண்டுகோளுக்கு முரணாக, ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறி-சேனாவை ஆதரிப்பதாக அறிவித்து உள்ளமை துரதிஸ்டமானதாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஆனந்த சங்கரியால் புதன்கிழமை (31) அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"ஜனாதிபதித் தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்திலிருந்து மூன்று வாரங்கள் கழித்தே தமிழத் தேசியக் கூட்டமைப்பு எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்தது.

வைத்திய பரிசோதனைக்காக இந்தியாவுக்கு சென்றிருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடு திரும்பும்வரை காத்திருப்பதாக காரணம் கூறினார்கள். வைத்திய பரிசோதனைக்காக மூன்று வாரங்கள் தேவையில்லை என்பதோடு, அவருடன் தொடர்பு கொண்டு அவரை வரவழைத்து அல்லது அவரது கருத்தை தொலைபேசி மூலம் கேட்டு செயற்பட்டிருக்கலாம்.

பல சபைகளின் உறுப்பினர்களுடனும், முக்கிய பிரமுகர்களுடனும் கலந்தாலோசித்ததாக கூறியது ஒரு பொருத்தமான காரணம் அல்ல. நியமனத்தாக்கல் தினம் தொடக்கம் இன்றுவரை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய அறிக்கைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேட்பாளர் யார் என்பதை அடையாளப்படுத்தியதோடு, 5 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களித்தும்விட்டார்கள். மக்களை ஏமாற்றுவது ஓரளவோடு இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# "யாருடனும் ஒப்பந்தங்கள் செய்யவில்லை"

கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் எவ்வித இரகசிய ஒப்பந்தங்களையும் தாம் செய்துகொள்ளவில்லை என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்ரிபால சிறிசேன குறிப்பிடுகின்றார்.



யாழ் நல்லூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இந்த கருத்தினை கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட கட்சிகள் மற்றும் அமைப்புகள் என 49 தரப்புகள் தம்முடன் இணைந்துகொண்டுள்ளதாக இதன்போது ஜனாதிபதி வேட்பாளர் மைத்ரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

# வயதானவர்களின் வைப்புக்களுக்கு வட்டி வீதம் உயர்வு

வயதானவர்களின் வைப்புக்களுக்கு வட்டி வீதத்தை உயர்த்திக் கொடுக்கும் அனுமதியை மத்திய வங்கி நிதிக்கம்பனிகளுக்கு வழங்கியுள்ளது.

இதன் படி 55 வயதிற்கு மேற்பட்டவர்களின் சேமிப்பு வைப்புக்களுக்கு 9.58 வீதம், ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புக்களுக்கு 13.01 வீதம், மூன்று வருடத்திற்குட்பட்டவைக்குப் 14.1வீதம் மற்றும் மூன்று வருடங்களுக்கு மேற்பட்டவைகளுக்கு 15.51 வீதப்படி வட்டி வழங்க மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# வைத்தியரின் குடும்பம் கொலை! காவலாளியைத் தேடும் காவல்துறை

வென்னப்புவ, லுணுவில பகுதியில் கொலை செய்யப்பட்ட நால்வரின் வீட்டுக் காவலாளி காணாமற்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் காவலாளி மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்டிருந்த நிலையில் குழி ஒன்றிலிருந்து நால்வரின் சடலங்கள் நேற்று (01) மீட்கப்பட்டிருந்தன.

கொலை செய்யப்பட்ட பெண் லுணுவில வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த பெண் வைத்தியர் சேவைக்கு சமூகமளிக்காததால், வைத்தியசாலை ஊழியர் ஒருவர் அவரது வீட்டிற்குச் சென்றுள்ளார்.



இதன்போது, வீட்டில் ஒருவரும் இல்லாத நிலையில், வைத்தியசாலையின் ஊழியர் வீட்டைச்சுற்றித் தேடிப்பார்த்தபோது, சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட பெண் வைத்தியரின் கணவர் ஒரு வர்த்தகர் எனவும் தெரியவந்துள்ளது.

பிரேதப் பரிசோதனைகளுக்காக சடலங்கள் சிலாபம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# அதிகாரியை அழைத்தது இந்தியா

இந்திய உளவுப் பிரிவின் பிரதானி இலங்கையிலிருந்து டெல்லிக்கு திருப்பியழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம், ரோ அமைப்பின் பிரதானிக்கு மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறித்த ரோ அதிகாரி, எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் உட்பட அக்கட்சிகளின் கூட்டணியினருடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலே திருப்பியழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரோ உளவுப் பிரிவின் இலங்கை செயற்படுகளுக்கான வரையறைகள் ஏற்கனவே இலங்கை அரசினால் வரையறுக்கப்பட்டிருப்பதாகவும், இதனை மீறிச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் திருப்பியழைக்கப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# "சரத்தின் கதைக்கு கூச்சலிட்ட மக்கள்"



மிகக் குறைந்த மக்களின் அழிவுடனேயே இறுதி யுத்தத்தை முன்னெடு-த்ததாக யாழ்ப்பாணத்தில் கதை விட்ட சரத் பொன் சேகாவின் பேச்சிற்கு மக்கள் கூக்குரலிட்டுத் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பொது எதிரணி வேட்பாளரின் பிரசாரக் கூட்டம் யாழப்பாணத்தில் நடைபெற்ற போது அங்கு இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## வெண்நிறப் பெண்களின் உறுப்புக்களின் விலை 600 டொலர்கள்



இயற்கைக்கு மாறாக வெள்ளைத் தோலுடன் (அல்பைனோ) பிறந்த பெண் ஒருவர் காணமல் போனது குறித்து நான்கு பேரைத் தன்சானியா காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

நாட்டின் வட பகுதியில் உள்ள மவாசா என்ற இடத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை நான்கு வயது சிறுமி ஒருவர் காணமல் போனதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் சிறுமி கடத்தப்பட்டது தொடர்பில் அவருடைய தந்தை உட்பட பலரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன. அவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரா என்பதைக் கண்டறிய காவல்துறை முயன்று வருகிறது.

கடந்த 2000ஆம் ஆண்டு துவக்கத்தில் இருந்து இதுவரை அவ்வகையில் வெள்ளை தோலுடன் பிறந்தவர்கள் 74 பேர் தான்சானியாவில் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஆய்வு கண்டறிந்துள்ளது.

இப்படிக் கொல்லப்படுவோரின் உடல் உறுப்புக்கள் - அதிஷ்ட்டப் பொருட்களாக - 600 டொலர்கள் வரை விலைக்கு விற்கப்படுகின்றன.

## முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகக் காட்டிய இந்தியப் பயிற்சி

அங்கிகள் போன்ற நீண்ட உடைகளையும் வெள்ளைத் தொப்பிகளையும் அணிந்திருக்கும் முஸ்லிம்களை காவல்துறையினர் தடுப்பது போன்ற காட்சிகள் இந்திய குஜராத்தில் சூரத் நகரில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சியின் காணொளியில் காணப்பட்டுள்ளது

நர்மதா மாவட்டத்தில் நடத்தப்பட்ட பயிற்சியின் காணொளியில், போலி பயங்கர-வாதிகள்போல் தோன்றியவர்கள் 'இஸ்லாம் ஜிந்தாபாத்" என கோஷமிடுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றிருக்கின்றன.

முஸ்லிம்களை இவ்வாறாக காண்பிப்பது அட்டூழியமான கண்டனத்திற்குரிய செயல் என்றும் முஸ்லிம் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். அம்மாநில முதல்வர் ஆனந்திபென் படேல் இந்த பயிற்சிகள் தவறானவை என்று ஒப்புக்கொண்டார்.

## வான்தாக்குதலில் தலிபான்கள் பலி

அமெரிக்க ஆளில்லா உளவு விமானங்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு விமானங்கள் பாகிஸ்தானின் தொலைதூர வடமேற்கு எல்லைக் கிராமமொன்றில் வீசிய ஏவகணைகளால் ஆக்ககுறைந்தது 7 தலிபான் தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் அண்மையில் பாகிஸ்தானிய இராணுவமும் தமது இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## - சிறந்த விமானிகள் ஊகம் -
## விமானம் ஆபத்தின்றிக் கடலில் இறக்கப்பட்டிருக்கலாம்

அவசர தரையிறக்கத்தை வேண்டிநின்ற விபத்துக்குள்ளான எயார் ஏசியா விமானத்தின் விமானி கடற்பரப்பில் விமானத்தை விபத்தடையாமலே இறக்கியிருக்கலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தோனேசியாவில் இருந்து புறப்பட்ட ஏர்பஸ் விமானமொன்று சிங்கப்பூருக்குச் செல்லும் வழியில் ஜாவாக் கடற்பரப்பில் காணமற்போனது.

புயலை எதிர்கொண்ட அவ்விமானம் தனது பயணத்தடத்தில் இருந்து விலகிச் சென்றதாக ஆரம்கட்ட தகவலகள் தெரிவித்தன.

அவ்வாறு காணபோன விமானம் விபத்தடைந்திருந்தால் அதற்கான சமிக்ஞைகள் கட்டுப்பாட்டு தளத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கும். ஆனால் அவை எவையும் கிடைக்கவில்லை என செய்திகள் வெளியாகியதைத் தொடர்ந்தே விமானம் சிறந்த விமானியால் விபத்தடையாமல் கடலில் இறக்கப்பட்டுள்ளது என்ற ஊகம் வெளியிடப்பட்டள்ளது.

## கடலில் கப்பல் - பயணிகள் 400 மாலுமி "எஸ்கேப்"

சுமார் 400 குடியேறிகளை ஏற்றியவாறு இத்தாலியின் தென் கிழக்கு கடற்கரையோரமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சரக்கு கப்பல் ஒன்றை மீட்பதற்கான நடவடிக்கையை இத்தாலிய கடலோரக் காவற்படையினர் ஒருங்கிணைத்து வருகின்றனர்.

சியாராலியோன் நாட்டு கொடியுடன் இருக்கும் "எஷஸன்" என பெயரிடப்பட்ட இந்தக் கப்பலில் மாலுமிகள் எவரும் கிடையாது.

காலநிலை மிகவும் மோசமாக இருப்பதாக கூறும் இத்தாலிய வான்படையினர், உலங்குவானூர்தி மூலம் ஆட்களை கப்பலில் இறக்கி நிலைமையினைக் கட்டுப்படுத்த தாம் முயற்சிப்பதாக கூறியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய எல்லைப் படையின் ஒரு அங்கமான ஐஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த படகு ஒன்றும் உதவ முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

மாலுமிகள் எவரும் இல்லாமல், 800 குடியேறிகளுடன் வந்த இன்னுமொரு கப்பல், தெற்கு இத்தாலியில், கலிபோலியில் தரை தட்டிய மறுதினம் இந்தக் கப்பல் குறித்த செய்தி வந்திருக்கிறது.

## "இஸ்லாமிய தேசம் உன்னை என்ன செய்யும் தெரியுமா?"



"தெரியும்....நான் கொல்லப் படுவேன்.."

ஐஎஸ்.ஐஎஸ். இஸ்லாமிய தேசத்துப் பயங்கரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஜோர்தானிய விமானியிடம் வினவப்பட்ட வினாவிற்கான விடையாக அவர் அளித்த விடைகள் இஸ்லாமிய சஞ்சிகையொன்றில் வெளியாகியுள்ளது.

சிரியாவிலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ள ரக்கா பிராந்தியத்திலேயே இந்த வமானம் சுட்டு வீழுத்தப்பட்டதாகப் பயங்கரவாதிகளின் குழு தெரிவித்துள்ளது.

"நான் குறித்த பிரதேசத்தில் தாக்குதலுக்காகப் பறந்துகொண்டிருந்தேன் அப்போது வெப்பநுகர்வு விமான எதிர்ப்பு ஏவுகணையொன்று எனது விமானத்தைத் தாக்கியது. நான் வீழ்த்தப்பட்டேன்" என அவ்விமானியின் பேட்டி தொடர்கின்றது.

அமெரிக்க-மத்திய கிழக்குக் கூட்டுப்படை நடவடிக்கையில் பயங்கரவாத அழிப்பில் ஈடுபட்டிருந்த விமானமே சுட்டு வீழ்த்தப்பட்டதாக பயங்கரவாதிகள் அறிவித்துள்ள போதும் அதனை முழுதாக நிராகரித்துள்ள அமெரிக்க தாக்குதல் மத்திய நிலையம் எந்திரக் கோளாறு காரணமாகவே விமானம் விபத்தடைந்ததாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை இவ்விமானியை மீட்கும் இராச தந்திர நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## பத்தாண்டுக்குப் பின் விடுதலை



சர்ச்சைக்குரிய அமெரிக்கச் சிறையான குவான்டனோமா சிறையில் இருந்து கஸாக்கிஸ்- தானியர்கள் நால்வர் விடுதலையாகி உள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாகக் குற்றச்சாட்டுகள் எவையும் முன்வைக்கப்படாமல் இவர்கள் கியூப குவான்டனோமாச் சிறையினில் வாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் நால்வர் தொடர்பாகவும் பல்வேறு நாடுகளின் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புக்களுடன் விசாரணைகளை முன்னெடுத்த பின்னரே அவர்கள் குற்றச்சாட்டுக்கள் எவையும் முன்வைக்கப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பென்டகன் அறிவித்துள்ளது.

## சனசெரிசலில் பலி 35 சீனர்கள்

சீனாவின் ஷங்காய் நகரில் உள்ள புகழ்பெற்ற பண்ட் ஆற்றங்கரையில் நடைபெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட சூட்ட நெரிசலில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

## மரணதண்டனை உண்டு

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களை மரண-தண்டனைக்கு உட்படுத்துவதை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட சர்வதேச வேண்டுகோளை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது.

பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுதல் மூலம் சர்வதேச சட்டம் மீறப்படவில்லை என பாகிஸ்தான் கூறியுள்ளது.

# புற்றுநோய் வருவது ஏன் ?

உடலின் சில திசுக்கள் ஏனைய திசுக்களைவிட மிக இலகுவாக புற்றுநோய் கிருமிகளால் தாக்கப்பட்டுவிடுகின்றன. அவை ஏனைய பல திசுக்களைவிட பல லட்சக்கணக்கான மடங்கு இலகுவாக புற்றுநோய்க் கிருமிகளின் தாக்குதலுக்கு இலக்காகிவிடுகின்றன. ""இது ஏன்?"" என்பதை அறிய ஆய்வாளர்கள் பல பரிசோதனைகளை நடத்தியுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகளின்படி, புற்றுநோய் வகைகளில் மூன்றில் இரண்டு பங்கானவை காரணம் எதுவும் இன்றி எதேச்சையாகவே தொற்றிவிடுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால், மிகவும் உயிராபத்தை விளைவிக்கக்கூடிய சில வகை புற்றுநோய்கள் புகைத்தல் போன்ற, எமது தீய பழக்க வழக்கங்களாலேயே ஏற்படுகின்றன.

ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள் எப்போதுமே கொடிய வகை புற்றுநோய்களில் இருந்து உங்களை காக்கும் என்று ""கான்ஸர் ரிசேர்ச் யூகே"" என்ற அமைப்பு கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்களற்ற கனவுகள்

மாயன்

நூல் : அவனும் அதுவும்

தொடர்கதை

கடந்தவார தொடர்ச்சி.. ..

ஜெகன் அண்ண சம்பளத்தைப் பற்றிச் சொல்லேல்ல. எவ்வளவு தருவார். எனக்கு ஆக குறைஞ்சது ஆயிரம் ரூபா வேணும். முப்பது நாளும் நான் வேலைக்குப் போனனென்டால் ஒரு நாளுக்கு முப்பத்தஞ்சு ரூவாயாவது ஆக குறைஞ்சு தரோணும் செருப்பு வாங்க. தருவாரோ?".

"டேய் மடையா சாகப்போறியே நடுறோட்டில கனவுகண்டுகொண்டு வாற"
சைக்கிளில் வந்த ஒருவன் ராமை உலகிற்கு இழுத்து வந்தான்.
"சொறி யண்ண"
"இந்த ஒரு இங்கிலிஸ் காணும் செய்யிறதெல்லாம் செய்துபோட்டுத் தப்பிறதுக்கு"
சைக்கிள்காரனுக்கு எதன் மீது கோபம் என்று தெரியவில்லை.
"நான் எப்ப செருப்புக் கனவு கண்டாலும் மற்றவைக்குத்தான் கரச்சல். இனி செருப்புக் கனவு காணக்கூடாது. ஏன் நான் கனவு காணோணும்? அடுத்த மாசம் வாங்கிப் போடுவன். முப்பதுநாள், எண்ணி முப்பது நாள்"
பெருமிதம் முகத்தை முழுவதுமாய்ப் பற்றிக் கொள்ள ராம் மெல்லிய புன்னகையுடன் முதல் நாள் வேலை முடிந்து வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

"ராம்.. உமக்கு மாதம் ஆயிரத்து ஐநூறு றூவா சம்பளம். ஆனா வேலைக்கு வராட்டி ஒரு நாளைக்கு அம்பது ரூவா தரமாட்டன்."

கந்தசாமி கோயில் முருகனுக்கு பாலும் தயிரும் பஞ்சாமிர்தமும் அபிசேகம் செய்யப்படும் போதெல்லாம் முருகனுக்கு எப்படியிருக்கும் என ராம் நினைத்ததுண்டு. அவனுக்கு ஜெகனின் வார்த்தைகள் காதுவழியே புகுந்து அபிசேக முருகனின் அனுபவத்தைத் தந்தது. "முதல் மாசம் முதல் சம்பளத்தில எனக்கு சாண்டில்ஸ்"
ராம் கனவு காணத் தொடங்கிவிட்டான்.

"என்ன சம்பளம் காணாதோ பேசாம இருக்கிறாய்"
"இல்லையண்ண வடிவாக்காணும்"
"ஆனா முதல் மாசம் ரெயினிங், சம்பளம் தரமாட்டன், ஒழுங்கா விசயம் பிடிச்சாப்பிறகுதான் சம்பளம்..... சரியோ"
"ஓம் அண்ண"

"முதல் மாசம் முதல் சம்பளத்தில இல்ல.....ரண்டாம் மாசம் முதல் சம்பளத்தில எனக்கு சாண்டில்ஸ்"
மெல்ல எழும்பிய ஏமாற்ற உணர்வுகளை அடக்கிக் கொள்ள ராம் பெரும் பிரயத்தனப்பட்டான்.

முதலில் வீடியோ படம் எடுக்க லைட் பிடிப்பது, சூம் செட் பண்ணுவது, வெளிச்ச அளவிற்கு ஏற்ப சட்டர் செட் பண்ணுவது... பிலிம் ரோல் லோட் பண்ணுவது, நாட்கள் உருள உருள ராம் படப்பிடிப்பின் ஆரம்ப நுட்பங்களைக் கற்றுக் கொண்டான்.

"ராம் இந்தா கெமரா... முப்பத்தாறு சொட் பிலிம் ரோலை லோட் பண்ணிக்கொண்டு போய் உனக்கு விருப்பமானதெல்லாத்தையும் படம் எடுத்துக்கொண்டு வா பாப்பம்"

நகரம், காடு, குளம், கோயில் எல்லா இடமும் ராம் கமெராவுடன் திரிந்து திரிந்து படங்களை எடுத்தான்.
"என்ன பதினொரு படம் விதம் விதமா சாண்டில்ஸ் போட்ட ஆக்களின்ற காலை படம் பிடிச்சிருக்கிறாய்... எனக்கு விளங்கேல்ல!." ஜெகன் தலையைச் சொறிந்தார்.

"ஏதோ ஒரு வித்தியாசமாத்தான் இருக்கு எண்டாலும் நல்லா எடுத்திருக்கிறாய். கொஞ்சம் இரசனை உணர்வு தனக்குள்ள இருந்தாத்தான் படம் சரியா எடுக்க ஏலும். என்னோடயே இருந்தா போகப்போக மெருகூட்டலாம்.... சரியோ... சரி.. எல்லாம் சரியாப் போகும்."

"என்னயறியாமலே நான் கனவு கண்டிட்டன் போல இருக்கு... சாண்டில்ஸ் போட்ட காலுகள எப்ப நான் படம் எடுத்தனென்டு தெரியாமக் கிடக்கு. ஜெகனண்ணயிக்கு விளங்கேல்ல நான் காலப் படம் எடுக்கேல்ல எண்டு"

சிரித்தபடியே ராம் வீட்டிற்குத் திரும்பினான்.
"என்ன மோனே வேலைக்குப் போகத் தொடங்கினா பிறகு எப்பவும் சிரிச்சுக்கொண்டே வீட்ட வாராய். எனக்கும் சந்தோசமாய்தான் கிடக்கு நீ மூத்தவன் உழைக்கத் தொடங்கீட்டயெண்டால் எங்கட பாரமும் குறைஞ்சு போகும். தம்பியையும் நல்லாப் படிக்க வைப்பாயெல்லோ"
ராமின் மனதை ஏதோ உறுத்திற்று.
"அம்மா இப்பவும் ஒரேயொரு வீட்டுச் சட்டையோட இருக்கிறா... நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கேக்கப் போட்டிருந்தது... அப்பரிட்ட மாத்திக் கட்ட நல்ல சாரம் இல்ல... தம்பிக்கு ரண்டு சேட் காச்சட்டதானிருக்கு. எனக்கும் அதே தான்...".

இரவு அம்மண உடலுடன் அழகான சாண்டில்ஸ் போட்ட பதினொரு பேர் அவனது கனவில் வந்தார்கள்.
"ஆர் ஆக்கள்?... கொஞ்சம் தெரிஞ்ச முகமாக் கிடக்குது... இங்கிதம் தெரியாததுகள்... சட்டையப் போடாமல் சாண்டில்ஸ் போட்டாச் சரியோ... எனக்கு இவயளப் பிடிக்கயில்ல... ஆனா தெரிஞ்ச முகமாக் கிடக்கே...ஆரது.. ஆரது.....
அப்பா மாதிரிக் கிடக்கு.. ஓம் அப்பாவே தான். ஐயோ அவருக்குப் பின்னால அம்மாவும் தம்பியும் அம்மணமா.. சாண்டில்ஸோட.. முரகா.."

கத்தியபடியே ராம் திடுக்கிட்டு எழும்பினான். ஆனால் எவர் மீதும் அவன் முட்டுப்படவேயில்லை. அவன் வேலைக்குப் போவதால் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதால் அவர்கள் எல்லோரும் அவனை விட்டுச் சிறிது தள்ளிப்படுத்திருந்தார்கள்.
"ராம் இந்தாரும் உம்மட சம்பளம் நலலா வேலை செய்யிறீர் தொடர்ந்து இப்பிடியே வேலை செய்தீரெண்டால் சம்பளம் கூடும்."

"அம்மா... அண்ணர் பெரிய பையோட வாரா... .. ர்" பெரிய சத்தமெழுப்பியபடி தம்பி ஓடி வந்தான்

அப்பாவும் அம்மாவும் வாசலில் வந்து நிற்க அதே பெருமிதமும் புன்னகையுடனும் ராம்....
"எல்லாருக்கும் உடுப்பு வாங்கிக் கொண்டந்தனான்.... என்ட முதல் சம்பளத்தில...."
"உடுப்புக்கு எண்ணூறு ரூவா... இந்தாண.. மிச்சம் எழுநூறும்...."

அந்த இரவில் அவன் நிம்மதியாய் தூங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந்திருந்தது. எனினும் அது அவனது காலைக் கடிக்கவில்லை.

முற்றும்

# கோடை மழை

சிறுகதை

சின்ன மணலாற்றின் இரு கரைகளிலும் ஆடவர்கள் வாய்க்கால்களை துப்பரவு செய்து கொண்டு இளைப்பாறினார்கள். ஒரு பக்கம் பசி, பட்டினி மறுபக்கம் தண்ணீர் தாகமும். அந்த ஓரமாக விமல் கைகளில் தண்ணீர் போத்தலுடன் வயல் பக்கமாக நடந்து சென்றான். இளைப்பாறிய மாரிமுத்து தண்ணீர் போத்தலைக் கண்டதும், அவன் சென்ற வயல் முன் இருந்த சிவன் கோவில் வழியாக ஓடினான். டேய் விமல் எம்புட்டு நாளுடா உன்னைக் கண்டு இவளவு நாளும் எங்கடா போனா என வயிற்றின் தாகம் தீர்ப்பதற்காக இவ்வாறு கேட்டான். ஆனால் அதை பொருட்படுத்தாமல் கேட்டும் கேட்காதவாறு விமல் போய்க்கொண்டே இருந்தான். மனம் கலங்கிய மாரிமுத்து சிவனை நோக்கியவாறு அமர்ந்து, இப்படியும் மனிதர்களா? ஆண்டவா என்றவாறு பெருமூச்சு விட்டான். பின் எழுந்து சின்ன மணல் ஆற்றினை நோக்கி நகர்ந்தான். போதும் போதும் என்ற சத்தம் கேட்டு திகைத்துப் போனான் மாரிமுத்து. அங்கே சனம் நெரிசலாக நின்றிருந்தனர். மாதர் சங்க பெண்கள் பிஸ்கட்டும், தேனீரும் ஆடவர்களுக்கு கொடுத்தார்கள். ஆண்டவா பிரார்த்தனை வீண் போகவில்லை என்று எண்ணியவாறு பிஸ்கட்டை உண்டு தேனீரையும் பருகினான். பசியும் தீர்ந்தது. தாகமும் தீர்ந்து போனது. மனதுக்குள் குதூகலத்தோடு ஒரு கையில் மண் வெட்டியினை பிடித்தவாறு சின்னமணல் ஆற்றிலே இறங்கி சல்லுகளை அகற்றினான். அப்போது தான் தன்னைத் தான் சிந்தித்தான் என் அப்புச்சியும் அம்மாவும் படித்திருந்தால் தானே படிப்பின் அருமை புரிந்திருக்கும் என்று மாரிமுத்து புலம்பிக் கொண்டு அப்பா அம்மா செய்த தவறுகள் தான் பிள்ளைகளை சென்றடைகிறது என்றெண்ணிவாறு சல்லுகளை இரு கைகளாலும் அள்ளி வெளியே வீசினான்.

மழை பெய்யும் வேளாண்மையும் நல்ல விளைச்சலை பெற்றுத் தரும் என்றவாறு எதிர்பார்த்த மாரிமுத்துவைப் போல எத்தனையோ குடும்பங்களடா மண்ணிலே இருக்கின்றன. கோடை மழையும் பெய்யவில்லை.

வாய்க்கால்களை நம்பித்தான் மாரிமுத்து வயல் பக்கம் தினமும் வருகிறான். கடைசியில் வாய்க்கால்களும் அவனை ஏமாற்றின. ஓர் இரு நாட்களுக்கு பிறகு வயலுக்கு வந்தான் அப்போதும் வாய்க்கால்களில் தண்ணீர் இல்லை. அவன் மட்டுமல்ல அந்த கிராமமே கவலையில் மூழ்கியது. விவசாயிகள் ஒன்று சேர்ந்து நீர்ப்பாசன அதிகாரிகளுக்கும் மனு அனுப்பினார்கள். அவர்களால் மட்டும் என்ன செய்ய முடியும். தோல்வியோடு விவசாயிகள் தலை கவிழ்ந்து புறப்பட்டனர். இரண்டு நாட்களின் பின் ஆற்றிலே தண்ணீர் விடப்பட்டது. அக்கிராமமே ஆனந்தத்தில் மிதந்தது. மாரிமுத்துவும் மண்வெட்டியை பிடித்தவாறு வயல் வக்கடைகளை திறந்து விட்டான். தண்ணீர் ஓட்டத்தின் வேகம் அதிகரிக்க சல சல ன்று பாய்ந்தது. சற்றுப் பொறுக்க முடியாத முன் வயல்காரன் மறிப்புப் போட்டு தன் வயலை நனைத்தான்.

மண்வெட்டியை தோளில் போட்டவாறு மாரிமுத்து வீடு நோக்கி புறப்பட்டான். பிறகு அடுத்த நாள் வயலுக்கு வந்தான். மறிப்புக்கள் எடுக்கப்படவில்லை. கிராம விவசாய தலைவரிடம் முறையிட்டான் அவரும் [illegible] மாகத்தான் கொடுக்கப்படும் என்றார்.

பதிலேதும் கூறாமல் மாரிமுத்து வீடு வந்து தன் மனைவியிடம் புலம்பினான். அவளும் என்ன செய்வது ஆறுதல் ஒன்றைத் தான் கூறமுடியும். பிள்ளைகள் படிப்பதற்காக காசு கேட்ட போது எங்கு போவது. பின் ஒருவரிடம் கடன் வாங்கிக் கொடுத்தான்.

இப்படியே நாட்கள் நகர்ந்தன. பின் ஆறு பெருக்கெடுத்து வாய்க்காலின் மட்டம் வரை போதுமான அளவில் தண்ணீர் ஓடியது. மாரிமுத்துவும் பக்கத்து வயல் காரனும் மண்வெட்டியுடன் ஓடினர். குளத்து வயல் பக்கமாக நீர் பாய்கின்றது தங்களது வயல் பக்கம் தண்ணீர் இல்லாமல் வெறிச்சோடிக் காணப்பட்டதைப் பார்த்தது ம சண்டைகளும் போட்டு சங்கடங்களுக்கு உள்ளாகி தண்ணீருக்காக சண்டை போடுவதா என்றவாறு நினைத்து ளியேறினான். கோடை மழையும் பெய்யவில்லை. அவன் மனமும் ஆறவில்லை. திருகோணமலையில் பெய்கின்ற மழைக்குக் கூட எங்கள் பக்கம் பெய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லையே என்றவாறு மாரிமுத்து புறப்பட்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## முரசுளான்

மலைமுரசு பாடலை
மறந்திடாது போடுமாம்!
மலைக்க வைக்கும் மற்றவை,
மறதிதானோ என்னவோ?

இருந்து கை கடுக்கவும்,
இடுப்புளை வெடுக்கவும்
அருந்தமிழில் தீட்டியே
அனுப்பியும் வராவிடில்...?

என்ன சொல்லி ஏசலாம்?
இனிமையான தமிழலோ?
நன்னயங்கள் செய்வதே
நல்லதென்பார் வள்ளுவர்!

விருப்பம்போல நடக்கலாம்,
வெள்ளை உள்ளப்பாவலர்
வெறுப்பதில்லை - தொடருவார்,
வினையறுக்க முரசுளான்!

தாமரைத் தீவான்
ஊச்சந்தீவு, கிண்ணியா.

## புதுயுகம் படைக்குமோ புதுவருடம்

கவிக்குயிலன், சேனையூர்

புதுயுகம் படைக்குமா 2015,
புதுவருடம்?
மது போதை வஸ்துக்களை
ஒழிக்குமா புதுவருடம்?

அதிகார துஸ்பிரயோகம்
அரக்க செயல்களை
அடியோடு நிறுத்துமா
2015 புதுவருடம்!

இயற்கை அழிவை
இனிமேல் வராமல் தடுக்குமா
இனசன விரோதங்களை
இல்லாமலொழிக்குமா
2015 புதுவருடம்?

நீதி சட்டம் ஒழுங்கை
நிலை நிறுத்துமா
நிலையான அமைதியை
நிகழ்த்துமா புதுவருடம்?

தமிழர் தம் பிரச்சினையைத் தீர்த்து
சமத்துவ சுதந்திரத்தை
சமரச நிர்வாகத்தை ஏற்படுத்தி
சாதனை படைக்குமா புதுவருடம்?

## வரம்

திருமலை சுந்தா



பக்தனும் கோவிலுக்கு
நாள் தவறாது ...
இறவா வரம் வேண்டி
அலைந்தான் பொறுமையோடு

கடவுளுக்கென்ன கோபமா?
சலித்துப் போனவனுக்கோ
தீராத கோபம்

சாமியாவது ...
கடவுளாவது ...

நீயெனக்கு
சாகும் வரமாவது
தாவென்றான் எரிச்சலோடு

ஆச்சரியம்!!!
ஜெக்ஜோதியாக இறைவன்.

பக்தன் அதிர்ந்தான்.

அவனுக்கு
என்ன வரம்
வேண்டுவது என்பது
தெரியவில்லை!

## தலைப்பிடா வரிகள்

சீர் கொண்டு செருக்கற்று செம்மையால்
பார் கொண்டிலங்கும் சுற்றம் உவந்தேத்த
காவிழக்கினும் நாவிழக்காது - கறையற்ற
பூவிளக்காய் திகழ்வான் தலைவன்

சங்கம் கொண்டு தமிழ் வளர்த்து
பங்கம் கொள்வோர் பலமறுத்து
மங்காப் புகழ்சேர மாந்தரை வாழ்வித்து
தங்காதிப்பதியில் நிலையுற்றான்
காவியத்தலைவன்

வானுண்டு மண்ணுண்டு - நம்மில்
ஊனுண்டு உரமுண்டு உயர்வடைய
ஏனில்லையிது நம்மினத்தில் - நல்வாழ்வு
தானில்லை நல்ல தலைவன் போல்

தேசம் கொண்ட பாசம் தாங்கி
நேசம் கொண்ட மக்கள் ஏங்க
வையத்து வாழ் எம்மினம் போற்ற
எழுவான்பரிதி போலெழுவான் தலைவன்.

ஸதீஸ்

## ஓரப் பார்வை

உறவு என்ன வென்று
புரியாமலே
உனை காதலிக்கின்றேன்
உருகி உருகி
வேதனையை களைந்து
வாழ்வை சாதனையாக்க
இயலவில்லை
என் ஆன்மா - நீ
எனை அகன்றிருப்பதால்
காதலும் கொல்லும்
வரலாறு தருமுண்மை
ஓரப்பார்வை தா - துறப்பேன்
உயிர் சிரித்துக்கொண்டே

- தன்யா -

# இது குளக்கோட்டன் சமூகம்

வரலாற்றுப் பக்கம்

கடந்தவாரத் தொடர்ச்சி.. ...

'இது குளக்கோட்டன் சமூகம்' நூலில் இரண்டாவது அத்தியாயமான 'கோபுர வறுமை தேவதாசிகள்' என்ற தலைப்பின் கீழ் விரிவாக 155 ஆம் பக்கத்தில் ஆராயப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம் தேவதாசிகளின் தோற்றம், சோழர் காலத்தில் அவர்களது நிலை, விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியின் பின் அவர்களது நிலை போன்ற விபரங்களை வெகு சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது உங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம்.'இது குளக்கோட்டன் சமூகம்' என்ற நூல் தம்பலகாமத்தை மட்டும்தான் பேசுகிறதோ? என்று. அது என்னுடைய ஆர்வக்கோளாறு. எந்தப்புத்தகம் கைக்குக்ருக் கிடைத்தாலும் அதில் எங்கெங்கு எங்களுடைய ஊரைப்பற்றிய குறிப்புகள் வருகிறது என்று முதலில் தேடி வாசித்து விடுவதை சிறுவயதிலிந்தே வழக்கமாகக் கொண்டிருந்ததன் விளைவு இது. எனக்குத் தெரிந்து தம்பலகாமத்தின் கிராமிய வழிபாட்டினை முறையாகப் பதிவு செய்த நூலாக இது அமைகிறது. அது போலவே திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர், திரியாய், கந்தளாய், நிலாவெளி, குச்சவெளி, கப்பல்துறை, விளாங்குளம், தென்னமரவாடி போன்ற பல புகழ்பூத்த கிராமங்களைப் பதிவுசெய்யும் இந்நூலினை முழுமையாக வாசிக்க நீண்ட கால அவகாசமும், ஆழமான வாசிப்பும் தேவையாக இருக்கிறது எனக்கு.

என்ன இந்த மனிதர் தன்னுடைய ஊர் வரலாற்றினை மட்டுமே சொல்லிவந்திருக்கிறாரே என்று சலித்துக் கொள்ளாதீர்கள். இந்நூலின் இறுதி அத்தியாயமான 'வரலாறும், வழிப்போக்கர்களும்' என்ற பகுதியில் 233ஆம் பக்கத்தில் இதற்கு விடை சொல்லப்பட்டுள்ளது. சிறிய அலகுகளாக வாழும் மண்ணையும், மரபுகளையும் நுணுக்கமாக ஆராய்வதின் மூலமே வரலாறு நெருக்கமடையும். இதனையே வரலாற்று விமர்சகர்கள் நுண்வரலாற்று எழுத்தியல் என்று அடையாளம் காட்டுவதாக குறிப்பிடுகிறார் கலாநிதி சரவணபவன் அவர்கள். ஒவ்வொரு மனிதரும் தான் பிறந்த ஊரின் வரலாற்றை அறிவதிலும், அவற்றினை ஆவணப்படுத்துவதிலும் ஆர்வம்காட்ட வேண்டியதன் அவசியத்தினை உணர்த்துகிறது இந்த அத்தியாயம்.

சிறுதெய்வ வழிபாடு, கிராமிய வழிபாட்டுச் சடங்குகள், தேவதாசி முறைமை, பிராமணர், வேளாளர் தொடர்பான சாதியக்கருத்துக்கள் என்பன இன்றைய நாட்களில் விரிவான ஆராய்வுகளும், விமர்சனங்களும் நிறைந்த பேசுபொருட்களாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவை பற்றிப்பேசுகின்ற இந்நூல் பல தர்க்கங்களையும், உரையாடல்களையும் தோற்றுவிக்கும் களமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அதனையே நூலாசிரியரும் எதிர்பார்பதாக தன் பின் அட்டைப்படச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று சேர்ந்து பயணம் செய்யுங்கள்.
சேர்ந்தமர்ந்து விவாதியுங்கள்.
உங்கள் மனங்களெல்லாம் ஒன்றாகட்டும்.
- இருக்கு வேதம் (ரிக்வேத) -

திருகோணமலையிலுள்ள அன்புவழிபுரத்தில் கலாநிதி சரவணபவன் வீட்டில் அவருக்கென இந்தியாவிலிருந்து வான்வெளி மூலம் தருவிக்கப்பட்டிருந்த தனிப்பிரதியில் தம்பலகாமம் தொடர்பான பக்கங்களைப் புரட்டிப் புரட்டி வாசிப்பதும், தம்பலகாமம் பொற்கேணி பயணத்தின் ஞாபங்களை மீட்டுப் பார்ப்பதாகவும் இருந்த என்னை

'வீட்டில எல்லோரும் நலந்தானே? என்றவாறே சிற்றூண்டியுடன், தேநீரும் ஏந்தி நின்ற திருமதி சாந்தினி சரவணபன் அவர்களின் குரல் என்னை நிஜ உலகிற்கு கொண்டுவந்தது.

தொலைபேசியில் புத்தகங்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடல்வழியாக கொண்டுவருவது பற்றி அச்சக உருமையாளர்களுடன் பேசி முடித்திருந்த கலாநிதி சரவணபவன் அவர்களும் 'என்ன புத்தகத்தைப் பற்றி இன்னும் ஒன்றும் சொல்லவேயில்லை' என்று புன்னகைத்தவாறே கேட்டார்.

இருவரது கேள்விகளுக்கும் நடுவில் மிக அழகிய சித்திர வேலைப்பாடுகளுடன், கண்ணைக்கவரும் வண்ணத்தில், 264 பக்கங்களுடன் என் கைகளிலிருந்தது மிகவிரைவில் வெளியிடப்படவிருக்கும் 'இது குளக்கோட்டன் சமூகம்' என்ற காலப்பதிவேடு. அதனை முழுமையாக வாசித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தினால் வைக்கமனமில்லாமல் அருகிலிருந்த மேசைமேல் புத்தகத்தினை வைத்தேன்.




இருவரது கேள்விகளுக்கும் பதிலளித்தபின் என்னிடம் எஞ்சியிருந்தது ஒரு கேள்வி மட்டும்தான்.

நூல்வெளியீடு தொடர்பான அறிவிப்பு மிகவிரைவில் வருமென்று உங்களைப்போலவே நானும் காத்திருக்கிறேன். வரலாற்றுத் திருகோணமலை, காலனித்துவ திருகோணமலை, இது குளக்கோட்டன் சமூகம் ஆகிய நூல்கள் திருகோணமலைப் பிரதேச வரலாறு தொடர்பில் ஆர்வம் காட்டும் எந்தவொரு நபரும் கட்டாயம் வாசித்துப் பாதுகாக்க வேண்டிய நூல்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

முற்றும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதிபதித் தேர்தல் - 2015

## தமிழ் மக்களின் தெரிவு

### தேர்தல் அலசல்



இலங்கையில் சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் தமிழ் அரசியற் பரப்பிலும் ஊடகப் பரப்பிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் அரசியற் பிரமுகர்கள் முதல் சிவில் சமூகத்தவர்கள் வரை இரு வேட்பாளர்களையும் ஒரே தராசினில் வைத்து இனவாத சிந்தனையில் தமிழர்களுக்கு எந்தவித அரசியல் உரிமைகளையும் இரு வேட்பாளர்களுமே தரமாட்டார்கள் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். இது தமிழ் மக்களுக்குத் தெரியாத விடயமல்ல.

தற்போதைய சனாதிபதி மகிந்த ராசபக்ச தமிழர்களுக்கு என்ன தந்துள்ளார் என்பதை தமிழர்கள் கடந்த 10 வருடங்களில் கண்கூடாகக் கண்டுள்ளனர். சனாதிபதி மகிந்த தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் ஏன் முழுநாட்டுக்குமே என்ன செய்துள்ளார் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் அறிவர். இலங்கை, தமிழர்கள் வாழும் நாடு. ஒரு கொள்ளைக் கூட்டத்தால், பாலியல் வன்புணர்வாளர்களால், கொலைகாரக் கூட்டத்தால், போதைவஸ்து கடத்தற்காரர்களால் சூறையாடப்பட்டு வருகிறது. நீதித்துறை, சட்டம் ஒழுங்கு, பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம் அனைத்துமே நசிக்கப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனை, தமிழர்களை உரிமைகளைப் பற்றியோ அல்லது 60 வருட அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டத்தைப் பற்றியோ சிந்திக்க முடியாதவர்களாக்கியுள்ளது.

விடுதலைப்புலிகளின் அழிவுடன் தமிழினம் ஒட்டுமொத்தமாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மனித இனமாக, ஒரு நாகரிகமுள்ள மனிதர்களாக வாழ்வதற்கு இன்று தமிழர்களுக்கு அரசியல் உரிமை எதுவுமே தேவையில்லை! ஏனெனில் தமிழினம் இன்று மீண்டெழ முடியாத அடிமை நிலைக்குச் சென்றுள்ளது. தமிழர்களின் வாழ்நிலை அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் 2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் படிப்படியாக இனஅழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் சமஷ்டி பற்றி பேசுவது உரோம் எரியும் போது பிடில் வாசிப்பதற்குச் நிகரானது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கையை ஏற்கப்போவதில்லை என்பதை பகிரங்கமாக அறிவித்துள்ளதுடன் அவருடன் கைகோர்த்துள்ள யாதிக கெல உறுமய தமிழர்களுக்கு எந்த உரிமையையும் தர அனுமதிக்கப் போவதில்லை என்பதும் தமிழர்களின் அபிப்பராயம்.

தமிழர்களுக்குத் தெரிவே இல்லை என்றும் இருவேட்பாளர்களும் தமிழர்களின் அரசியற் கோரிக்கையே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் தமிழர்கள் இத்தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று மூத்த ஊடகவியலாளர்கள் முதல் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் சாட்சியாக இருந்த அனுபவமுள்ள மூத்த பிரஜைகள் வரை தமிழ்க் கூட்டமைப்புக்கு சிபார்சு செய்ய முயல்கின்றனர்.

இன்று 2009 மே கடந்து 5 ஆண்டுகளின் பின்னரும் தமிழ் மக்கள் தமது அரசியல் கோரிக்கையை நிறைவேற்றும் உறுதிமொழியை சிங்கள வேட்பாளர்களிடம் கேட்பது சிறுபிள்ளைத் தனமானது. தமிழ்மக்கள் இன்று எந்தவித அரசியல் கோரிக்கையையும் சனாதிபதி வேட்பாளரிடம் கூறத்தக்க அரசியல் பலமோ அன்றி ஆயுத பலமோ இல்லாத நிலையிலேயே உள்ளனர். தமிழ் மக்களிடமோ அல்லது அவர்களது பிரதிநிதிகளான தமிழ்க் கூட்டமைப்பிடமோ அல்லது வேறு மூன்றாம் பாதுகாவலரிடமோ "தமிழர்களின் அரசியல் அபிலாசையை" சிங்கள ஆட்சியாளரிடம் கோருவதற்கு அதற்காக நிபந்தனை விதிப்பதற்கு உரிய பலமோ தந்திரோபாயச் செற்பாடுகளோ இல்லை.

தமிழ் மக்கள் தமக்கான உரிமையைக் கோரி ஒரு 1000 பேர் திரண்டு வெகுசனப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாத அரசியற் பலத்தையே கொண்டிருக்கிறார்கள். சுன்னாகம் மின்சாரசபை வளாகத்திலிருந்து பரவிவரும் கழிவு எண்ணெயும் நச்சுப் பதார்த்தங்களும் தமது கிணற்று நீரில் கலந்து 3 வருடங்களாகியும் குறித்த நிறுவனம் கழிவெண்ணையை நிலத்தடி நீருள் செலுத்துவதை நிறுத்தக் கோரி பிரதேசசெயலகத்திற்கு முன்னால் ஒரு அடையாள எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் தாங்களாகவே செய்ய முடியாத அடிமை அச்சம் கலந்த சூழ்நிலை யிலேயே வாழ்கின்றனர்!!! இந்த முகதாவில் "தமிழ் மக்களின் அரசியில் அபிலாசை" குறித்து வேட்பாளர் எவரும் பேசவில்லையே என்று தமிழ்த்தேசிய அரசியல் வாதிகள் கூச்சலிடுவது கொடிதினும் கொடிது.

2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின்னர் வட பகுதி மக்களும் கிழக்குத் தமிழர்களும் எதிர்கொள்ளும் சாவல்கள் எவை? வடக்கே யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்கள் முழுமையான இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளன. வடக்கே தமிழர்களின் நிலம் தினமும் பறிக்கப்பட்டு வருகிறது. தமிழர்களின் கலாசார மையமான யாழ்ப்பணம் 2014 முதல் 9 மாதங்களில் அதிகளவான மதுபானம் நுகர்ந்த மாவட்டமாக உள்ளது. போதைப் பொருள் விநியோகம் அரச ஆதரவுடன் நடைபெறுகிறது. 1990 முதல் இன்று வரை வலிவடக்கு உயர்பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கீரிமலை, காங்கேசன்துறை, தெல்லிப்பழை உள்ளிட்ட வலிவடக்கிலிருந்து 1996 முதல் சுண்ணக்கற்கள் அகழப்பட்டு தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இப்பிரதேசம் பெரும் கடல் அரிப்பை எதிர்நோக்குகிறது. தெல்செவன முதல் வடக்கே பெரும் முதலீடுகள் யாவும் தலைமையில் இருக்கும் குடும்பத்தினதும் குடும்ப விசுவாசிகளினதும் படையினரதும் கைகளிலேயே உள்ளது.

வன்னியின் பெரும் விவசாயப் பண்ணைகள், பல்லாயிரம் ஏக்கர் நிலம் ஒரு குடும்பத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுமையிலும் இராணுவமும் புலனாய்வுப் பிரிவும் நிலைகொண்டுள்ளன. தமிழ்மக்கள் மூச்சுவிடவே முடியாத நிலையில் உள்ளனர். வடகிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் அடிப்படைத் தேவையான வீடு, கிணறு, மலசல கூடம் இன்றி காட்டுவாசிகள் போல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வடக்கில் மட்டுமல்ல நாடுமுழுவதுமே பல்கலைக்கழகங்கள் முதலான உயர்கல்வி நிறுவனங்கள் முதல் அரச நிறுவனங்கள் வரை அனைத்துமே ஒரு குடும்பத்தின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளது. உயர் கல்வி நிறுவனங்களில் தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட வகையில் கட்டாயக் கருத்தடை மேற்கொள்ளப்படுகிறது. இந்தநிலையில் "தற்போது அவசரமானது சுவாசிப்பதற்கான ஓட்சிசன் அது எங்களுக்கு அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏன் உங்களைப் போன்ற ஊடகவியலாளர்களுக்கு கூட தேவையாகவே இருக்கின்றது.

இலங்கை முழுவதும் மிக மோசமான ஊடக அடக்குமுறை இப்போது தொடர்கிறது. குறிப்பாக வடக்கில் அது மிக மோசமான கட்டத்தில் உள்ளது. இந்த நிலையில் ஒரு குடும்பத்திடம் இலங்கை சிக்கி சின்னாபின்னமாவதை அனுமதிக்க முடியாது. இப்போதைய அவசர தேவை இந்தக் குடும்ப ஆட்சியில் இருந்து நாட்டை மீட்பதாகும்." என்று ரணில் விக்கிரமசிங்க வடகிழக்கு ஊடகவியலாளர்களுக்கு கூறியுள்ளமை யதார்த்தமானதாகும். இங்கு கூறியவரல்ல கூறப்பட்ட விடயமே முக்கியமானதாகும்.

தமிழ் மக்கள் கடந்த முறை சனாதிபதித் தேர்தலில் முள்ளிவாய்க்கால் போரை முன்னின்று நடத்திய போர்க் குற்றவாளியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கே வாக்களித்தனர். குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் பொன்சேகாவுக்கு அதிகளவான வாக்குகளை அளித்தனர். தேர்தலுக்கு முன்னர் சரத் பொன்சேகா வெளியூர் ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் தமிழர்கள் சிங்களவர்களோடு இணைந்து வாழவேண்டும். அதிகமான உரிமைகள் எதையும் கோரக் கூடாது. உண்பதும் உறங்குவதும் தான் தமிழர்களுக்கு உரிமை என்ற கருத்துப்பட கூறியிருந்தார். இந்தநிலையில் எதற்காக வடகிழக்குத் தமிழர்கள் சரத் பொன்சேகாவிற்கு வாக்களித்தனர். தமிழரசுக் கட்சி இளைஞர் அணியைச் சேர்ந்த சிலர் யாழ்ப்பாணத் தமிழர்கள் சரத் பொன்சேகாவிற்கு வாக்களித்தமையை மலினப்படுத்திப் பேசினர். தமிழர்கள் மகிந்த ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பாகவே ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்ற இராணுவத் தளபதிக்கு வாக்களித்தனரே தவிர தமது இனத்தை அழித்த இனவாத சிந்தனையுள்ள பொன்சேகாவுக்காக வாக்களிக்க வில்லை.

ஒரு போர்க்குற்றவாளியான இராணுவத்தளபதிக்கு தந்திரோபாயமாக மகிந்த ஆட்சி மீதான எதிர்ப்பை காட்ட வாக்களிக்க முடியுமெனின் கறைபடியாத, இராணுவப் பின்னணியோ கட்சிப்பின்னணியோ இல்லாத பொதுவேட்பாளர் ஒருவருக்கு, எதிர்க்கட்சிகளால் முன்மொழியப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க தமிழர்கள் பின்னிற்க மாட்டார்கள். 2005 இல் வடக்கு,கிழக்குத் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்தமை விடுதலைப்புலிகள் கூறியதற்காக மட்டும் அன்று. அப்போது தமிழர்களின் பலமாக விடுதலைப்புலிகள் இருந்தார்கள். விடுதலைப்புலிகள் 2005 இல் தேர்தலை புறக்கணித்ததில் நியாயம் இருந்தது. அதேபோல் 2010இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழப்பத்துக்கு மத்தியில் வெளிச் சக்திகளுக்காக எடுத்த தீர்மானத்துக்காக தமிழ்மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கவில்லை. அவ்வாறு செய்ய தமிழ் மக்கள் அவ்வளவு முட்டாள்களும் அல்ல.

தமிழினம் இன்றைய நிலையிலிருந்து மீள்வதற்கு



நிலத்திலே வீழ்ந்திருக்கும் நிலையிலிருந்து எழுவதற்கு ஒரு ஊன்றுகோல் இல்லாமல் தவிக்கிறது. சுன்னாகம் மின்சாரசபைக்குச் சொந்தமான நிலத்தில் நொதேண் பவர் என்ற மின்னுற்பத்திக் கம்பனி நிலத்திலே துளையிட்டுச் செலுத்திய கழிவெண்ணையினால் மின்னிலையத்திலிருந்து 10 கி.மீ வரையான நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. கழிவு எண்ணெயும் கிறீசும் கலந்துள்ள நீரினால் மாற்றமுடியாத ஆபத்தான நோய்களான சிறுநீரக நோய், புற்றுநோய் என்பன ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த 3 வருடங்களாக தொடரும் இந்த பேரழிவு தரும் நொதேண்பவர் யாருக்குச் சொந்தமானது? இந்த ஆட்சி தொடருமெனில் தமிழர்கள் பேரழிவு அபாயத்தை எதிர்கொள்வர். அது முள்ளிவாய்க்காலைவிட மோசமானதாக இருக்கும்.

தென்னமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் சர்வாதிகாரிகள் தண்டிக்கப்பட்டது ஆட்சியிழந்த பின்னரே என்பதை வரலாறு விட்டுச் சென்றுள்ளது. நீதியென்பது அதிகாரமிழந்த நிலையிலேயே செயற்படுகிறது என்பதையும் வரலாறு நிரூபித்துள்ளது. மகிந்த ஆட்சி தொடருமெனில், சீனாவைப் போன்ற இரும்புத் திரைக்குள் இலங்கை மக்கள் தள்ளப்படுவர்.

உலகில் முதல் தோன்றிய மொழி தமிழ். அது செவ்வியல் மொழிகள் ஆறில் ஒன்று. உலகின் முதல் மாந்தனினம் தமிழினம். முதல் நாகரிகம் சிந்து வெளி. அது தமிழர்களுடையது முதலான பெருமைகளுடைய தமிழினம் இன்று வீழ்ச்சியுற்றதுற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் பிரதானமானது தமிழர்களிடம் தந்திரோயாயம் என்பது சிறிதும் இல்லாமை ஆகும். பலமுள்ள உயிரனம் மட்டுமல்ல தந்திரம் மிக்க இனமும் எதிரியின் பலத்தை சரியாக எடைபோடும் இனமும் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் இனமும் உலகில் பிழைத்துக் கொள்ளும்.

பொது வேட்பாளரால் சனாதிபதி ஆட்சியை ஒழிக்க முடியாது போகலாம். ஆனால் 17 ஆவது 18 வது திருத்தங்கள் நீக்கப்படுதல் சாத்தியம். தமிழர்கள் தாம் வாழும் நாட்டில் அல்லது அயல் தேசத்தில் சனநாயகம் தளைக்கப் பங்களிப்புச் செய்ய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. சுயாதீனமான நீதித்துறை, சுயாதீனமான பொதுச் சேவை ஆணைக்குழு, சுயாதீனமான பொலிஸ் சேவை ஆணைக்குழு, சுயாதீனமான ஊடகத்துறை கொண்ட சனநாயகம் இலங்கையில் நிறுவப்படுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்க வடக்குக் கிழக்கு, மலையக தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

ஆட்சி மாற்றத்தின் போதே தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பற்றி சிந்திப்பதற்கும் பேசுவதற்குமான ஒரு வெளி ஏற்படும். பலகட்சிகளின் ஆதரவில் போட்டியிடும் மைத்திரிபாலவைத் தெரிவு செய்வதன் மூலமாக கொழும்பில் பலவீனமான ஒரு தலைமை உருவாக வழிவகுப்பது தமிழர்கள் தமது உரிமையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய புறச் சூழலை ஏற்படுத்தும்.

தமிழினம் அழிவிலிருந்து மீண்டெள வேண்டுமெனில் வரும் சனாதிபதி தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்தலைப் புறக்கணிப்பது தமிழினத்தை அரசியல் அனாதைகள் ஆக்கிவிடும். எமது வாக்குகள் தேர்தல் முடிவை மாற்றாது என்றெல்லாம் தப்புக் கணக்கிடுவது தமிழர்களைப் பலவீனமான சமூகமாக்கி விடும். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பதை தமிழர்கள் இப்போது நினைவுபடுத்த வேண்டும்.

— யாதவன் நந்தகுமார் —

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## INFOMATION TECHNOLOGY

MOBILE

பல்வேறு புதுப்புது நுட்பங்களை அறிமுகப்படுத்தி வரும் சாம்சங் நிறுவனம், சாம்சங் கேலக்ஸி கோர் ப்ரைம் என்ற புதிய மொபைலை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆண்ட்ராய்ட் 4.4. கிட்கேட் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் இந்த மொபைல் 4.5 அங்குல திரையுடன் 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் குவாட் கோர் ப்ராசசர் உள்ளது.


5 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட எல்.இ.டி.ப்ளாஷ் இணைந்த பின்புற கமெரா, 2 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட முன்புறக் கமெராவுடன் உள்ளது. நெட்வொர்க் இணைப்பிற்கு 3ஜி, வை பி, புளூடுத் 4.0 மற்றும் ஜி.பி.எஸ் தொழில் நுட்பங்கள் இயங்குகின்றன.




Huawei நிறுவனம் Ascend GX1 எனும் தனது புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துள்ளது. 250 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இக்கைப்பேசியானது 6 அங்குல அளவு, 1280 x 720 Pixels Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளது.





HTC நிறுவனம் புதிதாக வடிவமைத்து விரைவில் அறிமுகம் செய்யக்காத்திருக்கும் A12 ஸ்மார்ட் கைப்பேசி தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இக்கைப்பேசி 4.7 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 139.8 x 69.5 x 9.5 mm என்ற அளவிடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் 1.2 GHz வேகத்தில் செயல்படக்கூடிய 64-bit Qualcomm Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM என்பவற்றினைக் கொண்டுள்ளதுடன் Android 4.4 KitKat இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



OTHER

Pittsburgh பல்கலைகழகத்தில் 2012ம் ஆண்டு Jan Scheuermann என்பவரால் ரோபோ ஒன்றின் கைகள், விரல்கள் என்பவற்றினை மூளையால் கட்டுப்படுத்தக்கூடிய திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் 2014ம் ஆண்டின் ஆரம்பத்தில் இதனை உருவாக்க முடியும் என அவர் நிரூபித்தும் காட்டியிருந்தார். இன்னும் 5 – 10 வருடங்களில் இதனை பயன்பாட்டிற்கு விடலாம் எனவும் கூறப்படுகிறது.



அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா குரங்கு வடிவத்தை ஒத்த ரோபோ ஒன்றினை வடிவமைத்துள்ளது. இந்த ரோபோ சூழலில் இடம்பெறவுள்ள பேரழிவுகளை முன்கூட்டியே அறிவிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. நான்கு கால்களையும் ஏழு கமெராக்களையும் கொண்டு இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மனிதர்களைப் போன்று நடக்கவும், இரண்டு கால்களில் எழுந்து நிற்கவும் இந்த ரோபோக்களுக்கு முடியும். மேலும் இவை நேர்த்தியான தரைகளிலும், கரடு முரடான தரைக்ளிலும் நடந்து செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

Gmail

மின்னஞ்சல் சேவையினை வழங்கிவரும் ஜிமெயிலிற்கு சீனாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நேரடியாக கூகிள் தளத்திலிருந்து ஜிமெயிலை பயன்படுத்த முடியாத வசதி சீனாவில் காணப்பட்ட போதிலும் Microsoft Outlook போன்ற மூன்றாம் தரப்பு மென்பொருட்களினூடாக இச்சேவை பெறப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது இவ்வாறு சேவையைப் பெறுவதற்கும் தடை ஏற்பட்டுள்ளது.



நாய்கள் மற்றும் பூனைகளை பயிற்றுவித்து அவற்றின் உதவியுடன் மனிதனில் ஏற்படக்கூடிய நோய்களை கண்டறியும் வகையில் இலத்திரனியல் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாதனமானது வெவ்வேறுபட்ட வாசனையை அறிவதற்கு உதவுவதுடன் அதன் ஊடாக புற்றுநோய், வலிப்பு நோய்கள் போன்றவற்றினை செல்லப்பிராணிகளின் உதவியுடன் கண்டறிய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் மூக்கு (Digital Nose) என அழைக்கப்படும் இச்சாதனத்தினை Dr.Andrew Koehl என்பவர் கண்டுபிடித்துள்ளார். இதில் பொருத்தப்பட்டுள்ள வெள்ளி நாணயத்தினை விடவும் சிறிய அளவிலான சென்சார் வெளியில் கலக்கும் இரசாயனப் பதார்த்தங்களை இனங்கண்டு அலாரம் மூலம் சமிக்ஞையை வழங்குகின்றது.




சோனி நிறுவனம் 12 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்ட புதிய டேப்லட் ஒன்றினை இம்மாதம் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 1000 டொலர்கள் பெறுமதி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்த டேப்லட் ஆனது Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 6GB RAM, 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவை தவிர 8.6mm தடிப்பம் உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் நீடித்து உழைக்கக்கூடிய 12,100 mAh மின்கலமும் தரப்பட்டுள்ளது.




The Interview திரைப்படத்தினால் சைபர் தாக்குதலுக்கு உள்ளான சோனி நிறுவனம் குறிப்பிட்ட சில திரையரங்குகளில் மாத்திரமே திரையிடப் படவுள்ளதாகவும், மேலும் Youtube தளத்தினூடாக இலவசமாகவும், Google Play மற்றும் iTunes தளங்களினூடாகவும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிலையில் அன்ரோயிட் சாதனங்களுக்கான போலி அப்பிளிக்கேன் தயாரிக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தினை பார்வையிடுவதற்காக இந்த அப்பிளிக்கேனை தரவிறக்கும்போது மல்வேரும் சேர்ந்து தரவிறக்கம் செய்யப்படுகின்றது. Android அல்லது Badaccents எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மல்வேர் ஆனது இதுவரை சுமார் 20,000 அன்ரோயிட் சாதனங்ளை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறுக்கெழுத்து புதிர் 042

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 16 த | | ■ | ■ | 2 | 17 | |
| | ■ | | ■ | 3 | | | | |
| | ■ | 4 | | | ■ | 5 ம் | | |
| 6 | 18 | | ■ | 7 | | ■ | | ■ |
| ந் | | ■ | 8 | ரி | 19 | 9 | | 20 |
| 10 | | | 11 | | ய | | ■ | |
| 12 | ன் | ■ | ட் | ■ | | 13 | தி | |
| | ■ | ■ | | ■ | 14 | | | |
| 15 | | | | ■ | டி | | ■ | ■ |

## இடமிருந்து வலமாக

1. இந்தத் திருவிழாதான் நாடெங்கிலும் இப்போது
2. ஊதினால் ஒலி வரும்
3. சுனாமி உருவாகிய இடம்
4. இந்த அறிக்கையே மழைவருமா இல்லையா எனச் சொல்லும்
5. உடம்பு - குழம்பியுள்ளது
6. ஆதிகாலத்தில் எழுதப்பட்டு இப்போதும் வாசிக்கப்படுபவை
7. பாட்டி சுட்டது
8. சிங்கம்
9. அரசியல்வாதிகள் தாவுவது
10. தவம்
11. முஸ்லிம் நாடுகளில் வழங்கப்படும் தண்டனை
12. மாதவன் மீராஜஸ்மினின் நடிப்பினில் வெளியான படம்
13. முஸ்லிம் நீதிபதி
14. அன்றே கொல்பவன்
15. காவல்துறையின் யுத்தப்படை

## மேலிருந்து கீழாக

1. பெறுமதியான மரம்
2. நூறு
3. வானொலிக்குத் தேவையானது
4. பிடித்த மீன்களைக் கையளிக்கும் இடம்
6. சமயக் குரவர்களில் ஒருவர்
9. நேரம் காட்டும்
11. துணிதுவைப்பவர்
14. நீள அகலத்தை அளக்கும் அளவை
16. கண்ணாடியின் ஒத்தசொல்
17. மாமரத்தின் காய் - குழம்பியுள்ளது
18. கம்பன் ஒரு.....
19. இவனது நாட்காட்டி உலகைக் கலக்கியது
20. சின்னப்பையன்

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ.***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 041 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 19 ரா | வ | ண | ன் | 20 வெ | ட் | டு | ■ |
| ந் | 2 மா | 3 தா | ய | ம் | கு | 4 தா | ம் | 24 ப |
| 5 தி | ட் | 22 டா | 23 ணி | ■ | ளி | 28 ர | 21 தி | லை |
| 6 ய | ம | ன் | கா | 25 நெ | ■ | ம் | மி | த் |
| ர் | ■ | ■ | ங் | ட் | 7 ன் | ம | ர் | த |
| 8 கு | ள | ம் | 9 க | டு | கு | ■ | 10 தி | ல் |
| 11 ரு | த் | தி | ர | ன் | 13 அ | க | ம் | 27 வு |
| 12 தி | ரு | ம | ந் | 26 தி | 14 ர | 15 ம் | ர | ம |
| 16 சை | வ | ம் | ■ | 17 ரை | ட் | ■ | 18 ப | சு |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திரு. பார்த்தீபன்*
*302ஏ. மத்தியவீதி. திருகோணமலை.*

*திரு. கலைவாணன்,*
*நித்தியபுரி, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

## "மீகாமன்"

இயக்குனர் மகிழ்திருமேனி

ஆர்யா & ஹன்சிகா



கோவாவையே ஆட்டிப்படைக்கும் மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல் மன்னன் ஜோதி. இவனுடை உருவத்தை இவனது நெருங்கிய கூட்டாளிகள் பார்த்தது கிடையாது. இவன் செய்யும் போதை மருந்து கடத்தல் கொள்ளை நாளுக்கு நாள் அதிகரிக்கவே ஜோதியை பிடிக்க மும்பை போலீஸார் ரகசிய ஆபரேஷன் ஒன்றை ஆரம்பிக்கின்றனர். அந்த ஆபரேஷனில் ஆர்யாவும், அவரது நண்பரான ரமணாவும் முக்கிய அதிகாரிகளாக பொறுப்பேற்கின்றனர். ஜோதியை வெளியே கொண்டு வர அவனது அடியாட்களில் ஒருவராக மாற இருவரும் முடிவு செய்து இருவரும் தங்களது பெயர்களை மாற்றிக்கொண்டு ஜோதியின் போதை மருந்து கடத்தல் கூட்டத்தில் இணைகின்றனர்.



இந்நிலையில் ஒரு முக்கிய போதை மருந்து ஆபரேஷனில் ரமணா போலீஸ் ஆள் என்று ஜோதிக்கு தெரிந்துவிடுகிறது. இதனால் ரமணாவை பிடித்து சித்ரவதை செய்யும் வில்லன் கோஷ்டிகள் ரமணாவுடன் வந்த ஆர்யாவை கண்டுபிடித்தார்களா? ஆர்யா இந்த போதை மருந்து கூட்டத்தை கூண்டோடு பிடித்தாரா? என்பதுதான் மீதிக்கதை.

10

இறுக்கமான முகத்துடன் ஆக்சன் வேடத்தில் ஆர்யா மிகவும் கச்சிதமாக பொருந்தியிருக்கிறார். ஹன்சிகாவுக்கு படத்தில் வருவதே ஒருசில காட்சிகள் தான். ஆர்யாவுடன் இவர் ரொமான்ஸ் செய்யும் இடத்தில் தனது முத்திரையை பதிக்கின்றார். வில்லனாக நடித்துள்ள அஷுடோஸ் ராணா நடிப்பு வித்தியாசமாக இருந்தாலும், படத்தில் ஏகப்பட்ட வில்லன்கள் இருப்பதால் இவரது நடிப்பு பெரிதாக எடுபடவும் இல்லை.

மொத்தத்தில் 'மீகாமன்' ஆக்சன் மற்றும் விறுவிறுப்பான திரைக்கதைக்காக ஒருமுறை பார்க்கலாம்.



## பாடகர் வரிசையில் ஜீவா



எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கிவரும் புதுமுகங்கள் நடித்துவரும் "டூரிங் டாக்கிஸ்" இந்தப் படத்திலே, ஜீவா பாடிய பாடல்கள் சிறப்பாக வந்திருப்பதாகவும், இவை படத்தின் வெற்றிக்கு பெரும் பலமாகவும் அமையுமெனவும் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். அத்தோடு, பல கலைஞர்கள் பயணிக்கும் வரிசையில் நடிகராகவும் பாடகராகவும் தானும் அடியெடுத்து வைத்துள்ள ஜீவா, இசைஞானியின் இசையில் பாடியது புதுமையான மனது மறக்காத அனுபவம் என்கிறார்.

## தல ஏமாற்றி விட்டார்

தல அஜித்தின் என்னை அறிந்தால் பொங்கலுக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், அனைத்து ரசிகர்களும் அவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு இப்போது ஒரு அதிர்ச்சியான தகவல் வந்துள்ளது.

படம் இப்போது ஜனவரி 29ம் தேதி வெளியாகும் என அதிகார பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது. படம் இன்னும் முழுமையாக முடியாததே இதற்கு காரணமாக கூறப்பட்டுள்ளது.

## மேக்கப் இல்லாட்டி சீயா



தெலுங்கு தொலைக்காட்சியில் டாக் ஷோ ஒன்றில் பங்குபெற்ற சார்மியிடம் "நடிகைகளில் யாரை மேக்கப் இல்லாமல் பார்க்க சகிக்காது" என கேட்டபோது ஒரு வினாடி கூட யோசிக்காமல் "இலியானா" என்று பதிலளித்தார் சார்மி. இலியானாவும் சார்மியும் பாலே டொங்கலு மற்றும் ராக்கி ஆகிய இரு படங்களில் சேர்ந்து நடித்திருந்தாலும், இருவருக்கும் இடையே அதிக தொடர்பு இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் இலியானா குறித்து சர்ச்சைக்குரிய கருத்து கூறியுள்ள சார்மிக்கு இலியானா ரசிகர்கள் கடும்

## பையா பாகம் 02

லிங்குசாமி, கார்த்திக் நடிப்பில் ஒரு படத்தை இயக்கவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. இந்த படத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் வரும் ஜனவரிக்குள் முடித்துவிட்டு பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய இரு மாதங்களில் விறுவிறுப்பாக படப்பிடிப்பு நடைபெற உள்ளது. இந்த படத்தில் கார்த்தி ஜோடியாக நடிக்க தமன்னாவிடம் பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் கார்த்தி-தமன்னா மீண்டும் இணைய விருப்பதால் இந்த படம் பையா படத்தின் இரண்டாம் பாகமாக இருக்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.



## மீண்டும் மருதநாயகம்

## லண்டன் தயாரிப்பாளருடன் இணைப்பு

உலக நாயகன் கமல்ஹாசன் கடந்த 1997ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணி எலிசபெத் மற்றும் அன்றைய முதல்வர் கருணாநிதி முன்னிலையில் மருதநாயகம் என்ற படத்தை துவங்கினார். அதன்பின்னர் ஒருசில காரணங்களால் அந்த படம் இடையிலேயே நின்றுவிட்டது.

இந்நிலையில் தற்போது மீண்டும் மருதநாயகம் படத்தை ஆரம்பிக்க கமல்ஹாசன் முயற்சித்து வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் ஆயுதம் பெயர் கொண்ட ஒரு திரைப்படத்தை தயாரித்த பிரபல லண்டன் தொழிலதிபர் மருதநாயகம் படத்தை தயாரிக்க முன்வந்துள்ளதாகவும், அதற்கு கமல்ஹாசன் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மருதநாயகத்தை தயாரிக்க ஒப்புக்கொண்டிருக்கும் அந்த தொழிலதிபருக்கு மருதநாயகம் படத்தின் பட்ஜெட் என்பது ஒரு வார வருமானம்தான். தன்னை எதிர்த்து குரல் கொடுத்த தமிழ் அமைப்புகளுக்கு பதிலடி கொடுக்கவே அவர் இந்த படத்தை தயாரிக்க முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது.

## வெற்றிக் களிப்பில் பப்ளிமாஸ்



சிம்புவுடனான காதல் முறிவு ஹன்சிகாவை சற்று பாதித்தாலும், சென்ற வருடத்தில் அவர் நடித்த மூன்று படங்களும் வெற்றி பெற்றுள்ளன. அவருடைய புத்தாண்டு தீர்மானத்தை பற்றி கேட்ட போது, "எனக்கு புத்தாண்டு அன்று தீர்மானம் எடுத்து கொள்ளும் பழக்கம் இல்லை, என்னுடைய தவறுகளை நான் தவறு என்று தெரியும் போதே திருத்திக்கொள்வேன். அதற்காக புத்தாண்டு வரும்வரை காத்திருக்க மாட்டேன்" என்று கூறியுள்ளார்.

## காதலர் தின ரிலீஸ்



தனுஷ் என்றாலே லோக்கல் பையன் என்ற இமேஜ் உருவாகியுள்ளது. அந்த வகையில் இவர் நடித்த "3" திரைப்படம் காதல் காவியமாக அனைவரையும் கவர்ந்தது. இப்படம் பிப்ரவரி மாதம் தான் ரிலீஸ் ஆனது. அதே போல் அடுத்த வருடம் பிப்ரவரி மாதம் 13 திகதி "அனேகன்" படம் ரிலீஸ் என்று கூறப்படுகிறது. 14ம் திகதி காதலர் தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

## எம் காதல் முறிந்தது

ராய் லக்ஷ்மி "எனக்கும் டோனிக்கும் ஒரு காலகட்டத்தில் காதல் இருந்தது. ஆனால், அந்தக் காதல் இப்போ இல்லைங்க, எங்க ரெண்டு பேருக்கும் ஒத்து வராதுன்னு, நாங்களே பிரிஞ்சுட்டோம். இப்போ நல்ல நட்பும் மரியாதையும் இருக்கு. அவ்வளோதான்" என தனக்கும் இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் டோனிக்கும் இடையிலான உறவு பற்றி இத்தமுறை வெளிப்படையாக பேசியதைக் கேட்டு பலர் வாயடைத்துப் போனார்கள். ஆனாலும் இந்த சம்பவம் தொடர்பாக டோனியிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.

சென்ற வாரம்



நான் யாரு??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் - 34

# பகையும் பழிவாங்கலும்



(வி.என்.சந்திரகாந்தி)

'அன்பும் நேயமும்' என்ற தண்டவாளத்தில் ஓடவேண்டிய உலகம், இன்று 'பகையும் பழிவாங்கலும்' என்ற தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது!

அன்பும் நேயமும் இந்த உலகில் இருந்தால் வாழ்க்கை எப்படி பூத்துக்குலுங்கும் என்பதை சிறிது சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு உயிரினமும் எதனை எதிர்பார்க்கின்றது? மற்றவர்கள் தம்மேல் அன்பும் நேயமும் காட்டவேண்டும் என்பதையல்லவா? ஆனால் அது இன்று எங்கு கிடைக்கின்றது?

கடவுள் கூட தனது படைப்பில் பகைப் பிராணிகளை படைத்துள்ளான் என்னும் போது எம்முள் ஒரு கேள்விக்குறி எழுகின்றது. இயற்கையின் நியதியே அதுதானா? எலிக்கும் பூனைக்கும் பகை, பாம்புக்கும் கீரிக்கும் பகை! இதையெல்லாம் பார்க்கும் போது ஒரு உண்மை புரியவேண்டும். இவையெல்லாம் பசியை முன்னிட்ட போராட்டமே தவிர வேறொன்றில்லை. ஒரு மிருகம் தன் இனத்துடன் அன்புடனும் பரிவுடனும் தான் இருக்கின்றது. ஆனால் மனிதன் மட்டும் எந்த காரணமும் இன்றி தன் இனத்துடனேயே தான் குரோதம் பாராட்டிக் கொண்டிருக்கின்றான்.

மனிதனுக்கு பகை என்கின்ற உணர்வு ஏன் ஏற்படுகின்றதென்பதற்கு நியாயமான எந்த காரணத்தையும் காட்ட முடியாது. மனிதனால் மட்டும் தான். சிந்தித்து காரியமாற்ற முடிகின்றது. தனது பாதுகாப்பான உறைவிடத்தை அவனால் திட்டமிட்டு அமைத்துக்கொள்ள முடிகின்றது. விஞ்ஞான வளர்ச்சி அவனுக்கு சொகுசான வாழ்கையை கொடுத்திருக்கின்றது. இன்னும் ஏன் பகைமை? மிருகங்கள் தம் இனத்துள் பகைப்படுவதில்லை என்றும் பசி காரணமாகவே பகைபிராணிகளை வதைக்கின்றன என்றும் நியாயப்படுத்தியிருந்தோம். அந்த வகையில் மனிதனை எடுத்தால் அவன் ஒரு இனமாக இல்லாமல் பல இனங்களாக பிளவுபட்டுள்ளான். உதாரணமாக கறுப்பர், வெள்ளையர். அடுத்தகட்டமாக பசிக்கு என்று இல்லாவிட்டாலும் மற்றொரு இனத்தவரிடம் உள்ள வரப்பிரசாதங்களை தான் அபகரிக்கவேண்டும் என்ற எண்ணம் ஆகும். இந்த இடத்தில் மிருகங்களினதும் மனிதனினதும் பகைமை உணர்வு ஒரு மையத்தில் இருந்தே ஆரம்பமாவதை அவதானிக்கலாம்.

மனிதனை கூறுபோட்டு வைத்திருக்கும் இனம், மொழி, மதம் நீடிக்கும் வரை பகை உணர்வும் பழிவாங்கும் உணர்வும் நீடிக்கவே செய்யும். உலகில் பயங்கரவாதம் (Terrorism) தலைவிரித்தாடுகின்றது. ஒரு பயங்கரவாத செயல் தன்னும் இடம்பெறாமல் ஒரு வாரம் கூட நீடிக்காத நிலைதான் இன்று உலகில் உள்ளது. அந்த அளவுக்கு இன்று போராட்ட குழுக்கள் நூற்றுக்கணக்கில் உருவாகி உள்ளன. அடிப்படையில் போராட்ட குழுக்களை தீவிரவாத குழுக்கள் என்று அழைக்கவும் முடியாத ஒரு நிலையும் உள்ளது. ஏன் என்றால் அவை தத்தம் நிலையில் தமது நாட்டின் சுதந்திரத்திற்காகவும் தத்தம் மக்களின் விடிவிற்காகவும் போராடுகின்றன. வேண்டும் என்றால் அவர்கள் பயணிக்கும் தீவிரவாத மார்க்கத்தில் தவறு காணலாம். பத்திரிகைகளில் அடிக்கடி பிரசுரமாகும் தீவிரவாத அமைப்புக்கள் பற்றி நாம் நிச்சயமாக ஓரளவேனும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் எம்மால் உலக அரசியலை புரிந்து கொள்ள முடியும்.

அல்கொய்தா (Al-qaeda) என்ற இயக்கம் உண்மையில் ரஸ்யாவை தோற்கடிப்பதற்காக பின்லேடன் தலைமையில் C.I.A ஆல் உருவாக்கப்பட்டது. ஒரு காலத்தில் பின்லேடனுக்கு அமெரிக்காவில் ராஜமரியாதை இருந்தது. பின்னர் அவன் தீட்டிய மரத்திலேயே கூர்பார்ப்பது போல அமெரிக்காவிற்கே பகைவனாகிவிட்டான். அதன் விளைவுதான் 2011ம் ஆண்டு செப்ரம்பர் 11ம் திகதிய உலக வர்த்தகமைய இரட்டைக்கோபுர தாக்குதல். பல்லாயிரக்கணக்கானோரின் உயிர் ஒரு சில நிமிடங்களில் காவுகொள்ளப்பட்டன.

தலிபான் (Taliban), தீவிரவாத அமைப்பு தென்கிழக்காசிய நாடுகளை பின்னணியாக கொண்டது. அண்மையில் பாக்கிஸ்தான் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 80க்கு மேற்பட்ட பள்ளி மாணவர்கள் உட்ட 132 பேரின் இறப்புக்கு தலிபான்களே காரண கர்த்தாக்களாக இருந்துள்ளனர். பாக்கிஸ்தான் இராணுவத்தினர் மாணவர்களுக்கு பாடசாலை நடத்துவதையும் பெண்கள் கல்வி கற்பதை எதிர்த்தும் இத்தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படுகின்றது. இதன் விளைவாக இன்று பாக்கிஸ்தான் அரசாங்கம் தலிபான்கள் அமைப்புக்கு எதிராக பெரும் தாக்குதல் நடவடிக்கையினை எடுத்துள்ளதுடன் ஏழாயிரத்துக்கும் மேற்பட்டோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர்.

ஐரிஸ் குடியரசு இராணுவம் (Irish Republican Army) ஐரிஸ் மக்களின் குடியுரிமையை பெறுவதற்காக பிரிட்டிஸ் இராணுவத்தினருக்கு எதிராக போராடும் அமைப்பு. இக்குழு எக்காரணத்தை முன்னிட்டும் தன் மக்களை கொல்வதில்லை.


ஹிஸ்புல்லா (Hezbollah).....ஈரானாலும், சிரியாவாலும் பாதுகாக்கப்படும் இந்த அமைப்பு லெபனான் நாட்டையும் நிலங்களையும் பாதுகாக்க போராடுகின்றது.

ஹமாஸ் (Hamas) பாலஸ்தீன பிரதேசங்களின் விடுதலைக்காக இஸ்ரேலுடன் போராடும் ஒரு தீவிரவாத அமைப்பாகும். இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களை மீட்டெடுப்பதே இவர்களது இலக்காக இருந்தாலும். இஸ்ரேல் மீதான இவர்களது ஏவகணைத் தாக்குதல் காரணமாக இஸ்ரேலின் பதிலடியில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்படுகின்றனர். அண்மையில் இஸ்ரேல் பாலஸ்தீன பிரதேசமான ஹாசா மீது பெரும் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. அதனால் ஆண்கள் பெண்கள் சிறுவர் என பலதரப்பட்டவர்களும் இறக்கவும் இடம்பெயரவும் நேரிட்டது.

I.S.I.S. அண்மையில் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் அதிகம் இடம்பிடித்துள்ள அதி தீவிரவாத இயக்கம். உண்மையில் அமெரிக்கா சவுதி ஆகியவற்றின் நிதிவளத்துடனும் தூண்டுதலுடனும் அவர்களது எதிரிநாடுகளான ஈரான், ஈராக், சிரியா ஆகியவற்றை பழிவாங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே இதுவாகும். ஆனால் இன்று இந்த அமைப்பு தனி இஸ்லாமிய தேசம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் செயற்பட்டுவருகின்றது. ஈரான், ஈராக், சிரியா மீது பெரும் பலத்துடன் போராடி வருகின்றது. ஈவிரக்கமற்ற முறையில் பத்திரிக்கையாளர்களின் தலையினை துண்டித்தல். பெண்களை துன்புறுத்தல் , இம்சை செய்தல் விருப்பத்திற்கு மாறாக விவாகம் செய்தல் என்று இவர்களது அட்டூழியங்கள் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றன. ஈராக் மற்றும் சிரியாவின் பகுதியினை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கி உள்ளது. இந்த அமைப்பின் அடாவடித்தனமான செயல்களை உலகமே கண்டிக்கும் நிலையில் இன்று அமெரிக்கா போன்ற நாடுகளே இவர்கள் மீது விமான தாக்குதல்களை நடாத்தியதன் மூலம் ஆயிரக்கணக்கான I.S.I.S போராளிகள் இறந்துள்ளார்கள்.

உலகளாவிய ரீதியில் பார்க்கப் போனால் பல தீவிரவாத இயக்கங்கள் செயற்படாமலோ அல்லது அழிந்துபோயோ உள்ளன. அதேபோன்று உள்நாட்டில் பல தீவிரவாத அமைப்புக்கள் அழிந்து போயுள்ளன. மற்றும் சில தீவிரவாத இயக்கங்கள் அரச செல்வாக்குடன் தகாத செயல்களில் ஈடுபடுவதையும் மக்கள் மத எதிர்ப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்பதனையும் அவதானிக்கமுடியும். சொல்ல போனால் உலகில் அன்பு நேயம் இரண்டும் ஆட்சி செய்ய வேண்டிய இடத்தில் எப்படி பகையும் பழிவாங்கலும் அரசோச்சுகின்றது என்பதை மேலே பார்த்தோம்

உலக நாடுகள் பல தாமும் அணு உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் தம்மை வல்லரசாக காட்டிக்கொள்கின்றன. ஆயதங்களின் பெருக்கம் உலகை அச்சுறுத்திகொண்டிருக்கின்றன. ராஜதந்திரிகள் சூழ்ச்சி செய்வதன் மூலம் மற்ற நாடுகளையும் மக்களையும் அடிமை கொள்ள முயல்கின்றன. ஆனால் தனி மனிதனின் ஆயுட்காலமோ மிகவும் குறுகியது. மனிதகுலம், என்று தமக்குள்ளான பிரிவுகளையும் அதன் நிமித்தமான குரோதங்களையும் கைவிடுகின்றனவோ அன்றுதான் உலகில் அன்பும் மனித நேயமும் அரசோச்சும்.



# புறக்கணிப்பின் கால்கள் புகை போன்றது ...

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அண்மையில் ஒரு நண்பரைச் சந்தித்தபோது அவர் மிகவும் நலிந்த மனநிலையில் இருந்தார். இருவரும் உரையாடிக்கொண்டே நடந்துகொண்டிருந்தோம். மழையும் குளிருமாய் இருந்தது ஒஸ்லோவின் வீதிகள். எங்காவது உட்கார்ந்து தேனீரருந்தியபடியே பேசலாம் என்றபடியே நடந்துகொண்டிருந்தோம். ஒரு ஒதுக்குப்புறத்துத் தேனீர்க் கடையொன்றில் அமர்ந்து தேனீர் தருமாறு கேட்டுவிட்டு உட்கார்ந்து, இருவரும் குளிர் காலத்து உடைகளை களற்றி கதிரையில் வைத்ததும் உடலில் இருந்து பெரும்பாரம் இறங்கியது போலிருந்தது. இன்னும் 5 மாதத்துக்கு குளிர் தான் என்று அங்கலாய்த்தார் நண்பர்.

இருவரின் பேச்சும் வாழ்க்கைபற்றித் திரும்பியது. வாழ்கையில் புறக்கணிப்பு என்பது எந்தளவுக்கு ஒரு மனிதனை பாதிக்கிறது என்று ஆரம்பித்த நண்பர் பேசி முடித்த போது அவர் கண்கள் கலங்கியிருந்தன. எனது கண்களும் தான். எங்களில் எத்தனை மனிதர்கள் எத்தனை எத்தனை அந்தரங்கங்களை மௌனமாய்ச் சுமந்தபடி அலைந்து திரிகிறோம்? வாழ்க்கையின்பால் பலத்த ஏமாற்றத்தில் இருந்தார் அவர். தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பவாழ்க்கை, பொதுவாழ்க்கை எங்கும் புறக்கணிப்பின் நிழல் அவரைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

புறக்கணிக்கப்படுவதன் வலியையும், புறக்கணிக்கப் படும் போது ஏற்படும் குரூர இன்பம் இவையிரண்டையும் தான் அனுபவித்திருப்பதாயும், இவையிரண்டாலுமே தனது வாழ்க்கைத்துணையுடனான நட்பு, அன்பு, அன்னியோன்யம், புரிந்துணர்வு, சில மனிதர்களுடனான நட்புகள் ஆகியவை தொலைந்துபோயின என்ற போது நானும் அவரின் கருத்துடன் உடன்பட்டிருந்தேன்.

எப்போது புறக்கணிப்பு மனிதர்களுக்கிடையே ஆரம்பிக்கிறது? எவ்வாறு அது ஒரு நெருக்கமான உறவுக்குள் புகுந்து, அவ்வுறவுகளைப் பிளவடையச்செய்கிறது? இதில் இருந்து மீண்டுகொள்ள முடியாதா? என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தோம்.

அடுப்பங்கரையின் புகைபோன்று புறக்கணிப்பு எதுவித ஓசையும் இன்றி மனிதர்களின் வாழ்வுக்குள் புகுந்து, நிறைந்து, நிமிர்ந்து பார்க்கமுடியாதளவுக்கு வாழ்வினை சிரமப்படுத்துகிறது. ஏமாற்றங்களில் தான் புறக்கணிப்பின் பிறப்பு நிகழ்கிறது. அதன் பின் அது எங்களுடனேயே வாழ்நாள் முழுவதும் ஒட்டிக்கொண்டுவிடுகிறது. அது தன் சுமையைச் சுமக்கும் பொறுப்பை எங்கள் மீது சுமத்திவிட்டு அது எங்கள் மேலேயே சவாரிசெய்கிறது.

நண்பரின் சரிதத்துடன் நானும் என் வாழ்வினை ஒப்பிட்டுப்பார்த்தால், புறக்கணிப்பு என் வாழ்வின் எந்தக் காலகட்டத்தில் உட்புகுந்தது என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. திருமணமாகி காதல்கசிந்துருகிய போதா? காமம் வடிந்ததோடியபின்பா? குடும்பம் குட்டி என்றாகியபோதா? அல்லது எனது சுயம் மறுக்கப்பட்ட போதா? வாழ்வின் எல்லா படிநிலைகளிலும் புறக்கணிப்பினை உணர்ந்ததாகவே நினைவு பதிலளிக்கிறது. அதேபோல் நானும் தெரிந்தும் தெரியாமலும் மற்றையவரை புறக்கணித்திருக்கிறேன் என்பதை ஏற்றுக்கொள்வதில் எதுவித வெட்கமும்இல்லை, எனக்கு.

வாழ்வின் எல்லாபடிநிலைகளிலும், ஏமாற்றங்கள் என்னை அல்லது மற்றையவரை சூழ்ந்த கணங்களில், புறக்கணிப்பின் புகை எம்மிருவருக்குமிடையில் புகையத் தொடங்கியிருக்கவேண்டும். அதை நாம் நுகர்ந்தறியத் தவறியதன் விளைவை இன்று அனுபவிக்கிறோம். புறக்கணிப்பிற்கு, புரிந்துணர்வு என்பதை புரியாதிருப்பதும் ஒரு முக்கிய காரணம் என்றே எண்ணத் தோன்றுகிறது. புரிந்துணர்வு இருப்பின் ஏமாற்றங்கள் குறையுமல்லவா.

நீண்டகால புறக்கணிப்புக்கள் மனித உறவுகளின் மென்மைத்தன்மைகளை, ஈரலிப்பை மரத்துப்போகச் செய்கிறது. ஒருவரின் மென்மையான உணர்வுகளைப் பற்றி மற்றையவர் உணரும் தன்மையை இழந்துபோகிறார். இதுவே ஒரு உறவின் முடிவின் ஆரம்பம். கண்களில் அன்பு மறைந்து குரோதம் குடிவந்துவிடுகிறது. குரலில் அன்பின் ஈரம் வறண்டு காய்ந்துபோகிறது, வெறுப்பும் எரிச்சலும் தெறிக்க ஆரம்பிக்கிறது. செய்கைகளில் அலட்சியமும், சினமும் தெரிய ஆரம்பிக்கிறது. அவர்களுக்கிடையே பேச்சற்ற நிலை வரும் போது புறக்கணிப்பு தனது முழுவெற்றியையும் கொண்டாடிக்கொண்டிருக்க ஒரு மனிதஉறவு தொலைந்துபோயிருக்கும்.

நானும் இப்படியானதொரு நிலையைக் கடந்து வந்தவன். என்னைப்போல் பலரும் இப்படியானதொரு வாழ்வினை வாழ்ந்துகொண்டிருப்பதை நன்கு அறிவேன். விழுங்கவும் முடியாது மெல்லுவும் முடியாது போன்ற மிகவும் கொடுமையான வாழ்வுதான் அது. எனது நண்பரும் வாக்குமூலத்தின் சாரமும் இவற்றையே கூறின..

எனது நண்பர் தேனீரை உறுஞ்சியபடியே [illegible] இப்படியான ஒரு உறவில் தொடர்ந்தும் [illegible] என்றேன். [illegible] அப்படியானதொரு வாழ்க்கையை வாழ்வதினால் உனது “வாழ்க்கைத் தரம்” உயர்கிறது என்று நினைக்கிறாயா என்றேன். மௌனமே பதிலாயிருந்தது அவரிடம்.

மனிதர்களால் மீண்டும் புறக்கணிப்பற்ற அன்பின் ஆரம்பகாலத்திற்குச் செல்லலாம் என்னும் நம்பிக்கை என்னிடம் இல்லை. அப்படியான பொறுமையும், நற்குணமும் என்னிடமில்லாதிருக்கலாம். ஆயினும் எனது பலவீனங்களுடனேயே நான் எனது வாழ்வினை வாழப்பழகிக்கொண்டிருக்கிறேன். அது ஒருவிதத்தில் பெருத்த ஆறுதலைத்தருகிறது.

புறக்கணிப்பு என்பது புரையோடிய புண்போன்று ஆறாது தொடர்ந்துகொண்டே இருக்கும். ஆம், எனக்கு அப்படித்தான் இருக்கிறது என்றேன், நண்பரிடம். வீடு, வசதி, வங்கியிலே இருப்பு, ஊருக்குள் பெயரும் புகழும் என்று புறவாழ்வு நிம்மதியாருந்தாலும் அகவாழ்வானது நிம்மதியின்றி இருக்கும் தன்மையின் தார்ப்பர்யத்தை நான் நன்கு அறிவேன். எனது நண்பரும் அதை ஆமோதித்தார். வாழும் வாழ்க்கையின் தரம் என்பது மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபடுகிறது. தேடுதல் இருப்பவர்கள், அது பற்றிய புரிதல் இருப்பவர்களே பல சிக்கல்களை, மனப்போராட்டங்களை கடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தனது அகவாழ்வின் வாழ்க்கைத்தரம்பற்றி அலட்டிக் கொள்ளாதவர்கள் ஒருவிதத்தில் பல சிக்கல்களில், மனப்போராட்டங்களில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்களா என்ற கேள்வி எம்மிருவரிடமும் இருந்தது.

தன் வாழ்வில் இப்படியானதொருநிலை வரும் என்பதை நண்பர் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும், இப்போது என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டிருப்பதாயும், முறிந்துபோன மனங்களை சீர்செய்வது சாத்தியமற்றது என நன்கு அறிவதாயும் கூறினார். மௌனமாய், அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அவரின் இல்வாழ்வு தோல்வியடைந்திருப்பதை ஏற்கும் மனம் இதுவரை அவருக்கு வாய்க்கவில்லை என்பது புரிந்தது. பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், சமூகம் என்று பலருக்காகவும் அவர் பயந்துகொண்டிருப்பதை உணர்த்தியது அவர் பேச்சு. இது ஒன்றும் புதிதில்லை. எமது சமுதாயத்தில் பலரும் கடந்துகொள்ளும் ஒரு படிநிலைதான் இது, ஆனால் மனமுறிவுகளை ஆழ்மனரீதியாக, உணர்வுபூர்வமாக அவர் சீர்படுத்திக்கொள்ள முடியாதுபோயின் சிரமமான மன அழுத்தங்களுடன் நீங்கள் இருவரும் வாழும்நிலை ஏற்படலாம் அதற்குத் தயாரா என்றேன். எங்களுக்கிடையில் சில மௌனமான கணங்கள் கடந்துபோயின. இருவரினதும் தேனீர்க்கோப்பைகளும் காலியாகியிருந்தன..... என்னசெய்யலாம் என்றார் என்னிடம்.

மனதுடன் உரையாடு, மீண்டும் மீண்டும் உரையாடு. பதில் கிடைக்கும். எப்போ என்று என்னிடம் கேட்காதே. ஆனால் நிச்சயமாய் ஒரு நாள் பதில் கிடைக்கும் என்றேன்.

அர்த்தமாய் புன்னகைத்தபடியே எழுந்து குளிர்காலத்து உடைகளை அணிந்துகொண்டு புறப்பட்டோம்.

**ஓர் சாதாரணமானவன் தோற்றுப்போவானா!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நடப்பு

இலங்கையின் சுதந்திர தினவிழா வருடா வருடம் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருவது வழமை. அக் காலப்பகுதியில் அவ்விழா இடம்பெறுகின்ற குறித்த மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளும் மிக துரிதமாக இடம்பெறுவதும் வழமையான நடவடிக்கையாகும்.

நமது நாடு சுதந்திரமடைந்து இற்றைக்கு சுமார் 65 வருடங்களை பூர்த்தி செய்திருந்தாலும் ஆரம்ப காலங்களில் எமது தலைநகரான கொழும்பு மாவட்டத்தில் அவ்விழாக்கள் இடம்பெற்றன. காலப் போக்கில் பல வசதிகளை கருத்தில் கொண்டு ஏனைய மாவட்டங்களிலும் அவ்வாறான வைபவங்கள் இடம்பெறுவதற்கு அன்றைய அரசாங்கங்களினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனூடாக சகல இனமக்களுக்கும் சுதந்திர தின விழாவின் கலை, கலாச்சார நிகழ்வுகளை நேரடியாகக் காணக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. வருடா வருடம் இடம்பெற்று வரும் அவ்வாறான வைபவங்களின் போது நாட்டில் நல்ல பல சம்பவங்கள் இடம்பெறுவதும் வழமை.

குறிப்பாக மேதகு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நூற்றுக்கணக்கான சிறைக் கைதிகள் நாட்டின் சகல சிறைச்சாலைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவர். வேண்டுமென்று குற்றம் புரிந்து சிறை சென்றவர்கள் மற்றும் சந்தர்ப்பம் சூழலினால் குற்றவாளியாகி சிறை சென்றவர்கள் ஆகியோர் இந்த விடுவிப்பில் அடங்குவர்.

மேலும் தண்டப் பணம் செலுத்தமுடியாமல் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவிப்பவர்கள், தாம் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கமுடியாது சிறைக்குச் சென்றவர்கள் ஆகியோரும் தமது சிறை வாழ்க்கையை நல்லொழுக்கத்துடன் கழித்தால் பொதுமன்னிப்பின் ஊடாக விடுதலையடைய வாய்ப்புண்டு.

வெளியில் வந்தவர்களில் பலர் திருந்தி வாழ்ந்தாலும் சில ஜென்மங்கள் திருந்தி வாழ பிடிக்காமல் மீண்டும் ஏதாவதொரு தவறில் சிக்கி சிறைக்குள் செல்வதும் வழமையாகும். சிலருக்கு வெளியில் வருவதை விட உள்ளே இருப்பதில் தான் விருப்பம். காரணம் வெளியில் வந்தால் உழைத்து வாழவேண்டும். அங்கே அப்படியல்ல மணி அடித்தால் வேளா வேளைக்கு சாப்பாடு கிடைக்கும். மேலும் அரசியல்வாதிகளின் தாதாமார், அடியாட்கள் ஆகியோராக இருப்பின் அங்குள்ள சிறை வாழ்க்கை இன்னும் விசேடமாக இருக்கும்.

அவ்விதமான சுகபோக வாழ்க்கையை விரும்புபவர்கள் அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் ஆசீர்வாதத்துடன் இறுதிக்காலம் வரை அங்கேயே செட்டில் ஆகிவிடுவார்கள்.

"காப்பிரி முடுக்கு" எனும் பகுதி கொழும்பு நகரின் மல்வத்தை பிரிவில் அமைந்துள்ளது. முடுக்கு எனும் சிங்கள சொல்லுக்கு தமிழில் சேரி என்பது அர்த்தமாகும். சமூகத்தில் தீய செயல்களில் ஈடுபடுபவர்களில் அனேகமானவர்களின் நிரந்தர வதிவிடம் அவ்வாறான சேரிகளே.

ஞானசேகரன் மலைநாட்டை சார்ந்தவன். தொழிலின் நிமித்தம் கொழும்பு நகருக்குச் சென்றான். அவன் எதிர்பார்த்த மாதிரி ஒரு நல்ல தொழில் அவனுக்குக் கிடைக்காவிட்டாலும் கைநிறைய பணம் சம்பாதிக்கக் கூடிய தொழிலொன்று கிடைத்தது. அவ்விதமான தொழில் கொழும்பில் எங்கும் இலகுவாகப் பெறக்கூடியதே.

ஆமாம்... அவன் கொழும்பில் பிரபல தாதா ஒருவரின் அடியாள். அவன் உத்தரவு இடும் தொழிலை நேரத்திற்கு முடித்துக் கொடுத்தால் ஞான சேகரனுக்கு உடனே பணம் கிடைக்கும். கொலை, கொள்ளை, கப்பம்பெறுதல்,

## யாரை நொந்து என்ன!! - விதி விளையாட்டு -

ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் இவைதான் ஞானசேகரனின் தொழிலாகும். அத்தொழில்களை அவன் தேடிப் போகத் தேவையில்லை. சகல செயற்பாடுகளும் அலைபேசி ஊடாகவே இடம்பெறும்.

காப்பிரி முடுக்கு பகுதியில் ஞானசேகரன் தீய செயல்களுக்கு மிகவும் பெயர் போனவன். அவனது வாழ்க்கை அடிதடி, வெட்டுக்குத்து போன்றவைகளுடன் கழிந்து போய்க் கொண்டிருந்தது பல தடவைகள் சாவின் விளிம்புக்கு சென்று திரும்பியவன்.

அவனது மனைவி சாரதா அன்று அவனுக்கு பணம் கொடுத்திருந்தால் அவன் இன்று சிறைக்கம்பிகளை எண்ண நேர்ந்திருக்காது. ஞான சேகரன் குடிபோதையில் அன்று நடு ராத்திரி வீடு வந்து சேர்ந்திருந்தான். நண்பர்களுடன் குடித்து கும்மாளம் போட்டதில் அவனது கையிலிருந்த முழுப்பணமும் முடிந்து விட்டதால், மேலும் போதையை அதிகரிக்க எண்ணி சாரதாவிடம் பணம் கேட்ட வேளையில் அவள் கொடுக்க மறுக்கவே அந்த கொடூர சம்பவம் நடந்தேறியது.

தொட்டிலில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்த அவனது இரண்டு வயது நிரம்பிய பெண் குழந்தையின் கால்களை பிடித்து தூக்கி அக்குழந்தையை தரையிலே அடித்துக் கொன்ற மகா பாதகன் அவன். எந்தவொரு தகப்பனும் புரியாத அந்த பாவச் செயலுக்கு தூக்குத் தண்டனையை விட நம் நாட்டில் வேறு என்ன தண்டனை உண்டு? தற்பொழுது அதுவும் இல்லை.

உண்மையில் அவன் அந்தக் கொலையை சுயநினைவுடன் புரியாததை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு பத்து வருட கடுமிய சிறைதண்டனையை அன்று வழங்கி இருந்தது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் பல கைதிகள் மிக சந்தோசமாக தமது சிறைக் காலத்தை கழித்தாலும், ஞானசேகரனால் அங்கு நிம்மதியாக அக்காலத்தை கழிக்க குற்றஉணர்ச்சி அவனுக்கு இடமளிக்கவில்லை.

குறித்த வருடத்தில் மேதகு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு பெயர் பட்டியலில் ஞானசேகரனின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. சுமார் ஆறு வருட காலம் அவன் சிறை வாசத்தை அனுபவித்த வேளையில் மிக நல்லொழுக்கத் துடனும், சிறை அதிகாரிகளுக்கு பணிவாகவும் நடந்து கொண்டதை உறுதிப்படுத்தியதை அடுத்து அவனது தண்டனைக் காலம் நான்கு வருடங்களால் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தான்.

அவன் சிறையில் வாழ்ந்த அந்த ஆறு வருட காலங்களில் அவனது மனைவியோ உற்றார் உறவினர்களோ, நண்பர்களோ அவனை காணச் செல்லாதது அவனுக்கு மிகுந்த கவலையை அளித்திருந்தது. அவன் வெளியில் வந்தவுடன் அங்குள்ள சுற்றாடல் அவனை வியக்க வைத்தது.

எங்கும் அபிவிருத்தி பணிகள் அசுர வேகத்தில் இடம்பெற்றதால் சேரிகள் முற்றாக அழிக்கப்பட்டு பல மாடிக் கட்டடங்களே கம்பீரத்துடன் உயர்ந்து நின்றன. எப்படியோ தனது இருப்பிடமான காப்பிரி முடுக்கு பகுதிக்குச் சென்றிருந்தான்.

ஆனால் அப்படியொரு பகுதி அங்கு இருந்ததிற்கு எந்தவொரு தடயமும் அங்கு காணக்கிடைக்கவில்லை. அச் சேரிப்பகுதிக்கு பதிலாக பல மாடிக் கட்டடங்கள் அப்பகுதியை அலங்கரித்துக் கொண்டிருந்தன. ஞானசேகரனின் குடும்பத்தினர், உறவினர், அயலவர் என்று எவரையும் அங்கு பார்க்கக் கிடைக்காததினால் அவன் செய்வது யாதென்று தெரியாது சில நிமிடம் நிலை குலைந்து விட்டான்.

அந்தப் பகுதியிலிருந்தவர்கள் வேறு இடங்களுக்கு குடியிருப்புக்காக கொண்டு செல்லப்பட்டிருந்ததை அவ்விடத்தில் இருந்தவர்கள் மூலம் தெளிவாக தெரிந்து கொண்டான். குடும்பத்தினரை தேடியலைவதில் பயன் இல்லை. இருப்பினும் என்றோ ஒருநாள் அவர்கள் தனது கண்ணுக்கு தென்படுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை தேடும் பணியிலிருந்து தன்னை விடுவித்து தனது எதிர்காலத்தை திட்டமிடத் தொடங்கினான்.

அவன் சிறையிலிருந்த காலத்தில் கடமையிலிருந்த அதிகாரி ஒருவரை தேடி அவரின் வீட்டுக்குச் சென்றான். தனது தற்போதைய இக்கட்டான நிலையை விளக்கவே அதிகாரி ஞானசேகரனுக்கு உதவி செய்ய முன்வந்தார் அதாவது அவரது வீட்டிலே அவனுக்கு வேலையொன்றை வழங்கினார். அவர் இன்னமும் சேவையில் இருப்பதால் வீட்டு வேலைக்கு பொருத்தமான ஒருவரை தேடிக் கொண்டிருந்த வேளையில் இவன் பொருத்தமானவனாகப் பட்டான் அதிகாரிக்கு.

அவருடைய வீட்டு வேலைகளை கவனிப்பது மாத்திரமல்ல அவரின் ஐந்தாம் ஆண்டு பெண் குழந்தையை பாடசாலைக்கு கொண்டு செல்வது முதல் அவளது தேவைகள் அனைத்தையும் தான் செய்த பாவத்தை போக்குவதாக கருதி கண்ணும் கருத்துமாக செய்து வந்தான்.

வேளா வேளைக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடமைபுரியும் தனது எஜமானனுக்கு உணவு எடுத்துச் செல்வது வழமை. ஒரு நாள் அதிகாரியின் மதிய உணவை எடுத்துச் சென்றிருந்த வேளையில் பெண் சிறைக் கைதிகள் பிரிவில் ஒரு பெண் சிறைக் கைதி அங்குள்ள பூ மரங்களுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணின் முகம் நன்றாக பார்த்து பழக்கப்பட்ட ஒரு முகமாக தோன்றியது. அவளைப்பற்றி சரியான ஞாபகம் உடன் வராதபடியால் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பெண் அதிகாரி ஒருவரிடம் அவளைப் பற்றி விசாரித்தான் ஞானசேகரன்.

அவளா? அவள் இங்கு வந்து மூன்று வருடத்திற்கு மேலாகிறது. அவள் ஓர் அனாதை போல் தெரிகிறது. ஏனென்றால் அவளைப் பார்ப்பதற்கு இதுவரை ஒருவருமே வரவில்லை. திருமணம் செய்து கொண்டவளாம் என்று கூறுகிறாள். இதுவரை அவள் கணவன் கூட வந்து எட்டிப் பார்க்கவில்லை.

அப்படியா! என்ன குற்றத்திற்காக வந்திருக்கிறாள்? என வினவினான் ஞானசேகரன்.

வேறு என்ன விபச்சாரம் தான் என பதிலளித்ததுடன் அவளின் கணவன் கூட தனது சொந்தக் குழந்தையை கொலை செய்த பாவி. இவர்களுக்கெல்லாம் சவுதி நாட்டு சட்டதிட்டங்கள் தான் மருந்து என்றார் உத்தியோகத்தர்.

அவள் யாரென அவ் உத்தியோகத்தர் கூறி முடிக்கும் முன்பே அவனுக்கு விளங்கியது. செய்வதறியாது மிகக் கவலையுடன் அங்கிருந்து சென்றான் ஞானசேகரன்.



- பாலையூற்றான் -

# இப்படியும் நடக்கலாம்

## இரட்டையர் சாதனை



அமெரிக்காவின் Beavercreek என்ற நகரத்தை சேர்ந்த ஒரு இரட்டையர்கள் கடந்த 63 வருடங்களாக உடல் ஒட்டிய நிலையில் வாழ்ந்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள Beavercreek என்ற நகரைத்தை சேர்ந்த Ronnie மற்றும் Donnie Galyon ஆகிய ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் சமீபத்தில் தங்களுடைய 63வது பிறந்த நாளை கொண்டாடினர். இதன்மூலம் அதிக நாட்கள் வாழ்ந்த ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் என்ற பெருமையை இவர்கள் அடைந்துள்ளனர்.

## மிகப்பெரிய கொலை

கனடாவின் மேற்கு மாகாணமான அல்பெர்ட்டா நகர் எடமோண்டன் பகுதியை சேர்ந்தவர் பூ. லாம் (வயது 53). இவர் கடந்த திங்கட்கிழமை இரவு இரண்டு குழந்தைகள் உட்பட 8 பேரை சுட்டுக் கொலை செய்து தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவர்களில் 6 பேர் 25 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள், மற்ற இருவர் குழந்தைகள் ஆவர். பின்னர் லாம் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

## பிரபலங்களுக்கான விருது

பிரித்தானியாவில் ஒவ்வொரு துறையிலும் சிறப்பான சேவை செய்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ராணி எலிசபெத் புத்தாண்டு சிறப்பு விருது வழங்குவார். அதேபோல், கடந்த 2014ம் ஆண்டில் சிறந்த பங்களிப்பு செய்தவர்களுக்கான



1,164 பேரின் விருது பட்டியலை நேற்று பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது. இந்த விருது வரும் யூன் மாதம் ராணி எலிசபெத்தின் பிறந்த நாளின் போது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

- சிங்கப்பூர் 2015ஆம் ஆண்டை பொன்விழா ஆண்டாக கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி 01.01.2015 அன்று சிங்கப்பூரில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் விலை மதிப்புடைய பரிசுகளை வழங்கியதாக சிங்கப்பூர் அரசு தனது அதிகாரபூர்வ இணையதளத்தில் அறிவித்துள்ளது.
- அவுஸ்திரேலியா கடற்கரைகளில் சூரிய குளியலுக்கு இன்று முதல் தடை விதிக்கப்படுவதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
- பிரான்ஸ் நாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து ஐஸ்கட்டி மழை பெய்து வருவதால் அந்நாட்டின் சாலைகளில் 50செமி வரை பனி உறைந்து காணப்படுகிறது. இதனால் போக்குவரத்து தடைபட்டு சுமார் 15000 வாகனங்கள் ஆங்காங்கே நகர முடியாமல் தவித்து வருகின்றன.
- அமெரிக்காவின் Philadelphia மாகாணத்தை சேர்ந்த ஒரு கர்ப்பிணி பெண், சுரங்க ரயிலில் சென்று கொண்டிருந்தபோது திடீரென பிரசவ வலி எடுத்ததால் ரயிலில் பயணம் செய்த இரண்டு போலீஸ்காரர்கள் அந்த பெண்ணுக்கு பிரசவம் பார்த்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் முடிவு யாருக்கு சாதகம்??

அரசியல் ஆய்வு

நீண்ட மௌன போராட்டத்துக்கு பின்னர், எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுக்குமா அல்லது இல்லையா என்ற கேள்வி கடந்த சில வாரங்களாக நீடித்துவந்தது. ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே இந்தத் தேர்தலில், தமிழ் மக்கள் கண்டிப்பாக வாக்களிக்கவேண்டும் என்று கோருவது என்று முடிவு எடுத்திருந்த நிலையில், அதற்கு எஞ்சியிருந்தது இரண்டே இரண்டு தெரிவுகள் மட்டுமே. ஒன்றில், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் அல்லது மனச்சாட்சிப்படி வாக்களிக்குமாறு கோரவேண்டும். இந்த இரண்டு தெரிவுகளில், மனச்சாட்சிப்படி தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்று கோரும் முடிவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவோ அல்லது எதிரணியினரோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த தவறியிருந்தனர். அதாவது, தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் அனைத்துக்கும் என்று இல்லாவிட்டாலும், சில முக்கிய பிரச்சினைகளின் தீர்வு குறித்த சில உறுதிமொழிகளை யாவது பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பியது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால், அத்தகைய எந்த வாக்குறுதிகளையும் கொடுக்க எதிரணி தயாராக இருக்கவில்லை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏமாற்றம் எனலாம்.

மேலும், எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தோ, அவற்றுக்கு தீர்வு காணும் வழிமுறைகள் குறித்தோ எந்த வாக்குறுதியும் வழங்கப்படவில்லை. அடுத்து, தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கு எதிரான போக்கையுடைய சிங்களத் தேசியவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமய, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் மீது செல்வாக்கு செலுத்தும் நிலை அதிகமாகவே காணப்படுகிறது. இவற்றையெல்லாம் மீறி, பொதுவேட்பாளர் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து செயற்படுமளவுக்கு அவர் ஒன்றும் தமிழ் மக்களுக்காக பரிந்து பேசிய ஒருவரோ, தமிழ் மக்களால் வித்தியாசமான அரசியல்வாதியாக பார்க்கப்பட்ட ஒருவரோ அல்ல. இவை போன்ற காரணங்களால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முடிவை அறிவிப்பதில் பலத்த போராட்டங்களை சந்திக்கவேண்டிய நிலையேற்பட்டது. வெறுமனே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கவேண்டுமா என்ற கேள்வி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினரிடம் இருந்துவந்திருந்தது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில், அதற்கு துணைபோவது சரியான அரசியல் முடிவா என்ற விவாதம் இம்முறை கடுமையாகவே இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்திருந்தது. அப்போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் சந்திக்கநேரிட்டது. அதுபோன்றே, இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொதுவேட்பாளரை ஆதரிக்கவேண்டுமா, ஒதுங்கியிருக்க வேண்டுமா என்ற விவாதங்கள் சூடுபிடித்திருந்தன. எதிரணியின் பொதுவேட்பாளர் தரப்பிலிருந்து சாதகமான வகையில் எந்த சமிக்ஞையும் வெளிக்காட்டப்படாத நிலையிலேயே, த.தே.கூட்டமைப்பு தீர்ப்பை மக்களிடம் விட்டுவிடும் முடிவை எடுக்கலாம் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது. ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவிலிருந்து திரும்பியதும், கொழும்பில் நடத்தப்பட்ட கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், பொதுவேட்பாளரை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டது. தாம், மக்கள் பிரதிநிதிகளுடன் நடத்திய நீண்ட கலந்துரையாடல்களின் பின்னரே, ஒருமித்த கருத்துடன் இந்த முடிவை எடுத்துள்ளதாக த.தே.கூ கூறியிருக்கிறது. இது எந்தளவுக்கு சரியானது என்பது கேள்விக்குரிய விவகாரமாக இருந்தாலும், த.தே.கூ "ஊரோடு ஒத்தோடும்" முடிவை எடுத்துள்ளதையிட்டு ஆச்சரியப்பட முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் ஒதுங்கி நிற்கும் முடிவை எடுத்திருந்தாலும் கூட, எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு தெரிவிக்காது போனாலும் கூட, தமிழ் வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்கப் போகின்றனர் என்பது ஏற்கெனவே தெளிவான விடயம்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில், அரச எதிர்ப்பு அலை மிகத் தீவிரமாக வீசுகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. தெற்கில் இருப்பதை விட, வடக்கு, கிழக்கிலேயே அரச எதிர்ப்பு அலை தீவிரமாக உள்ளது. 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்பட்ட தேர்தல்களில், அரசாங்க எதிர்ப்பு அலை எந்தளவுக்கு மோசமாக வீசியது என்பதை எடுத்துப் பார்த்தால், இம்முறை நிலை எப்படியிருக்கும் என்பதை புரிந்துகொள்ளலாம். உள்ளூராட்சி, மாகாணசபை, ஜனாதிபதி, நாடாளுமன்ற தேர்தல்களில் அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை தமிழ் வாக்காளர்கள் மிகத்தெளிவாக வெளிப்படுத்தி யிருந்தனர். அதிலும், மாகாணசபைத் தேர்தலில் அரச தரப்பு மிகப்பெரியளவில் மண் கௌவும் நிலையேற்பட்டது. அந்தப் படுதோல்வியிலிருந்து அரச தரப்பு இன்னமும் மீளாத நிலையில், ஜனாதிபதித் தேர்தலிலும் அதே நிலை தொடரும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. த.தே.கூ, எதிரணியின் பொதுவேட்பாளரை ஆதரிக்குமாறு கோரினாலும் சரி, கோராதுபோனாலும் சரி, தமிழ் வாக்காளர்களை அரச எதிர்ப்பு அலையே, பொதுவேட்பாளரை நோக்கி இழுத்துச் சென்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படி யானதொரு நிலையில், த.தே.கூ ஒதுங்கிநிற்பது சரியானதா என்ற கேள்வி அவர்கள் முன் எழுந்திருக்கலாம். அதாவது, ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்கள் விரும்பும்போது, அதற்கு துணையாக செயற்படாமல் ஒதுங்கிநிற்பது, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான த.தே.கூவின் பொறுப்புடைய செயலாக அமையாது என்ற கருத்தும் அவர்களிடத்திலிருந்தது.

தமிழ் மக்களின் கருத்தை அறிந்து, அவர்களை அரசியல் ரீதியாக வழிநடத்த வேண்டிய பொறுப்பிலிருக்கும் த.தே.கூவுக்கு, இந்த விவகாரத்தில் ஏதாவதொரு தெளிவான முடிவை அறிவிக்கவேண்டிய அழுத்தமும் காணப்பட்டது. பொதுவேட்பாளரை மறைமுகமாக ஆதரிப்பதால், எதுவும் நடக்கப்போவதில்லை. அதைவிட வெளிப்படையாக ஆதரித்துவிட்டுப் போகலாம் என்ற கருத்து மேலோங்கிய நிலையிலேயே, த.தே.கூவின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், த.தே.கூ ஒரு விடயத்தில் மிகத் தெளிவான நிலைப்பாட்டை கையாண்டிருக்கிறது. தமது முடிவை தெளிவுபடுத்தி த.தே.கூ வெளியிட்ட அறிக்கையை கவனமாக படித்துப் பார்ப்பவர்களுக்கு அந்த விடயம் தெளிவாக புரியும். அந்த அறிக்கையில், பொதுவேட்பாளர் மீது எந்த நம்பிக்கையையும் கொடுப்பதற்கு த.தே.கூ முன்வரவில்லை. அந்த அறிக்கை முழுமையாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டியது ஏன் என்பதை நீண்ட பந்திகளில் விபரித்துவிட்டு, பொதுவேட்பாளர் முன்வைத்துள்ள திட்டங்களில் தமக்கு உடன்பாடு உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளது த.தே.கூ. இதன் அடிப்படையிலேயே, பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்குமாறு தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றது.

எனினும், அந்த அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், என்ன நன்மை கிடைக்கும் என்றோ, அவர் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் குறித்தோ விபரிக்கப்படவில்லை. அது, பொதுவேட்பாளர் தமிழ் வாக்காளர்களுக்காக எந்த வாக்குறுதியையும் கொடுக்க முன்வராத பலவீனத்தின் வெளிப்பாடு என்று கூட குறிப்பிடலாம். இந்நிலையில், பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்க த.தே.கூ முன்வந்திருந்தாலும், அவரது சார்பில் தமிழ் மக்களுக்கு எந்த வாக்குறுதியையும் கொடுக்கத் தயாராக இல்லை என்பதையும் கவனிக்கவேண்டும். பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆட்சி அமைத்தால், ஒருவேளை வடக்கு மாகாணசபை மீதான கெடுபிடிகள் தளர்ந்து, மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் புதிய உறவு ஏற்படக்கூடும். மீள்குடியமர்வு, காணி அபகரிப்பு தடுப்பு உள்ளிட்ட விவகாரங்களிலும் சில முன்னேற்றங்கள் எட்டப்படலாம். ஆனால், அதற்கப்பால் பெரிதாக எதிர்பார்க்கின்ற எந்த மாற்றத்தையும் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவினால் செய்யமுடியாது. அவரிடமிருந்து தமிழ் மக்கள் அதனை எதிர்பார்க்கவும் முடியாது.

தற்துணிவுடன் எதையும் செய்வதற்கு அவருக்கென்று ஒரு வலுவான கட்சியும் கிடையாது. அவரை சுற்றிவர நிற்பவர்களும் சாதாரணமானவர்கள் அல்ல. இத்தகைய நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வகையிலும் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கையூட்டமுடியாது. அவ்வாறு நம்பிகையூட்டும் முடிவொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்குமேயானால், அது அவர்கள் இழைக்கும் மிகப்பெரிய வரலாற்று தவறாகவே அமைந்துவிடும் ஆபத்துள்ளது. எனவே, மிகக்கவனமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது. அந்த முடிவை நாசூக்காகவும் வெளிப்படுத்தியிருக்கிறது. என்றாலும், தமிழ் மக்களை பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு கோரியதன் மூலம், அவர்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து, அதற்கேற்ப செயற்படவேண்டியதும், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மூலம் அவற்றை தீர்க்கவும் முயற்சிக்கவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருப்பதையும் மறந்துவிடமுடியாது. இதனிடையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க எடுத்துள்ள முடிவு, சிங்கள மக்களின் வாக்குகள் அவருக்கு கிடைப்பதை குறைத்துவிடும் என்றும் அது ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்றும் சில தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

கடந்தமுறை, ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவை ஆதரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவினால், சிங்கள மக்கள் பெருமளவில் அவருக்கு வாக்களிக்க தவறியதாக ஒரு கருத்து நிலவுகிறது. கடந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில், சிங்கள மக்கள் மத்தியில் முற்றுமுழுதாக ஆதிக்கம் செலுத்தியது போர் வெற்றி மட்டுமே. போருக்கு தலைமை தாங்கிய தளபதியா அல்லது போரை நடத்திய நாட்டின் தலைவரா என்ற கேள்வி எழுந்தபோது, சிங்கள வாக்காளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமே சார்ந்துநின்றனர். சரத் பொன்சேகா மீது மதிப்பு வைத்திருந்தாலும், நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு கட்சி அமைப்பு மற்றும் செல்வாக்கின் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறமுடிந்தது. ஆனால், இப்போது போர் வெற்றி அலை இல்லை. அரச எதிர்ப்பு அலை மட்டுமே காணப்படுகிறது. இத்தகைய நிலையில், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதால், சிங்கள வாக்காளர்கள், அவரை நிராகரிப்பர் என்று முற்றிலும் எதிர்பார்க்கமுடியாது. எவ்வாறாயினும், கணிசமான சிங்கள வாக்காளர்கள் அவ்வாறு சிந்திப்பதற்கு சாத்தியங்கள் இருப்பதை மறுக்கமுடியாது.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெற்ற ஒரே காரணத்துக்காக, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சிங்கள மக்களால் தோற்கடிக்கப்படுவாரேயானால், அது இலங்கைத்தீவில் சிங்களப் பேரினவாதம் எப்போதும் அழியப்போவதில்லை என்பதையே எடுத்துக்காட்டும். அது, இலங்கைத்தீவு பூகோள ரீதியாக ஒன்றுபட்டிருந்தாலும், அக ரீதியாக பிளவுபட்டே யிருக்கிறது, அதனை ஒருபோதும் ஒட்டவைக்கவே முடியாது என்பதையே சுட்டிக்காட்டும்.




– – கேசஞ்சயன் – –

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. கமலாவின் வயதின் மூன்று மடங்குடன் விமலாவின் வயதைக் கூட்ட 7 கிடைக்கும். கமலாவின் வயதின் இரு மடங்கிலிருந்து விமலாவின் வயதைக் கழிக்க -2 கிடைக்கும். எனின், ஒருங்கமைசமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் கமலா மற்றும் விமலாவின் வயதுகளைக் காண்க.

02. ரூபா 30,000 விலையுள்ள தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றை முதலில் ரூபா 12,000 செலுத்தியும் மீதியை ஒவ்வொன்றும் ரூபா 1,695 கொண்ட 12 சமமாத தவணைக் கட்டணங்களில் செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.
அ. முதல் செலுத்துகையின் பின் எஞ்சிய தொகை யாது?
ஆ. ஒரு மாதத்தில் செலுத்தும் கடனின் பெறுமானம் யாது?
இ. செலுத்த வேண்டிய மொத்த வட்டி யாது?
ஈ. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
உ. ஒரு மாத அலகிற்கான வட்டி எவ்வளவு?
ஊ. வருட வட்டி வீதம் யாது?

03. பின்வரும் ஈட்டுக்களின் ஆகாரம் யாது? 3, 5, 6, 9, 5, 1

04. ஒரு பக்கத்தின் நீளம் 4.6cm ஆன சமபக்க முக்கோணி ஒன்றின் சுற்றளவைக் காண்க.

05. 8 புத்தகங்களின் விலை ரூபா x ஆகும். ஒரு புத்தகத்தின் விலை யாது?

06. $4:5=8:m$ எனின், m இன் பெறுமானத்தைக் காண்க.

07. கூட்டுக. $77+7.7$

08. சுருக்குக. $11+(-7)$

09. கேக் பெட்டி ஒன்றின் உயரம் 32.5cm ஆகும். அத்தகைய 5 பெட்டிகள் ஒன்றன் மீதொன்றாக வைக்கும் போது மொத்த உயரத்தை மீற்றரில் தருக.

10. ஒருவர் ரூபா 250 இற்கு வாங்கிய பொருள் ஒன்றை ரூபா 300 இற்கு விற்றார். அவருக்கு கிடைத்த இலாபம் மற்றும் இலாப சதவீதம் யாது?

11. 2.5 கிலோமீற்றரை மீற்றரில் காட்டுக.

12. $x+5=-8$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

13. $^1/_3$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

14. ஒரு கிலோகிராம் சீனியின் விலை ரூபா 42 எனின், 500 கிராம் சீனியின் விலை யாது?

15. ஒரு பென்சிலின் விலை ரூபா 6.50 ஆகும். அத்தகைய 1 டசின் பென்சிலின் விலை யாது?

16. மெல்லிய கம்பித் தடம் ஒன்றினால் 14cm ஆரையுடைய வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட கம்பித்தடம் வெட்டி நீட்டப்பட்டு சதுர வடிவத் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இச்சதுர வடிவ தடத்தின் பரப்பளவு யாது?

17. சமன்பாடு $-3x + y = 5$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறனையும் வெட்டுத்துண்டையும் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?
1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.

02. திருகாணி எவ்வகைக்குரிய பொறியாகும்?
1. நெம்பு 2. சில்லும் அச்சாணியும் 3. சாய்தளம் 4. கப்பி

03. யூரியா சிறுநீரில் காணப்படும் பிரதான நைதரசன் கழிவுப்பொருளாகும். யூரியா உருவாக்கத்திற்கு காரணமான போசணைப் பதார்த்தமும் யூரியா தோற்றுவிக்கப்படும் அங்கத்தையும் சரியாகக் காட்டுவது எது?

| போசணைப் பதார்த்தம் | அங்கம் |
|---|---|
| 1. குளுக்கோசு | ஈரல் |
| 2. குளுக்கோசு | சிறுநீரகம் |
| 3. அமினோவமிலம் | ஈரல் |
| 4. அமினோவமிலம் | சிறுநீரகம் |

04. சூழலில் காட்டப்பட்டுள்ள அங்கியொன்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
(அ) செதில்களைக் கொண்ட உலர்ந்த தோல்
(ஆ) அவயவங்களைக் கொண்டிருக்கவில்லை
(இ) உடலில் புறவன் கூடு காணப்படவில்லை.
இவ்வியல்புகளைக் கொண்ட விலங்கு வகுப்பு யாது?
1. அம்பியா 2. ரெப்ரீலியா 3. மமேலியா 4. மொலஸ்கா

05. பெண்ணின் குரல் ஒலியை ஆணின் குரல் ஒலியிலிருந்து வேறுபடுத்தி இனங்காணப் பயன்படும் ஒலியின் சிறப்பியல்பு எது?
1. பண்பு 2. சுருதி 3. உரப்பு 4. அலைநீளம்

06. அமிழ்ப்பு வெப்பமாக்கியில் இருந்து அதிக வெப்பத்தைப் பெறுவதற்கு செய்யக்கூடாத மாற்றமாக அமைவது?
1. சுருளின் நீளத்தை அதிகரித்தல்
2. கம்பியின் குறுக்குவெட்டு முகத்தை அதிகரித்தல்
3. கம்பியின் இரு முனைகளுக்கிடையில் அழுத்த வேறுபாட்டை அதிகரித்தல்
4. கம்பியினூடு பாயும் மின்னோட்டத்தை அதிகரித்தல்.

07. கிற்றார் ஒன்றிலிருந்து உயர் சுருதியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளில் பயனற்றது எது?
1. மிக மெல்லிய கம்பியை அருட்டுதல்
2. கம்பியை பலமாக அருட்டுதல்
3. கம்பியின் நீளத்தைக்குறைத்தல்
4. கம்பியின் இழுவையை அதிகரித்தல்

08. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
1. கம்பமேலணி 2. கனமேலணி 3. படைகொண்ட மேலணி
4. பிசிர் மேலணி

### தமிழ் இலக்கியத் தொகுப்பு

**எதிர்வரும் வாரம் முதல் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தரம் 10 மற்றும் 11ம் தரங்களுக்கான நீதிப்பாடல்களும் அவற்றிற்கான பொருள்களும் தொகுத்து வழங்கப்படும்.**

ஆசிரியர் : அ. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : வரலாறு

01. இலங்கைக்க கட்டடக்கலை, சிற்பக் கலை ஆகியவற்றில் முனைப்பான இந்துச் செல்வாக்குகள் எக்காலங்களில் காணப்பட்டன?
1. அனுராதபுர - தம்பதெனியா
2. பொலன்னறுவ - கம்பளை
3. யாப்பகூவ - குரநாகல் 4. கண்டி - கோட்டை

02. 15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் விஜயநகரப் பேரரசிற்குக் கீழ்ப்படிந்தமை பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் மூலம் பின்வருவனவற்றில் யாது?
1. பனாக்கடுவாச் செப்பு பட்டயம்
2. ஆலம்புண்டிச் செப்புப்பட்டயம்
3. வல்லிபுரம் பொற் பட்டயம்
4. செகராஜசேகர மாலை என்னும் நூல்

03. இலங்கைப் பாராளுமன்றத்தில் இருந்த இரு மன்ற முறைமை எந்த அரசியலமைப்பின் மூலம் இரத்து செய்யப்பட்டது?
1. கி.பி 1931 2. கி.பி 1948
3. கி.பி 1972 4. கி.பி 1978

04. புராதன நீர்ப்பாசனத் தொழினுட்பவியலின் உன்னத அம்சமாகக் கருதப்படும் கலிங்கற்றொட்டியின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழில்
1. வாவி அணைக்கட்டிற்குக் குறுக்கே மடைக்கதவில் உண்டாகும் நீரமுக்கத்தைச் சமப்படுத்தல்.
2. வாவியில் உள்ள மேலதிக நீரை வெளியேற்றல்
3. வாவியின் அலையடிப்பினால் வாவி அணைக்கட்டு கழுவுப்படுதலைத் தடுத்தல்
4. வாவியில் சேரும் வண்டல் கால்வாயில் பாய்தலைத் தடுத்தல்.

05. மௌரிய அசோகப் பேரரசின் நிருவாக ஒழுங்கமைப்பில் தர்ம மகாமாத்திரா என்ற அலுவலர்களிடம் கையளிக்கப்பட்ட பணி?
1. இந்தியாவில் புத்தசமய முன்னேற்றத்திற்காகச் செயற்படுல்
2. அரசாங்கத்திற்கு அர்த்தத்திலும் தர்மத்திலும் ஆலோசனை அளித்தல்
3. அசோகனின் தர்மத்தைப் பேரரசில் நடைமுறைப்படுத்தல்
4. இந்தியாவிற்குப் புறத்தே உள்ள பிரதேசங்களில் புத்தசமயத்தைப் பரப்புதல்.

### பகுதி 02.

01. இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலம் பற்றிய தகவல்கள் குகை அகழ்வுகளிலிருந்து அறியப்படுகின்ற அதே வேளை ஆரியப் புலப்பெயர்ச்சி பற்றிய தகவல்கள் வரலாற்றேடுகளிலிருந்து அறியப்படுகின்றன.

அ) வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த மனிதன் பின்பற்றிய இறுதிக்கிரியைப் பழக்கவழக்கங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் மூன்று குகைகளின் பெயர்களை எழுதுக

ஆ) இலங்கையில் ஆரியக் குடியிருப்புகளின் ஆரம்பத்திலும் பரவுகையிலும் செல்வாக்குச் செலுத்திய நான்கு இந்தியப் புலம்பெயர் குழுக்களைக் குறிப்பிடுக.

இ) பண்டுகாபய அரசனின் காலத்தின் முககியத்துவத்தை இரு காரணிகளைக் கொண்டு விபரிக்க.

ஈ) பண்டைய இலங்கையில் இருந்த மிகச் சிறிய நிருவாக அலகாகக் கருதப்படும் கிராம சபை செயற்பட்ட விதத்தை மூன்று விடயங்களைக் கொண்டு விபரிக்க.

## Grammar

Ex 01 :-
***Select the correct phrase from the box and complete he notice.***

1. ................................ Reduce your speed.
2. ................................ Do not use horns.
3. ................................ Put on your seat belt.
4. ................................ Let's stand up now.
5. ................................ Let's worship.
6. ................................ Keep umbrella with you.

a The flight is going to take off.
b. In rainy season.
c. Pedestrian crossing ahead.
d. Hospital ahead.
e. National anthem is going to be sung.
f. In a temple.

Ex 02 :-
***You want to go to the public library. Write a note to your friend in inviting him / her to the library.***
*Include the following*
☐ when you want to go
☐ what time you want to go
☐ where you want him / her to meet you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைப்பு

மூதூர் நிருபர்

திருகோணமலை காந்திநகர் காந்தி சனசமூக நிலையத்தின் சார்பாக 2015 பாலர் பாடசாலையில் கல்வி பயில உள்ள மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 25.12.2014 மாலை காந்திநகர் பாலர் பாடசாலையில் இடம் பெற்றது.இந்நிகழ்விற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சா.முரளிதரன் மற்றும் கிராம சேவையாளர் அ.சிவானந்தம் விழுது நிறுவன உத்தியோகத்தர் வ.ராஜ்குமார் சனசமூகநிலைய தலைவர் சு.விக்னேஸ்வரன் ஆகியோரை படங்களில் காணலாம்.







## "கலைச்சங்கமம் – மட்டில்"

ரிதம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் ரிதத்தின் கலைச் சங்கமம் நிகழ்வு 28.12.2014 அன்று கழகத்தின் முன்னால் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான விஜயராஜ் அவர்களின் தலைமையில் மட் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

புளியந்தீவு ரிதம் இளைஞர் கழகத்தின் 09ம் ஆண்டு பூர்த்தியையும் இவ் வருட இறுதியினை சிறப்பிக்கும் முகமாகவும் மேற்படி நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. அத்துடன் அப்பிரதேசத்தில் இயங்கும் ஏனைய கழகங்களாகிய கலாபம் கலை மன்றம், இளைஞர் முன்னேற்றக் கழகம், மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து இந்நிகழ்வினை மேற்கொண்டது.

# புத்தாண்டை ஒட்டி விசேட பூசை

வரலாற்றுச்சிறப்பு மிக்க திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் 2015 புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு 01.01.2015 அன்று அபிஷேகங்களும், விசேட பூசைகளும் இடம்பெற்றன. இவ்வாண்டு அனைத்து இராசியினருக்கும் பொதுவாகவே நற்பலன் தரும் ஆண்டாகவே அமையப்பெற்றுள்ளது என்பதுடன் நாட்டில் எப்பொழுதும் சாந்தியும் சுபீட்சமும் நிறைந்திருக்க வேண்டும் எனவும் அடியார்கள் குறை நீங்கி இன்பமாக வாழ வேண்டும் எனவும் கோவில் ஆதீனகர்த்தா வாழ்த்துரை வழங்கியுள்ளார். அத்துடன் அடியார்கள் அனைவருக்கும் தமது புத்தாண்டு வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.



சிவாச்சாரியார்கள் பக்தர்களுக்கு காளாஞ்சி வழங்குவதையும், பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.





## லக்ஷ்மி நாராயணன் சிறப்பு பூசை சுவர்க்க வாசல் திறப்பு

தன்யா



01.01.2015 புத்தாண்டு தினத்தன்று வைகுண்ட ஏகாதசி கூடிவந்தமையை இட்டு லக்ஷ்மி சமேத நாராயணன் ஆக எழுந்தருளியிருக்கும் லக்ஷ்மி நாராயணன் கோவிலில் இரவு சுவர்க்க வாசல் திறக்கும் நிகழ்வு வெகு விமரிசையாக இடம்பெற்றுள்ளது. பொதுவாகவே வைகுண்ட ஏகாதசி அன்று இறப்பவர்கள் எத்தனை கொடூர பாவங்களைப் புரிந்திருந்தாலும் நேரடியாக சுவர்க்கத்திற்குச் செல்வார்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதே போல் நள்ளிரவில் இடம்பெற்ற இப்பூசையில் வருகை தந்திருந்த அனைத்து அடியார்களுக்கும் துளசி இலை கொடுக்கப்பட்டு ஐயர் நாராயணரின் ஒவ்வொரு திருநாமத்தையும் கூறும் போது அடியார்கள் குறிப்பிட்ட ஒரு மந்திர வாசகத்தை உச்சரித்து விரிக்கப்பட்டிருந்த வெள்ளை நிற துணியின் மீது துளசி இலையை எறிந்தனர். பின்னர் அவ் இலைகளால் நாராயண சுவாமிக்கும் லக்ஷ்மி தேவிக்கும் பூசைகள் இடம்பெற்று பின்னர் சயன பூசை எனும் நிகழ்வு இடம்பெற்றது. அதாவது கடவுளரை துயில் கொள்ளச் செய்வது. பல்வேறு பஜனைகளும், பாட்டுக்களும் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. இப்பூசையில் கலந்து கொண்டோர் வரும் பத்து வருடங்களுக்கு அனைத்து கடாட்சங்களும் கிடைக்கப்பெற்று செய்த பாவங்களிலிருந்தும் விடுபடுவர் என்பது ஐதீகம்.

பக்தர்களுக்கென போக்குவரத்துக்காக பேருந்து சேவையும், உணவும் விரதம் நோற்றோருக்கான பிரசாதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

# குருக்களுக்கு குத்தாட்டம் பொருந்துமா?!! தமிழ்த் திரைப்படங்கள் செய்வதென்ன!!!

கடந்தவார தொடர்ச்சி . . .

ஆலயத்திலே கவர்ச்சி உடையில் குத்தாட்டமும், தகாத வார்த்தைப் பிரயோகமும், கொலைகளும் அரங்கேற்றப்படும் போது ஆலயப் புனிதம் எங்குள்ளது என்பதைப் பூதக்கண்ணாடி கொண்டுதான் தேட வேண்டியுள்ளது.

இங்கு நான் குறிப்பிட்டவை வெகுசில உதாரணங்களே. ஒருநாள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகப் பார்ப்பீர்கள் எனில் இதைவிடக் கூடிய உதாரணங்கள் உங்களுக்கும் சிக்கும். திரைப்படங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தினம் தினம் இவ்வாறான இந்துமத அவமதிப்பு நிகழ்வுகளை வெளிக்கொணரும் போது அது உலக அரங்கில் சகலரையும் சென்றடைகிறது. நாமே எமது கலாசாரத்தை மதியாது, அவமதித்து, திரிபூட்ட விளையும் அழகைப்பார்க்கும் இவ்வுலகம் மறுபடியும் எப்படி எம்மதத்தையும், பண்பாட்டையும் கணக்கிலெடுத்து மதிக்கும்????!

ஓர் விடயத்தை உன்னிப்பாக அவதானித்துப் பாருங்கள்ளூ எம்முடைய சகோதர மதங்கள், கலாச்சாரங்கள் பற்றி எப்போதாவது ஓர் இழிவுபடுத்தல் சிறிய அளவிலேனும் திரைப்படங்களில் வெளியாகும் போது, அங்கு எழும் எதிர்ப்புக்கள் அத்திரைப்படம் தடைசெய்யப்படும் அளவிற்கு சக்திவாய்ந்தவையாக மாற்றம் பெறுகின்றன. காரணம் அவர்கள் தமது மதத்தையும் கலாசாரத்தையும் காக்கக் கொண்டுள்ள ஆர்வமும், கடப்பாடுமாகும். ஆயினும் எமக்கு நாள்தோறும் நிகழும் அவமதிப்புகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது. இது இன்றைய நிலையைப் பொறுத்தவரையில் இந்துமதத்தைக் கடைப்பிடிக்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். எம்முடைய கலாச்சாரம் மற்றும் அதிலேற்படும் மாற்றங்கள் குறித்து நாம் எவ்வாறு அவதானத்துடன் இருக்கிறோம் என்பதை மிக முக்கியமான மைல்கல்லாக நான் காண்கிறேன்.

இவை ஒருபுறமிருக்க இந்துமதத்தைக் கடைப்பிடிக்கும் நபர் ஒருவருக்கு அது தொடர்பான அடிப்படை அறிவேனும் எந்த அளவுக்கு உள்ளது என்பது தற்காலத்தில் கேள்விக்குறியே. நாம் அணியும் சிவசின்னங்கள் குறிப்பது எதனை? ஆலயம் ஒன்றிற்குச் சென்று சரியான முறையில் வழிபடுவது எப்படி? என்பது போன்ற மிகச்சிறிய வினாக்களை எழுந்தமானமாக வினவும்போது அதிக சந்தர்ப்பங்களில் நீங்கள் பூரண பதிலொன்றைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள்.

ஓர் சமய நிகழ்வில் பஞ்சபுராணம் பாடும்படி யாரேனும் கேட்டுக்கொண்டால், அங்கு பிரசன்னமாகியிருக்கும் இந்துக்களில் எத்தனைபேருக்கு சரிவரத் துலங்க முடியும்? என்பது தற்காலத் தடுமாற்றம். உண்மையில் இவ் அடிப்படைத் தகுதிகள் அற்ற ஒருவர் "நான் இந்து" என்று சொல்லிக் கொள்வதில் எந்தப் பலனுமில்லை. ஒப்பீட்டளவில் ஆடம்பரமானதும், கட்டுப்பாடுகள் குறைந்ததுமான மதம் எமது இந்துமதமே. அது அவ்வாறு அமையப்பெற்றதற்கு ஒருவேளை மக்கள் நலன் காரணமாக அமையலாம். ஆனால் இன்று ஆடம்பரத்தையும், குறைவான கட்டுப்பாடுகளையும் நாம் பாவிக்கின்ற விதம் அளவுக்கதிகமானதாகவும்,

## மக்கள் முரசு

ஆழ்பொருளும் இல்லாத இடத்தில் ஆடம்பரம் என்பது எவ்விதத்திலும் பொருள் தராது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆகவே முதலில் எமது மதத்தையும், கலாசாரத்தையும் மதிக்கக் கற்றுக் கொள்வோம். எமது மதம் சார்பான அடிப்படை அறிவையேனும் பெற்றுக்கொள்வோம். அதன்பின் தன்னிச்சையாகவே பிறரையும் பிறமதங்களையும் நீ மதிப்பாய். அவை தொடர்பிலும் படிப்பாய். சமாதானமும் சகவாழ்வும் இங்குதான் சாத்தியமாகும். துகிலுரியப்படும் இந்துத் தாயின் துயர் துடைக்க உன்பங்கையும் இன்றிலிருந்தே தொடங்கிவிடு. இல்லையேல் அவமானப்படுகின்ற தாய்க்கு நீ பிள்ளையென்று சொல்லிக் கொள்வதில் பொருளேது????????



- முற்றும் -

மெய்யுழகன் குகேஸ்
(மருத்துவபீடம் - பேராதனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 01


கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் கூற்று பிழையானதற்கான காரணம் என்ன என்பதை தந்துள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

01. எமது நாட்டின் தேசிய பறவையாகிய மயிலில் பல நிறங்கள் காணப்படுகின்றன.
    1. எமது நாட்டிற்கு தேசிய பறவை இல்லை.
    2. எமது நாட்டிற்குரிய தேசிய பறவை மயில் இல்லை.
    3. மயில் ஒரு பறவை இல்லை.

02. பாடசாலைகளில் காணப்படும் கழிவுப் பொருட்கள் இடப்படும் நீல நிறப் பெட்டியில் உக்கக் கூடிய பொருட்கள் இடப்படும்.
    1. பாடசாலையில் உக்கக்கூடிய பொருட்கள் காணப்படுவதில்லை.
    2. நீலப்பெட்டிகள் காணப்படுவதில்லை.
    3. நீல நிறப்பொட்டியில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்கள் இடப்படும்.

03 ஆம், 04 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவுடன் தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

03.



(1) (2) (3)

04



(1) (2) (3)

கீழே காணப்படும் 05, 06 வினாக்களில் முதலில் தந்துள்ள இரண்டிற்கும் இடையில் ஒரு வகையில் தொடர்புண்டு. அதே போன்ற தொடர்பைக் காட்டும் வேறு இரண்டு சொற்களை தந்துள்ள விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

05. கட்டை – உயரம் எனின்,
(1) மரம் - தளபாடம் (2) கை – காப்பு (3) மெலிந்த – கொழுத்த

06. வயல் - மண்வெட்டி எனின்,
(1) மேசன் - தூக்குக்குண்டு (2) பட்டறை – புகைத்துருத்தி
(3) நெல் - சாக்கு

07. நேற்றைக்கு முந்திய தினம் சனிக்கிழமை 15 ஆம் திகதி எனின், எதிர் வரும் திங்கட்கிழமை எத்தனையாம் திகதியாகும்?
(1) 22 ந் திகதி (2) 24ந் திகதி (3) 19ந் திகதி

08. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் 200m தூரம் ஓட்டப்போட்டியில் கசான் 25, 20 செக்கன்களும், அமலன் 22, 59 செக்கன்களும், விமலன் 23, 40 செக்கன்களும் எடுத்தனர். அதன் படி போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?
(1) அமலன் (2) விமலன் (3) கசான்

09. வீதியின் இரு கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிட்டு வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 7 கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்கவிடப்பட்ட கொடிகள் எத்தனை?
(1) 14 (2) 12 (3) 16

10. ஒரு வரிசையில் ஆண்பிள்ளைகள் இருந்தனர். ஒருபக்கத்திலிருந்து கணக்கிடும் போது கண்ணன் 15 தாவதாகவும் மறு பக்கத்திலிருந்து கணக்கிடும் போது 8 வதாகவும் இருந்தான் எனின், வரிசையிலுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை?
(1) 23 (2) 24 (3) 22

11. பிள்ளையொன்று இரும்பு ஒரு கிலோக்கிராமையும், பஞ்சு ஒரு கிலோக்கிராமையும் தராசின் இரு பக்கத்திற்கும் ஒவ்வொன்றையும் இட்டார். அதன்படி கீழேயுள்ள வெளிப்பாட்டில் பிழையில்லாததைத் தெரிவு செய்க.
(1) இரும்புள்ள பக்கம் பாரம் கூடியது
(2) தராசின் இரு பக்கமும் சமனாகும்
(3) பஞ்சுள்ள பக்கம் பாரம் குறையும்

12. மூன்று வாழைப்பழத்தின் விலை 21 ரூபாய் எனின் ஆறு வாழைப்பழங்களின் விலை யாது?
(1) 36 ரூபாய் (2) 42 ரூபாய் (3) 54 ரூபாய்

13. ஒரு சதுர வடிவக் காணியில் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது 10 தூண்கள் இருந்தன எனின், அக்காணியிலுள்ள மொத்தத்தூண்கள் எத்தனை?
(1) 36 (2) 40 (3) 32



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



குட்டிக்கதை

## முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றிற்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகுநாட்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்குத் தந்தது.

இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு" எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?" எனக் கேட்டது.

"நான் ஏரியில் தங்கி இருந்தேன்" என்றது ஏரித் தவளை.

"ஏரியா? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி" என்றது ஏரித் தவளை.

கிணற்றுத் தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது" என்றது.

ஏரித் தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்ற தவளைகளும் நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து "நீ பொய்யன், புரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து" என்று கூறி ஏரித் தவளையைத் தாக்க முயன்றன.

அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, தோண்டித் தண்ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

- - முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது -

## எனது அம்மா



எனது அம்மாவின் பெயர் சுசி. அவர் மிகுந்த அன்பானர். என்னை குளிக்க வைத்து உணவு ஊட்டி என் தேவைகள் அனைத்தையும் செய்து தருபவர் என் அம்மா. எனக்கு பாடமும் சொல்லித் தருவார்.

எனக்கு கதை சொல்லி என்னை தூங்க வைப்பார். எனது அம்மா மிகவும் அழகானவர். எனக்கு நல்ல அறிவுரைகளையும் சொல்லித் தருவார்.

***வீ.சாளினி, தரம் - 03***
***திருகோணமலை***



***ஏபாத்திமா நபீனா, 04***
***இக்பால்நகர், நிலாவெ***

***கு.ஜகதாத்ரி, 05***
***கோபாலபுரம் த.வி***



## சிந்திக்க .. ..

முதல் குற்றத்தை
சரி என்று சாதிப்பவன்
இரண்டாவது குற்றத்தையும்
செய்தவனாகிறான்

## எழுத்தறிவு

'ஆனா' முன் எழுத வேண்டும்
'அம்மா' என்றெழுத ேண்டும்!
'ஆவன்னா' எழுத வேண்டும்,
'ஆமாம்' என்றெழுத ேண்டும்!

'ஈனா' முன் எழுத வேண்டும்
'இல்லை' என்றெழுத வேண்டும்!
'ஈயன்னா' எழுத வேண்டும்,
'ஈவாய்' என்றெழுத வேண்டும்!

கல்வியைக் கற்க வேண்டும்,
கற்றவை தெளிய வேண்டும்!
செல்வமாய்க் கருத வேண்டும்,
தேட்டமாய்க் கொள்ள வேண்டும்!

வெள்ளத்தால் அழிந்திடாது,
வேகாது நெருப்பினிலே!
கொள்ளார்கள் வேந்தர்கூட,
கொடுத்தாலும் குறைந்திடாதே!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு, கிண்ணியா)



## பொது அறிவு - 03

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

01. வழிநடத்தலில் முக்கியமாக கையாளப்படும் வளம் யாது? மனிதவளம்

02. மிக்க திரத்தன்மை வாய்ந்த சொத்து எது? காசு

03. வர்த்தக வங்கி மூலமாக பணம் அனுப்பும் பிரதான முறை யாது? வங்கி ஆணை

04. அமெரிக்காவில் அதிக கறுப்பினத்தவர்களைக் கொண்ட நாடு? ஹைத்திநாடு

05. தற்போது 2014 இல் விக்கிபீடியாவில் எத்தனை மொழிகள் செயற்படுகிறது?
283 மொழிகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சம்பூர்....

களும் ஸ்ரீமுருகன் வீதி, வெங்காயத் தோட்டம் ஆகிய பகுதிகளும் மீள் குடியேற்றத்திற்கான இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

காடுகளும் பற்றைகளும் வளர்ந்து பரம்பியுள்ள மேற்படி இடங்களில் உடனடியாகக் குடியேறுவதென்பது சாத்தியமற்றது என அங்கு சென்று திரும்பிய ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இன்று தொடக்கம் குறித்த இடங்களைத் துப்புரவு செய்வதற்கு அனுமதி அளிக்கப் - பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

2006ம் ஆண்டில் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்க்கப்பட்ட சம்பூர் மக்களில் பெரும்பாலானோர் மீண்டும் தமது இடங்களில் வாழ அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் அடக்கப்பட்டு சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அடையாளம் காணப்பட்ட அதிபாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தம்மைக் குடியேற்றுமாறு பல ஆண்டுகளாக மக்கள் போராடி வந்தும் அதற்கான அனுமதியைப் பாதுகாப்புத் தரப்பு மறுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் சனாதிபதித் தேர்தல் மேகங்கள் சூழ்ந்துள்ள இந்த நிலையில் திடீரென சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்ட இடங்களில் சுமார் 400 தொடக்கம் ஐநூறு பேர் மீளக் குடியமர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அடையாளம் காட்டப்பட்டள்ள இடங்களில் உள்ள வீடுகள் பெரும்பாலும் சிதிலமடைந்துள்ள நிலையில் இருப்பதாக மற்றொருவர் தெரிவித்தார். வீடுகளையும் நிலத்தையும் உரிமையாளர்களால் குத்துமதிப்பாகவே அடையாளம் காண முடிவதாகத் தெரிவித்த அவர் உடனடியாக மீளக் குடியமர முடியாது என்றே தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

## தமிழ் மக்கள்...

சுதந்திரத்தைக் காக்கவல்ல ஒருவரை இத்தேர்தலில் அடையாளம் கண்டு ஆதரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் சனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கத்தக்க தலைவர் யாரென அடையாளம் காண்பதற்காகப் பொய் வாக்குறுதிகளையும் பகட்டு நடவடிக்கைகளையும் தமது புத்திக் கூர்மையால் தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

எது எவ்வாறிருப்பினும் தனிமனிதச் சுதந்திரங்களில் முக்கியமானதொன்றான வாக்குச் சுதந்திரத்தை இத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் பிரயோகிக்க வேண்டும் என்வும் வாக்குகளை அழிக்கும் போது அவை செல்லுபடியற்றதாகி விடாது மிகக் கவனமாக வாக்களிக்க முயற்சிக்க வேண்டும் எனவும் தமிழ் சிவில் சமூகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## படகுப்...

இதேவேளை 29.12.2014 திடீரென படகு மூலம் பயணிப்பதை இராணுவத்தினர் தடைசெய்தனர். ,தன் போதே பயணிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

கிண்ணியா பிரதேசத்தில் எதிரணிகளின் பொது வேட்பாளர் மைத்ரிபால சிறிசேனவை ஆதரித்து இடம்பெறும் கூட்டத்திற்கு மக்கள் செல்வதைத் தடுப்பதற்காகவே இராணுவத்தினர் படகு சேவையை தடைசெய்துள்ளதாக பயணிகள் தெரிவித்தனர்.

## கிழக்கைத் துண்டாடும்....

செயலகப் பிரிவுகளை உருவாக்கும் திட்டமொன்றை முஸ்லிம் காங்கிரஸ் ஆளம் ஐக்கி மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குக் கையளித்திருந்ததை வெளிப்படுத்தியிருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சிற்கு கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்கும் எண்ணம் மட்டுமெ இருந்ததை அக் கட்சியின் செயலாளர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாவணம் வெளியானதைத் தொடர்ந்து கருத்தறிவித்த முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி அவ்வாறானதொரு திட்டப் பத்திரத்தைக் கிழக்கு மாகாண சபையின் உருவாக்கத்தின்போது அரசிடம் கையளித்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

" அம்பாறை மாவட்டத்தைத் துண்டாடும் எண்ணத்துடன் அவ்வாவணம் கையளிக்கப்படவில்லை. அப் பத்திரம் ஒரு நீர்த்துப்போன பத்திரம். நாங்கள் அதனை கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டபோது அரசிடம் கையளித்திருந்தோம். அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பேசும் பிரதேசங்களின் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்குப் போதுமான தமிழ் பேசும் அலுவலர்கள் அம்பாறையின் பிரதான நிர்வாக அலகில் இல்லாதிருந்ததால் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை நீக்கவே இவ்வாறானதொரு திட்டத்தை முன்வைத்திருந்தோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு அதிரடி..

பாதுகாப்பு ஆளணியினரைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் உள்ளன.

இந்நிலையில் தேசிய அரசியலில் இருந்து ஸ்ரீலங்கா முஸல்லிம் காங்கிரஸ் பிரிந்து எதிரண வேட்பாளருக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியதை அடுத்து கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படைப் பாதுகாப்பும் மீளப் பெறப்பட்டள்ளது.

ஆர்.எம் அன்வர், ஏ.எம். ஜமீல், நஸீர் அஹமட், சிப்லி பாறூக், மாகாண சபையின் பிரதித் தவிசாளர் சுபைர் ஆகியோரின் பாதுகாப்புக்கள் முற்றாக விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நஸீர் அஹமட் இற்கு வழங்கப்பட்டிருந்த மூன்று வாகனங்களும் கடந்த புதன்கிழமை இரவு முதல் மீளப் பெறப்பட்டுள்ளதாக அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம்.ஏ.எம். ஷருஜ் தெரிவித்தார்.

## லியோ கழக...

அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்திலும் நள்ளிரவு பூசை முடிவில் இனிப்பு பண்டங்கள் பரிமாறப்பட்டு கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்திட்டத்தை தொடர்ச்சியாக 3வது வருடமாகவும் நடாத்தியமை கழகத்தின் மாபெரும் வெற்றியாகும். லியோ கழகம் சார்பில் சுமார் 15 அங்கத்தவர்கள் வரை பங்குபற்றியமை முக்கிய விடயமாகும்.

## மாகாண சபை ஆட்.....

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஒத்துழைத்துச் செல்லும் நோக்கம் கொண்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தெரிவித்திருந்தார். எனினும் அதனைக் கருத்திற் கொள்ளாது மு.கா வின் முக்கிய உறுப்பினர்களான கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல், கிழக்கு மாகாண சபையின் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நஸீர் அஹமட் மற்றும் மாகாண சபை உறுப்பினர், பொறியியலாளர் சிப்லி பாறூக் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அவர்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இச்செயற்பாடானது கிழக்கு மாகாண சபை ஆட்சியில் முஸ்லிம் காங்கிரஸ் உடனான கூட்டை தவிர்க்கும் உபாணமாகவே கருதப்படுவதால் அடுத்த முறை மாகாண சபை கூடும் போது அதன் ஆட்சி கேள்விக்குறியாகி விடும் நிலையில் இருக்கின்றது.

## நிலாவெளி

நிலாவெளி பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தாங்கமுடியாதளவு அதிகரித்துள்ள நிலையில் அண்மையில் பிரதேச சபையால் இவ்விடயத்தை ஆராயவெனக் கூட்டமொன்று கூட்டப்பட்டுள்ளது.

காவல்துறையுடன் இணைந்து கூட்டப்பட்ட கூட்டமொன்றில் பிரதான வீதியில் உலவும் கட்டாக்காலிகள் வனசீவராசிகள் திணைக்களத்திடம் கையளிக்கப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அறிவித்தலொன்று நிலாவெளியின் பிரதான இடங்களில் ஒட்டப்பட்டுள்ள போதும் அவ்வாறு கட்டாக்காலிகள் திரியும் சந்தர்ப்பத்தில் யாருக்கு எப்படி தகவல் வழங்க வேண்டும் என்பதை அவ்வறிவித்தல் கொண்டிருக்கவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நிலாவெளி வைத்தியாலையின் நோயாளர் காவுவண்டி பழுதடைந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது

(சுபாஸ்)




## "அராஜக அரசு உதவிகளுக்குத் தடை"
### -த. கலையரசன்-

சர்வதேச நாடுகள் எமது உறவுகளுக்காக பல உதவிகளை செய்ய முன்வந்த போது, நாட்டின் அராஜக அரசாங்கத்தினை நடத்திவரும் இந்த அரசு எமது மக்களுக்கு எந்த அபிவிருத்திகளையும் செய்ய விடாமல் தடுத்த வரலாறுதான் இருந்து கொண்டு இருக்கின்றது என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரகாலத்திற்கு முன் கிழக்கு மாகாணத்திலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் சிக்கித் தவித்த அம்பாறை மாவட்ட மக்களுக்காக வேண்டி புலம்பெயர்ந்து வாழும் நீலன் அறக்கட்டளை நிதியமானது மூன்று இலட்சம் 'ரூபாய் நிதியினை உடனடி நிவாரன தேவையாக அனுப்பி வைத்ததன் பொருட்டு இந்நிகழ்வானது இடம்பெற்றது.

இந்நிகழ்வானது சேனைக்குடியிருப்பு கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன், செயலாளர் பா.புவிராஜ், கல்முனை மாநகரசபை உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், காரைதீவு பிரதேசசபையின் உறுப்பினர் பாஸ்கரன் மற்றும் முதியோர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாணசபை உறுப்பினர், புலத்தில் இருந்து கொண்டு இந்த நாட்டிலே வாழும் எமது உறவுகளுக்காகவேண்டி பல அமைப்புக்கள் பலவகையான உதவிக்கரங்களை நீட்டி வருகின்றது. அதில் ஒரு கட்டமே நீலன் அறக்கட்டளை நிதியத்தின் இந்த நிவாரண உதவியுமாகும் என்று தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவி ஆசை

## அண்ணன் எப்ப சாவான்: திண்ணை எப்ப காலியாகும்



கடந்தவற தொடர்ச்சி .. ..

**அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:**

நன்றி செலுத்தி வாழ்பவர்களுக்கு அல்லாஹ் அதற்குரிய பிரதி பலனை மிக விரைவில் வழங்குவான்' என்னும் (திருக்குர்ஆன் 03:144-ம்) இறை வசனத்தையும் ஓதினார்கள். உடனே மக்கள் (துக்கத்தால் தொண்டையடைக்க) விம்மியழுதார்கள்.


அன்சாரிகள் (தம்) 'பனூ சாஇதா' சமுதாயக் கூடத்தில் ஒன்று கூடி (தம் தலைவர்) ஸஅத் இப்னு உபாதா(வ) அவர்களிடம், 'எங்களில் ஒரு தலைவர் உங்களில் ஒரு தலைவர் (ஆக இருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம்' என்று முஹாஜிர்களிடம் சொல்வோம்)' என்று பேசிக் கொண்டார்கள். அப்போது அபூ பக்கர், உமர் இப்னு கத்தாப், அபூ உபைதா இப்னு ஜர்ராஹ்(வ) ஆகியோர் (ஆட்சித் தலைவரை முடிவு செய்ய) அன்சாரிகளிடம் வந்தனர். உமர்(வ) பேசப் போனார்கள். உடனே அவர்களை அபூ பக்கர்(வ) மௌனமாக இருக்கச் சொல்லிவிட்டார்கள். (இதைப் பிற்காலத்தில் நினைவு கூரும் போது) உமர் அவர்கள், 'அல்லாஹ்வின் மீதாணையாக! நான் பேச முயன்றது எதற்காக என்றால், நான் எனக்குப் பிடித்த பேச்சு ஒன்றைத் தயாரித்து வைத்திருந்தேன். அபூ பக்ர் அவர்கள் அந்த அளவிற்குப் பேச மாட்டார்கள் என்று நான் அஞ்சினேன். எனவேதான் நான் பேச முயன்றேன்' என்று கூறி வந்தார்கள்.

பிறகு, அபூ பக்கர்(வ) பேசினார்கள். மக்களிலேயே உரை நயம் மிக்கவர்களாக அவர்கள் பேசினார்கள். அவர்கள் தம் பேச்சில், '(குறைஷிகளாகிய) நாங்கள் ஆட்சித் தலைவர்களாயிருப்போம் (அன்சாரிகளான) நீங்கள் அமைச்சர்களாயிருங்கள்' என்று கூறினார்கள். உடனே, (அன்சாரியான) "ஹபாப் இப்னு முன்திர்(வ), 'இல்லை! அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் இதற்கு ஒப்புக் கொள்ள மாட்டோம். எங்களிடையேயிருந்து ஒரு தலைவரும் (தேர்ந்தெடுத்துக் கொள்வோம்) என்று கூறினார்கள். அதற்கு அபூ பக்கர்(ரலி), 'இல்லை நாங்களே தலைவர்களாயிருப்போம். நீங்கள் அமைச்சர்களாயிருங்கள். ஏனெனில், குறைஷிகள் தாம் அரபுகளில் சிறந்த ஊரை (மக்காவை)ச் சேர்ந்தவர்களும், சிறந்த செயல்திறன் மிக்கவர்களும் ஆவர். எனவே, உமர் இப்னு கத்தாப், அல்லது அபூ உபைதா இப்னு அல்ஜர்ராஹ்விற்கு (தலைமைக்கான) விசுவாசப் பிரமாணம் செய்யுங்கள்' என்று கூறினார்கள்.

தொடரும் .. ..




# பம்கின் ரோல்



**தேவையான பொருட்கள்**

மைதா மாவு - 3/4 கப், பேக்கிங் பவுடர் - 1/2 தே.கரண்டி, பேக்கிங் சோடா - 1/2 தே.கரண்டி, பட்டை தூள் - 1/2 தே.கரண்டி, கிராம்பு தூள் - 1/2 தே.கரண்டி, உப்பு - 1/4 தே.கரண்டி, முட்டை – 3, சீனி - 1 கப், பம்கின் கூழ் (pumpkin puree) - 2/3 கப், ஃபில்லிங் (Filling), க்ரீம் சீஸ் - 1 கப் (8 oz), ஐஸிங் சுகர் - 1 கப், பட்டர் - 6 மே.கரண்டி, வெனிலா - 1/2 தே.கரண்டி

**செய்முறை**

அவனை 375 Fக்கு முற்சூடு செய்யவும். பின் 15 x 10 ட்ரேயில் வாக்ஸ் பேப்பர் போட்டு, மேலே பட்டர் பூசி, மாத்தூவி வைக்கவும். சுத்தமான கிச்சன் டவலில் ஐஸிங் சுகர் தூவி வைத்துக்கொள்ளவும். மைதா மாவு, பேக்கிங் பவுடர், பேக்கிங் சோடா, உப்பு, பட்டை(சின்னமன்) தூள், கிராம்பு தூள் எல்லாவற்றினையும் ஒன்றாக கலக்கவும். பின்னர் முட்டை, சீனி இரண்டையும் எலக்ட்ரிக் மிக்ஸரால் நன்கு அடிக்கவும். பின்னர் பம்கின் கூழ் சேர்த்து, நன்கு அடிக்கவும். இறுதியில் மாவுக் கலவையை சிறிது சிறிதாக சேர்த்து கலக்கவும். இந்தக் கலவையினை ட்ரேயில் ஊற்றி, 15 நிமிடங்கள் பேக் செய்யவும்.

கேக் வெந்ததும், கிச்சன் டவலை மேலே விரித்து, ட்ரேயினை கவிழ்த்து வைக்கவும். மேலே லேயராக இருக்கும் பேப்பரினை மெதுவாக உரித்து எடுக்கவும். கிச்சன் டவலோடு சேர்த்து (ட்ரேயினை எடுத்திட்டு தான் சுற்றணும்), பம்கின் ரோலினை சுற்றி அப்படியே 30 நிமிடங்கள் விடவும். சூடு ஆறியதும் கிச்சன் டவலை எடுத்து விட்டு, ஒரு தட்டையான பலகையில் பம்கின் ரோலினை விரித்து வைத்து, ஃபில்லிங்கில் கொடுக்கப்பட்ட பொருட்களை ஒன்றாக மிக்ஸ் பண்ணி, கேக் மீது பூசவும்.

ஐஸிங் பூசி முடிந்ததும் மீண்டும் மெதுவாக சுற்றி, குளிர்சாதனப் பெட்டியில் 1 மணி நேரம் வரை வைக்கவும்.

# மிருதுவான பளபள சருமத்திற்கு

அழகுக் குறிப்பு

பேஷியல் என்பது நம் சருமத்தை பொலிவாக மட்டுமின்றி மிருதுவாகவும் வைப்பதற்காகவும் செய்யப்படுவதாகும். சருமத்தை அழகாக்குவதில் ஒயின், வோட்கா போன்றவை சிறப்பான இடத்தை பெறுகின்றன.





**வோட்கா பேஷியல்**

இரவில் படுக்கும் முன்பாக புதினா, தேனீர், எலுமிச்சை பழ சாறுடன் இரண்டு தேக்கரண்டி வோட்கா சேர்த்து குளிர்சாதன உள்பெட்டியில் (பிரீஸர்) பத்திரமாக வையுங்கள். காலையில் பார்த்தால் வோட்கா கலவை அப்படியே ஐஸ் கட்டியாக உறைந்திருக்கும்.

இதை வெளியே எடுத்து முகத்தில் 10 நிமிடம் தடவி வர வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் நீங்கும். இதை அடிக்கடி பூசிக்கொள்வதால் நாளடைவில் உங்கள் முகம் மிருதுவாவதை காணலாம்.

முகத்தில் உள்ள சுருக்கங்கள், பருக்களுக்கு இந்த பேஷியல் ஒரு சிறந்த மருந்து. வெயிலில் செல்லும் முன்பு இதை போட்டுக் கொண்டு சென்றால் சருமம் மாசுபடாமல் இருக்கும். இந்த பேஷியலை முடித்துவிட்டு உங்களை கண்ணாடியில் பாருங்கள். முகம் பளபளப்பதை கண்கூடாக பார்க்க முடியும்.



# 2015ம் ஆண்டிற்கான பலன்கள்

**மேஷம் :** ஜுலை மாதம் வரையில் உள்ள காலகட்டத்தில் செய்தொழிலில் எதிர்பார்த்த வருமானங்களைக் காண்பீர்கள். வீண் விரயங்களும் செலவுகளும் குறையத் தொடங்கும். உற்றார் உறவினர்களும் நண்பர்களும் உங்களின் தன்னம்பிக்கையை கூட்டுவார்கள். அவ்வப்போது உடலாரோக்கியத்தில் சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் வைத்தியத்தின் மூலம் சரியாகி விடும். அரசுவழிச் சலுகைகள் கிடைக்க சிறிது காலதாமதமாகலாம்.

**ரிஷபம் :** ஜுலை மாதம் வரையில் உள்ள காலகட்டத்தில் உங்கள் தயாள குணம் உயரும். செய்தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்களைக் காண்பீர்கள். உங்கள் எண்ணங்களை நறுக்குத் தெறித்தார் போல் பளிச் சென்று வெளிப்படுத்துவீர்கள். போட்டிகளை தைரியமாக எதிர்கொள்வீர்கள். அரசு ஊழியர்களிடம் உங்கள் தொடர்பு அனுகூலமான உறவுகளைக் கொண்டு சேர்க்கும். வேலைகள் அதிகரித்தாலும் சுறுசுறுப்புடன் செயல்பட்டு சரியாக செய்து முடித்துவிடுவீர்கள். உடன் பிறந்தோரிடம் இணக்கமாக பழகுவீர்கள். அதேநேரம் உடல்நலம் கவனிக்கப்பட வேண்டி வரும். யோகா, பிராணாயாமம் போன்றவைகளைச் செய்து பலன்களைக் கூட்டிக் கொள்வீர்கள்.

**மிதுனம் :** எண்ணிய எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறும். பெற்றோருக்கு திடீரென்று பணவரவு உண்டாகும். திருமணம் மூலம் புதிய நல்ல உறவினர்கள் கிடைப்பார்கள். வருமானம் சிறப்பாக இருக்கும். புதிய வீடு, நிலம் ஆகியவைகளை வாங்குவீர்கள். ஏழை எளியவர்களுக்கு உங்களாலான உதவிகளைச் செய்வீர்கள். மேலும் மகிழ்ச்சியான நாட்களை கொண்டாட அநாதை ஆசிரமங்களுக்குச் செல்வீர்கள். அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உங்களின் தந்திரப்புத்தியால் எதிரிகளை அடக்குவீர்கள்.

**கடகம் :** எதிர்வரும் பிரச்னைகளை நண்பர்களின் உதவியால் சமாளிப்பீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும். பொறுமையுடனும் நடத்து கொள்வீர்கள். உற்றார் உறவினர்கள் உங்கள் தயவை நாடி வருவர். உங்கள் மனவுறுதி கூடும். தொழிலில் மாற்றம் செய்ய முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல புதிய மாற்று வழிகள் புலப்படும். பணநடமாட்டம் சீராக இருக்கும். குழந்தைகள் உங்களை மகிழ்ச்சிபடுத்துவார்கள். புதிய பொறுப்புகளை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தவர்களுக்கு நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**சிம்மம் :** குடும்பத்தில் குழந்தை பிறப்பு உண்டாகும். செல்வ சேர்க்கை படிப்படியாக உண்டாகும். உங்கள் அந்தஸ்து கௌரவம் ஆகியவை கூடும். உங்களின் நம்பிக்கை பலப்படும். பிரச்னைகளை புரிந்துகொண்டு அதற்கேற்ப சிறப்பான அணுகுமுறைகளை கையாளுவீர்கள். மனதில் பட்டதை சுதந்திரமாக எடுத்துரைப்பீர்கள். செய்தொழில் முழுமையாக உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். சுறுசுறுப்புடன் பணியாற்றி உங்கள் குறிக்கோளை எட்டி விடுவீர்கள். பொதுவாழ்க்கையில் உள்ளவர்கள் எதிர்பார்த்த பதவிகளைப் பெறுவார்கள்.

**கன்னி :** நிர்வாகத் திறமையை பலரும் பாராட்டுவார்கள். உங்கள் முகத்தில் வசீகரம் கூடும். சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு நிதானமாகப் பேசுவீர்கள். வருமானம் படிப்படியாக வளரத் தொடங்கும். நெடுநாளாக போக விரும்பிய இடங்களுக்கு குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக பயணம் செய்வீர்கள். வாழ்க்கை தன் கட்டுப்பாட்டை இழந்து விட்டது என்று நினைத்திருந்தவர்கள் கற்பனைக்கும் எட்டாத உயரத்திற்குச் செல்வார்கள். குழந்தை இல்லாமல் தவித்தவர்களுக்கு மழலை பாக்கியம் கிடைக்கும்.

**துலாம் :** நீதி, நேர்மை எப்பக்கம் இருக்கிறதோ அப்பக்கம் சாய விரும்பும் துலாக் கோலாக வாழ்வில் செயல்படுவீர்கள். ஆரம்பமே சுப மங்களகரமாக அமையப் போகிறது. வருமானம் குறைவாக இருப்பதால் அடிக்கடி பணப்பற்றாக்குறைக்கு ஆளாக நேரிடலாம். சிலருக்கு கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம். எந்த பிரச்னையையும் எதிர்கொண்டு சமாளித்து வெற்றி காண்பீர்கள். பணத்தட்டுப்பாடு நீங்கிட அதிர்ஷ்டகரமாக வழி பிறக்கும்.

**விருச்சிகம் :** மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். குடும்பத்தில் இருந்து வந்த பின்னடைவுகள் மறையும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உங்களை புரிந்துகொள்ளாமல் இருந்தவர்கள் உங்கள் மேன்மையை அறிந்து சரணடையும் நிலை வரலாம். தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு.

**தனுசு :** நீங்கள் ஆன்மிக செயல்பாடுகளில் அதிகமாக ஈடுபடுவீர்கள். எந்த பிரச்னையையும் முறியடிக்கும் வல்லமையை உண்டு. பொதுவாக நிலையற்ற தன்மை காணப்படும். எந்தத்துறையானாலும் சாதிப்பீர்கள். பொருளாதாரச் சரிவை ஏற்படுத்துவார். வீண் விரோதத்தை உருவாக்குவார். இந்த நிலை ஜுலை துவக்கம் வரை தான். எந்த இடையூறுகள் வந்தாலும், அதை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். அதாவது சவாலுக்கு சவால் விடுவீர்கள்.

**மகரம் :** குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரித்து சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். செல்வாக்கு மேம்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். எண்ணற்ற வசதிகள் கிடைக்கும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். பொன், பொருள் கிடைக்கும். மகிழ்ச்சியும், ஆனந்தமும் வாழ்க்கை செழித்தோங்கும். படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். தடைப்பட்ட திருமணம் நிச்சயம் கைகூடும்.

**கும்பம் :** மதிப்பு, மரியாதையும், கவுரவமும் உங்கள் உடன் பிறந்தவை. இதனை விட்டு கொடுக்க மாட்டீர்கள். தொழிலில் சிறுசிறு பின்னடைவுகள் ஏற்படலாம். உடல் உபாதைகள் லேசாக நோக செய்யலாம். மனதில் தளர்ச்சியை ஏற்படுத்துவார். ஆனாலும் கவலை வேண்டாம். குருபகவானால் நன்மைகள் கிடைக்கும். இதனால் எந்த இடையூறையும் நீங்கள் முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**மீனம் :** பெரியவர்கள் மீது மரியாதை செலுத்துவதில் உங்களுக்கு நிகர் நீங்களே. உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்துவதில் சாமர்த்தியசாலியாக விளங்குவீர்கள். பொன், பொருள் சேர்ப்பீர்கள். திட்டமிட்டுச் செயல்பட்டு வாழ்வில் சாதனை புரிவீர்கள். பண வரவையும், வாழ்க்கை வளத்தையும், சுபங்களையும் தருவார். பிறருக்கு கட்டுப்பட்டு போகும் நிலையும் கூட உருவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## கிரிக்கட் பயிற்சிப்பட்டறை

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளில் 13, 15, 17, 19 வயது பிரிவு துடுப்பாட்ட வீரர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இதன் ஆரம்ப நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான றோசித ராஜபக்ஷ மற்றும் யாழ் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட அணிகளுக்கான பரிசுகளும் வெற்றிபெற்ற அணிகளுக்கான கேடயங்களும் வழங்கப்பட்டன.

## ஒலிம்பிக்கின் தொண்டர்கள் 240,000

Rio 2016

பிரேஸிலில் 2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தொண்டர்களாக கடமையாற்ற 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். ஒலிம்பிக் போட்டியை ஒழுங்கமைப்பதற்கான தொண்டர்களின் சேவை 1948ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. 7 ஆயிரம் தொண்டர்களின் உதவியுடன் ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது. ஒலிம்பிக்போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்களுக்கு உதவி புரிவது, மைதானம் பராமரிப்பது உணவு வழங்குவது போன்ற பல பணிகளில் இவர்கள் சிறந்த முறையில் கடமையாற்றினார்கள்.

பிரேஸில் ஒலிம்பிக்கில் தொண்டர்களாக கடமையாற்ற 191 நாடுகளிலிருந்து 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் 70 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

## தடைகளை தகர்த்தெறியும் கே.சி.சி

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்ட கழகங்களின் தரப்படுத்தலில் ஆதிக்கம் செலுத்தி வரும் கே.சி.சி.சி என்று அழைக்கப்படும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு கழகம், பலரின் அர்ப்பணிப்புக்கு மத்தியில் தன்னை தானே வளர்த்து கொண்டு வெற்றிப்பாதையில் பயணிக்கின்றது.

கே.சி.சி.சி கழகம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை வீரர்களுக்காகவோ அல்லது பயிற்சியாளருக்காகவோ வெளிக் கழகங்களை நாடிச்சென்றதில்லை. கொக்குவில் இந்து கல்லூரியிலிருந்து



வெளியேறிய, பாடசாலை அணியில் இடம்பிடித்திருந்த வீரர்களை தன்னகத்தில் வைத்து, தனது பயணத்துக்கான பாதையை அமைத்துக்கொண்டது. இந்நிலை தற்போதும் தொடர்கின்றது.

## 2014 இல் முதலிடத்தில் – சென்றலைட்ஸ் அணி

யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளை தரப்படுத்தும், ஜோர்ஜ் வெப்ஸ்ரர் தரப்படுத்தலில் 2014ஆம் ஆண்டுக்கான சிறந்த அணியாக 131.04 புள்ளிகளைப் பெற்ற சென்றலைட்ஸ் அணி பெற்றுக்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு துடுப்பாட்டத்தை 1898ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்திய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் அருட்தந்தையுமான ஜோர்ஜ் வெப்ஸ்ரர் ஞாபகார்த்தமாகவே இந்த தரவரிசை மேறகொள்ளப்படுவதுடன், வருடத்தில் சிறந்த அணிக்கு வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரு தமிழ் வீரர்கள் கனிஷ்ட கிரிக்கட் குழாமில்




இலங்கை, பங்களாதேஷ் நாடுகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் இம்மாதம் நடைபெறவுள்ள இரண்டு நாள் கிரிக்கெட் தொடர்கள் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர்களை முன்னிட்டு 31 வீரர்கள் கொண்ட இலங்கையின் முன்னோடி கிரிக்கெட் குழாம் பெயரிடப்பட்டுள்ளது.



கனிஷ்ட தேசிய தெரிவாளர்களினால் பெயரிடப்பட்டுள்ள இக் குழாமில் வட பகுதியைச் சேர்ந்த செய்ன்ற் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பரமானந்தம் துவாரகசீலன், செபமாலைப்பிள்ளை ப்ளெமின் ஆகிய இருவரும் வட பகுதியிலிருந்து 19 வயதுக்குட்பட்ட இலங்கை குழாமில் இடம்பிடித்துள்ளவர்களாவர்.

## மகேந்திர சிங் தோனி ஓய்வு




டெஸ்ட் போட்டியில் இருந்து மகேந்திர சிங் தோனி ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வாரியம் திடீரென அறிவித்துள்ளமை ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாக விளையாடுவதால் அவரது உடல் ஒத்துழைக்கவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் சுமை அதிகம். அதனால் இதுவே சரியான நேரம் என்று கருதி ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளாராம்.

## உலக கிண்ணம் வேண்டாம்

உலகக் கிண்ண தொடருக்கான 30 பேர் கொண்ட குழுவில் இருந்து சைட் அஜ்மல் விலகியுள்ளார். சைட் அஜ்மல், பந்தை வீசி எறிகின்றார் என்ற குற்றச்சாட்டு காரணமாக சர்வதேசப் போட்டிகளில் இருந்து தடை செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து பந்துவீச்சு மாற்றங்களை செய்து, மீண்டும் பந்து வீச தயாராகி, சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் மீள் பரிசோதனைக்கு விண்ணப்பிக்க போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.

## கோட்டை விட்ட சங்கா




ஒரு வருடத்தில் அதிகூடிய ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை 21 ஓட்டங்களால் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தவறவிட்டுள்ளார். குறித்த சாதனை தற்சமயம் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங்கிடம் இருக்கிறது.

ஒரு வருடத்தில் அனைத்துவிதமான போட்டிகளிலும் 2,833 ஓட்டங்களை 2005ஆம் ஆண்டு ரிக்கி பொன்டிங் பெற்றுக்கொண்டமையே இதுவரை சாதனையாக இருந்து வருகிறது. இந்த சாதனையை குமார் சங்கக்கார முறியடிப்பார் என எதிர்பார்த்த வேளையில், 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

2,813 ஓட்டங்களை இதுவரை சங்கக்கார பெற்றுள்ளார். இன்னமும் 21 ஓட்டங்கள் பெற்றிருந்தால் பொன்டிங்கின் சாதனையை சங்கக்கார முறியடித்திருப்பார்.

## ஹொக்கியில் முன்னணி

ஆசிய விளையாட்டின் ஹொக்கி போட்டியில் இலங்கைக்கு எதிரான முதல் ஆட்டத்தில் இந்திய ஹொக்கி அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆடவர் ஹொக்கியில் மொத்தம் 10 அணிகள் இடம் பெற்றுள்ளன. இதில் 'பி' பிரிவில் அங்கம் வகிக்கும் இந்தியா நேற்று தனது தொடக்க ஆட்டத்தில் இலங்கையை சந்தித்தது.

இந்திய அணியில் ருபிந்தர் பால் சிங் ஹாட்ரிக் கோல் அடித்து அசத்தினார். ரமன்தீப்சிங், நிக்கின் திம்மையா, ரகுநாத், சிங்லென்சனா சிங் ஆகியோரும் கோல் அடித்து இந்திய அணியின் வெற்றிக்கு உதவினர்.

ஆட்டத்தை 70 நிமிடத்தில் இருந்து 60 நிமிடமாகக் குறைத்தது, நான்கு பிரிவுகளாக பிரித்தது போன்ற புதிய விதிமுறைகள், இந்திய வீரர்களுக்கு சாதகமாக அமைந்தது.

இதே போல் 8 அணிகள் இடையிலான மகளிர் ஹொக்கிப் பிரிவில் 'ஏ' பிரிவில் இடம் வகிக்கும் இந்திய அணி 02.01.2015 அன்று தாய்லாந்துடன் தனது முதல் சவாலை தொடங்கியது.



## அச்சத்தில் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. மூன்று டெஸ்ட் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இந்திய அணி தொடரை பறி கொடுத்துள்ளது. இருந்த போதிலும் அபார துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும் விராட் கோஹ்லியால் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர் விராட் கோஹ்லி இதுவரை 3 சதங்களுடன் 499 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இவ்வாண்டின் முதல் போட்டி



இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் 03.01.2015 ஆரம்பமாகும் 2 ஆவது டெஸ்ட் போட்டி இவ்வாண்டின் முதலாவது டெஸ்ட் போட்டியாக கிரிக்கெட் நாட்காட்டியில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டி நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை நியூசிலாந்தின் வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது.

இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என முன்னிலைபெற்றுள்ளது.

இதையடுத்து நியூசிலாந்து அணிக்கெதிராக 7 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி கிறைஸ்ட்சேர்சில் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபையின் ஆட்சி?



கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்கள் மூவருக்கு காவல்துறையால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் கிழக்கு மாகாண சபையின் ஆட்சி ஆட்டம் காணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தேசிய அரசியலில் ஆளும் கட்சிக் கூட்டணியில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விலகினாலும் கிழக்கின் மாகாணசபையின் ஆட்சிக்கு ஆளும்

17

## நிலாவெளியில் அதிகரிக்கும் கட்டாக்காலிகளின் தொல்லை.....

### விபத்தில் காவலதிகாரி படுகாயம்

நிலாவெளி பிரதான வீதியில் கடந்த 1ம் திகதி இரவு காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் கட்டாக்கால் கால்நடையுடன் மோதுண்டு கடும் காயத்திற்கு உள்ளாகியுள்ளார்.

காயமடைந்த அதிகாரி உடனடியாக நிலைவெளி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிகச் சிகிச்சைகளுக்காக குச்சவெளியிலிருந்து வருகை தந்திருந்த நோயாளர் காவு வண்டியில் திருகோணமலைப் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

17



# தேர்தலில் வாக்களிக்கும் முறை


2015 ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித்தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர். எனவே உங்களுக்கு மூன்று பேருக்கு வாக்களிக்க வாயப்பு உள்ளது. முதலாவது தெரிவை வாக்காகவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தெரிவுகளை விருப்பு வாக்காகவும் அளிக்கலாம்.

வாக்களிக்கும் முறை வருமாறு: (1) என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது வாக்கை அல்லது முதலாம் விருப்பை அளிக்க முடியும். (2) என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது இரண்டாம் விருப்பை அளிக்க முடியும். (3) என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது மூன்றாம் விருப்பை அளிக்க முடியும்.

ஒருவருக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க விரும்பினால் (1) ஒருவாக்கை மட்டும் அளிக்கலாம். ஏனைய இரண்டையும் விட்டு விடலாம்

# தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்

## திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமைப்பு வேண்டுகோள்




தமிழ் மக்கள் அனைவரும் தமது விருப்பு வெறுப்பக்களுக்கு ஏற்பவேனும் எதிர்வரும் தேர்தலில் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூக அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலானது மிக முக்கியமானதொரு தேர்தலாகும். அத் தேர்தலில் மக்கள் தமது அறிவுக்கு எட்டிய வரைக்கும் ஆராய்ந்து யாரைத் தேர்ந்து எடுப்பது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூகம் மக்கள் தமது அடிப்படைச்

17

## லியோ கழக புதுவருடக் கொண்டாட்டம்

கிறிஸ்துமஸ் தினத்தையும், புதுவருட தினத்தையும் முன்னிட்டு திருகோணமலை நகர லியோ கழகத்தின் செயற்திட்டங்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்துமஸ் தினத்தன்று பற்றிமா வீதியிலுள்ள புனித மரியாள் தேவாலயத்திலும் புதுவருட தினத்தன்று உப்புவெளியில்

17

## படகுப் பயணத்திற்குப் படையினர் திடீர் தடை

வெள்ள நீர் பாய்ந்து செல்லும் மூதூர்- கிண்ணியா வீதியை படகு மூலம் கடப்பதற்கு ,ராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து 29.12.2014 காலை 10.00 மணியளவில் இராணுவத்திற்கும் பயணிகளுக்குமிடையில் சிறு முறுகல் ஏற்பட்டது.

மூதூர்- கந்தளாய் வீதி வெள்ளப்பெருக்கினால் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மூதூர் – கிண்ணியா வீதியில் வெள்ள நீர் பாய்ந்து செல்லும் பகுதியை மக்கள் படகு மூலம் கடந்து வந்தனர்.

17

## திடீர் சந்திப்பு

மூதூர் கிழக்குப் பிரதேச மக்களைத் திடீரெனச் சந்தித்த கிழக்கு மாகாண முதல்வர் அம் மக்கள் எதிர்கொள்ளும் குறைகளைக் கேட்டறிந்-துள்ளார். தேர்தல் காலத்தில் விசேட போக்குவரத்து வசதிகள் மூலம் அழைத்து வரப்பட்ட மக்களுடன் சந்திப்பொன்று ஏன் திடீரென ஏற்படுத்தப்பட்டது என்பதையிட்டு மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

## கட்டைப்பறிச்சான் இடைத்தங்கல் முகாமில் விசேட கூட்டம்???

இடைத்தங்கல் முகாம் தலைவர்கள் அனைவரையும் சந்திப்பதற்கான கூட்டமொன்றை அம்பாறையின் பிரதம பிக்கு இன்று ஏற்பாடு செய்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

சம்பூரில் திடீரென மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கையின் போது அங்கு வருகை தந்திருந்த மேற்படி பிக்கு சனாதிபதியுடன் நேரடியாகக் கதைத்து இம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை தானே முன்னெடுத்தாக மக்களிடம் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் இன்று அவரது தலைமையில் ஆளும் கட்சியின் உயர் அரசியல் பீட உறுப்பினர் ஒருவர் உட்பட கூட்டமொன்று கட்டைப்பறிச்சான் இடைத்தங்கல் முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அக் கூட்டத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.



## த.தே.கூ உறுப்பினரது பாதுகாப்பும் நீக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலையரசன் மற்றும் மு.இராஜேஸ்வரனின் ஆகியோரின் காவல்துறைப் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஆறு நாட்களே இருக்கும்வேளையில் இவர்களின் பொலிஸ் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டள்ளது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதேவேளை திருகோணமலை மாவடவ்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்பு இச்செய்திணை எழுதும் வரை மீளப் பெறப்படவில்லை.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபாலவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை தெரிவித்துள்ள நிலையில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்பு மீளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 03.01.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது